தொடரும்



பக்கம் 07


# உதயன்

பக்கங்கள்

யாழ். - 20/=
வன்னி - 20/=

தெளிவான வானிலை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று km/h
ஈரப்பதம்: 48%
காற்றமுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04

சுடர்: 29 கதிர்: 269 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆவணி 6, வெள்ளி 22.08.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily


# ஐ.நா. விசாரணைக் குழு குறித்த அரசின் முடிவில் மாற்றமில்லை

## பான் கீ - மூனின் கருத்துக்கு அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பதில்

கொழும்பு, ஓக.22
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் நியமித்துள்ள விசாரணைக் குழுவினருக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் இலங்கையிடம் கோரிக்கை விடுத்துள்ள நிலையில், சர்வதேச விசாரணை குறித்த இலங்கையின் நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் ஏற்படப்போவதில்லை என்று இலங்கை அரசு நேற்றுத் திட்டவட்டமாகத் தெரிவித்தது.

மருதானையில் அமைந்துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அக்கட்சியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"ஊவா மாகாண சபைத் தேர்தலுக்கான அனைத்து பரப்புரை நடவடிக்கைகளும் செப்ரெம்பர் மாதம் 17 ஆம் திகதியுடனேயே நிறைவடைகின்றன. அதற்குள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொள்ளும் இரண்டு மாபெரும் பரப்புரைக் கூட்டங்கள் பதுளை மற்றும் மொன ராகலை மாவட்டங்களில் நடைபெறவுள்ளன." என்றார்.

அதேநேரத்தில், ஊவா பரணகமவில் புதிதாக 'காபெட்' இடப்பட்டுள்ள வீதிகளில் எதிர்க் கட்சி வேட்பாளர்கள் சிலர் தமது சின்னத்தையும் கட்சியின் சின் னத்தையும் வரைந்து தேர்தல் விதி முறைகளை மீறியுள்ளதாகவும் அமைச்சர் குற்றம் சுமத்தினார்.

❖ 22 ஆம் பக்கம் பார்க்க

## இலத்திரனியல் அடையாள அட்டை தனிநபருக்கு அச்சுறுத்தல்

*அஜித்குமார எம்.பி. குற்றச்சாட்டு*

கொழும்பு, ஓக.22
அரசு நடைமுறைப்படுத்தவுள்ள இலத்திரனியல் அடையாள அட்டை முறையானது தனிநபர் பாதுகாப்புக்கும், சுதந்திரத்துக்கும் பெரும் அச்சுறுத்தலாக அமையும் என்று நேற்று நாடாளுமன்றில் சுட்டிக்காட்டிய நாடாளுமன்ற உறுப்பினர் அஜித்குமார, மனிதனுக்குப் பொருத்தப்படும் சீ.சீ.டி.வி. கமராவாகவே அது அமையும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த முறைமையை அரசு நடைமுறைப்படுத்துவதன் பின்னணியில் பெரும் திட்டங்கள் இருப்பதாகவும் தனிநபர்களின் அனைத்துத் தகவல்களும் அம்பலமாகும் அபாயமுள்ளது என்றும் அவர் கூறினார்.

உத்தேச இலத்திரனியல் அடையாள அட்டை தொடர்பில் சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையைச் சமர்ப்பித்து அது மீதான விவாதத்தை ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-
தற்போது நடைமுறையிலுள்ள அடையாள அட்டையில் பெயர், பிறப்பு விவரம், புகைப்படம் போன்ற தகவல்கள் இருக்கின்றன. எனினும்,

❖ 19 ஆம் பக்கம் பார்க்க




வடக்கு மாகாண சபையின் முன்பாக நேற்று கடற்றொழில் டிப்ளோமா பட்டதாரிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். தமக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படவில்லை என்று தெரிவித்தே அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

(மேலதிக விவரங்கள் 3ஆம் பக்கத்தில்)

## விபத்தில் ஒருவர் சாவு

கிளிநொச்சி, ஓக்.22
துணுக்காய், கொத்தம்பியான் குளம் பகுதியில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார். விபத்தில் உயிரிழந்தவர் 21 வயதுடைய சந்திரசேகரன் நிமலன் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். 38 வயதுடைய மாணிக்கம் கெங்காதரன் என்பவர் காயமடைந்துள்ளார்.

வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியோரம் இருந்த வீதிச் சமிக்ஞை கம்பத்தில் மோதியே விபத்து ஏற்பட்டுள்ளது.

காயமடைந்தவர் மல்லாவி மருத்துவனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் மல்லாவி மருத்துவனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(ற-18)

## மாகாண சபை அமர்வில் நேற்று ஈ.பி.டி.பிக்கு அஸ்மின் சாட்டையடி

யாழ்ப்பாணம், ஓக. 22
ஒரே இனத்தின் மற்றொரு தரப்புடனேயே இணக்கப்பாட்டுடன் செயற்பட முடியாத நீங்கள் மற்றொரு இனத்துடன் எப்படி இணக்கப்பாட்டைச் செய்வீர்கள் என்று கேள்வியெழுப்பி ஈ.பி.டி.பியினருக்குச் சாட்டையடி கொடுத்தார் ஆளுங் கட்சி உறுப்பினர் அஸ்மின்.

வடக்கு மாகாணசபையின் நேற்றைய அமர்வில், வறட்சி தொடர்பிலான பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"தீமைகள் ஆட்சி செய்கின்ற போது இறைவனிடமிருந்து சோதனைகள் வரும். அப்போது தீயவர்களின் கொடும்பாவிகள் எரிக்கப்படுவது வழமை. அதைப் போன்று இந்த தேசத்திலும் சிலரது கொடும்பாவிகள் எரிக்கப்பட வேண்டியிருக்கின்றது.

எதிர்க்கட்சி சார்பில் எதிர்கட்சித் தலைவர் மாத்திரம் தொடர்ந்து

❖ 22 ஆம் பக்கம் பார்க்க

## சிங்களவரின் வாக்குகளை கவர்வதே அரசின் நோக்கம்

### மனித உரிமைகள் கண்காணிப்பகம் கடுமையாகச் சாடுகின்றது



கொழும்பு, ஓக.22
இலங்கையில் நடைபெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்பவர்களுக்கு அனுமதி வழங்குவதில்லை என்ற மஹிந்த ராஜபக்ஷ அரசின் நிலைப்பாடானது, அதன் சிங்கள வாக்காளர்கள் மத்தியிலான ஆதரவை அதிகரிப்பதை நோக்காகக் கொண்டது - இவ்வாறு தெரிவித்துள்ளார் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஆசியாவுக்கான ஆலோசனை இயக்குநர் ஜோன் சிவ்டன்.

போர்க்குற்றங்கள் குறித்து விசாரணை மேற்கொள்வது மற்றும் பொறுப்புக் கூறுவது தொடர்பாக இலங்கை அரசு உண்மையில் எந்தவித அக்கறையை யும் வெளிப்படுத்தவில்லை. அதன் காரணமாக ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு ஆச்சரியம் அளிக்கவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

"அவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றும் சூழலில் செயற்படுகின்றனர். அவர்களது பெரும் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றன என்பதை நம்பவில்லை. தாம் செய்தது

❖ 22 ஆம் பக்கம் பார்க்க

## இனப்படுகொலையில் இருந்து பாதுகாக்குமாறு கோரப்பட்ட பிரேரணை ஒத்திவைக்கப்பட்டது

### நேற்றைய வடக்கு மாகாண சபை அமர்வில்

யாழ்ப்பாணம், ஓக. 22
வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில், இனப்படுகொலையில் இருந்து தமிழ் மக்களைப் பாதுகாக்குமாறு கோரி முன்வைக்கப்பட்ட பிரேரணை ஒத்திவைக்கப்பட்டதுடன், ஐ.நா மனித உரிமைகள் சபையிடம் கோரிக்கை விடுக்கும் வகையில் அமைந்த இரு பிரேரணைகள் கைவிடப்பட்டுள்ளன.

மேற்படி பிரேரணைகள் அவையில் விவாதத்திற்கு எடுக்கப்பட்டவுடனேயே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபையிலிருந்து வெளிநடப்புச் செய்திருந்தனர். அதையடுத்து ஆளுங் கட்சி உறுப்பினர்களாலேயே, இரு பிரேரணைகளும் கைவிடச் செய்யப்பட்டதுடன் மற்றைய பிரேரணையும் ஒத்திவைக்கச் செய்யப்பட்டது.

வடக்கு மாகாண சபையின் 14 ஆவது அமர்வு கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்

❖ 22 ஆம் பக்கம் பார்க்க

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



ஊவா மாகாண சபைத் தேர்தலை முன்னிட்டு பரணகம பகுதியில் அமைக்கப்பட்டிருந்த ஐ.தே.கவின் அலுவலகம் நேற்று அதிகாலை 3 மணியளவில் இனந்தெரியாதோரால் தீவைத்து எரிக்கப்பட்டுள்ளது. அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோ ஒன்றும் தீயால் நாசமாகியுள்ளது. தீயால் அருகிலுள்ள கடையின் ஒரு பகுதியும் அழிவடைந்துள்ளது. இதனை ஆளுங் கட்சியே மேற்கொண்டுள்ளது என்று ஐ.தே.க குற்றஞ்சாட்டியுள்ளது. (ற-4)

# ஜே.ஆரை நெருங்கக்கூடிய தலைவர்கள் யாருமில்லை

## அமைச்சர் சம்பிக்க கூறுகிறார்

கொழும்பு, ஓக.22

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவை நெருங்கக் கூடிய அறிவார்ந்த தலைவர்கள் எவரும் இலங்கையில் இன்னும் உருவாகவில்லை என்று கூறியுள்ளார் அமைச்சர் சம்பிக்க ரணவக்க.

கலாநிதி குணதாச அமரசேகர எழுதிய இரண்டு புத்தகங்கள் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டன. அந்த வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.



இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"ஜே.ஆர். ஜெயவர்த்தன இலங்கையில் திறந்த பொருளாதாரத்தை அறிமுகப்படுத்தி 4 வருடங்களில் விரைவான அபிவிருத்திக்கான பாதையை திறந்தார்.

அதன் பலாபலன்களை இலங்கையின் மனித வளம் பெறக் கூடியதாக இருந்தது. ஆயினும் ஜே. ஆருக்கு பின்னர் ஆட்சிக்கு வந்தவர்கள் இந்த திறந்த பொருளாதார முறைமையை சரியாக முகாமைத்துவம் செய்யாத காரணத்தால், இலங்கை பொருளாதார ரீதியாக பாதாளத்திற்குள் சென்றது. இன்று இலங்கையின் மனித வளத்தில் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது"- என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற)

# போலி கடனட்டை மூலம் விஸ்கி கொள்வனவு; இருவர் கைது

கொழும்பு, ஓக.22

போலியான கடனட்டைகள் மூலம் விஸ்கி போத்தல்களைக் கொள்வனவு செய்த மலேசியப் பிரஜைகள் இருவர் குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாரால்கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 5 விஸ்கிப் போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அவற்றின் மதிப்பு ரூபா 48 இலட்சத்து 60 ஆயிரம் ரூபா என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது குறித்த மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற)

# எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் நிறுத்தப்படுவார்


## மாதுளவாவே சோபித தேரர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.22

நீதியான சமூகத்துக்கான இயக்கம் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்குத் தீர்மானித்துள்ளது என்று தெரிவித்துள்ள அந்த இயக்கத்தின் ஏற்பாட்டாளர் மாதுளவாவே சோபித தேரர், எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் தனது பரப்புரையை ஆரம்பிக்க உள்ளதாகவும் கூறியுள்ளார்.

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையை ஒழிப்பதை மையமாகக் கொண்டே தனதுபரப்புரைஅமையும்என்று தெரிவித்துள்ள சோபித தேரர், அந்தக் கொள்கையை ஆதரிக்கும் கட்சிகள் தன் பின்னால் அணிதிரளும் என்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கோட்டை ஸ்ரீநாக விகாரையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தின் பின்னரே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்



றும், பொது வேட்பாளர் தொடர்பில் சமூகத்தின் சகல தரப்பினருடனும் பேச்சு நடத்தப்படவுள்ளது என்றும் சோபித தேரர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# நுழைவிசைவு மோசடி; பெண்கள் மூவர் கைது

கொழும்பு, ஓக.22

மோசடியான முறையில் பிரிட்டன் நுழைவிசைவை (விசா) பெற்றுக்கொள்ள முயற்சித்த இலங்கைப் பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

42 வயதான பெண்ணும், வயதுக்கு வந்த அவரது இரண்டு புதல்விகளும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

போலியான ஆவணங்களைச் சமர்ப்பித்து நுழைவிசைவுக்கு விண்ணப்பித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. 2005ஆம் ஆண்டில் பெயர்கள் மற்றும் பிறந்த திகதிகளைத் தவறாக பயன்படுத்தி இவர்கள் பிரித்தானிய நுழை விசைவுக்காக விண்ணப்பித்துள்ளனர். குறித்த மூன்று பேரினதும் நுழை விசைவு விண்ணப்பங்கள் நிராகரிக் கப்பட்டுள்ளதுடன் பத்தாண்டு காலம் பிரிட்டனுக்குள் பிரவேசிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக குறித்த மோசடியில் ஈடுபட்ட பெண்களுக்கு எதிராக இலங்கை நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட உள்ளது என்றும் பிரிட்டன் தூதரகம் தெரிவித்துள்ளது. (ற)

# வறுமைக்கு அரசு பொறுப்பல்ல

## அமைச்சர் ஜகத் புஷ்பகுமார தெரிவிப்பு

கொழும்பு, ஓக.22

வறிய மக்கள் எந்தப் பிரதேசத்திலும் இருப்பார்கள். அதற்காக அரசின் மீது குற்றம் சுமத்த முடியாது என்று தெரிவித்துள்ளார் அமைச்சர் ஜகத் புஷ்ப குமார.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,



"சில நபர்களின் கைகளில் பணம் இருந்தாலும் அதனை சரியாக முகாமைத்துவம் செய்வதில்லை. அதனால் அவர்கள் வறியவர்களாக மாறி விடுகின்றனர். அடுத்த சில வருடங்களில் ஊவா மாகாணம் வறிய மக்கள் இல்லாத மாகாணமாக மாற்றப்படும்.

அரசியல் இலாபம் பெறுவதற்காக சிலர் ஊவா மாகாணத்தை வறியவர்களின் மாகாணமாக காட்ட முயற்சித்து வருகின்றனர். ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தை விட உயர்ந்த வாழ்க்கை மட்டத்தில் ஊவா மக்கள் இருக்கின்றனர்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# புத்த சாசனத்தைப் பாதுகாக்க வீதியில் இறங்கிப் போராடுவேன்

## இப்படிக் கூறுகின்றார் ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, ஓக.22

புத்தசாசனத்தை பாதுகாப்பதற்காக வீதியில் இறங்கிப் போராடத் தயார் என்று எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்ரம சிங்க தெரிவித்துள்ளார்.

அரசு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க தயாராகி வரும் பௌத்த விகாரை மற்றும் ஆலயங்கள் தொடர்பான சட்டமூலத்தால் பௌத்த சாசனத்திற்கு எந்த நன்மையுமில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உத்தேச சட்டமூலம் தொடர்பில் கோட்டை நாக விகாரையில் நேற்று நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

"மகாநாயக்க தேரர்கள் முன்வைத்துள்ள திருத்த யோசனைகளை உள்ளடக்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால் கட்சி என்ற வகையில் பௌத்த சாசனத்தை பாதுகாக்க நாம் வீதியில் இறங்கிப் போராட வேண்டிய நிலைமை ஏற்படும்"- எனவும் ரணில் விக்ரம சிங்க குறிப்பிட்டுள்ளார். (ற)

# அமெரிக்காவில் நடப்பதை விட்டுவிட்டு இலங்கையை மட்டும் ஏன் குறிவைக்கிறீர்கள்?

## கேள்வி எழுப்புகிறார் பாலித கோஹன்ன

கொழும்பு, ஓக.22

அமெரிக்காவில் தற்போது கலவரங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பலர் கைது செய்யப்படுகின்றனர். அவை குறித்து சர்வதேச விசாரணைகள் நடத்தப்படுமா? சிறிய இலங்கையை மட்டும் ஏன் குறிவைத்து விசாரணை செய்கிறீர்கள்? - இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கைத்தூதுவர்பாலிதகோஹன்ன.

பொருளாதார வளர்ச்சி மற்றும் நல்லிணக்கத்தை நோக்கி நாம் வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கின்றோம். அவற்றைக் குழப்புவதற்கு விரும்புவோரை ஐ.நா. விசாரணை மேலும் வலுப்படுத்தும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

"இவ்வாறான விசாரணைகள் எதுவும் இடம்பெற வேண்டும் என்று இலங்கைக்குள் இருந்து கோரிக்கைகள் எதுவும் எழவில்லை.நாட்டின்பெரும்பான்மையான மக்கள் இந்த விதமான விசாரணைகளை ஒரு போதும் ஆதரிக்க மாட்டார்கள்.

இலங்கையை வேண்டுமென்றே நீதியற்ற விதத்தில் இலக்கு வைக்கிறார்கள். ஈராக், சிரியா, ஆப்கன், அமெரிக்காவில் என்ன நடைபெறுகிறது என்பதை கண்டறிவதற்கு எத்தனை விசாரணைகள் இடம் பெறுகின்றன?



அமெரிக்காவின் மிசூரியில் தற்போது கலவரங்கள் இடம் பெறுகின்றன. பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இது குறித்து சர்வதேச விசாரணைகள் இடம்பெறுமா?. ஏன் சிறிய இலங்கையை மாத்திரம் விசாரணை செய்கின்றனர்"- என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

பக்கங்கள்: இருபத்துநான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர்: 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆவணி 06 வெள்ளிக்கிழமை (22.08.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 269

# விசாரணைக்கு தகவல்களை இலங்கையிடம் பெற முயற்சி

## ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் தெரிவிப்பு

கொழும்பு, ஓகஸ்ட் 22

**இலங்கை அரசுக்கு விசாரணைகளுக்கான தகவல்களை வழங்குமாறு தொடர்ந்தும் அழைப்பு விடுப்போம் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகம் தெரிவித்துள்ளது.**

**வைஸ். கொம் என்ற இணைய தளத்துக்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகப் பேச்சாளர் ரவீனா சம்சடானி கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.**

இலங்கை அரசு ஐ.நா. விசாரணைக்குழுவுடன் ஒத்துழைப்பதில்லை என்ற முடிவை மறுபரிசீலனை செய்யும் என எதிர்பார்க்கிறோம். இலங்கை அரசுக்கு விசாரணைகளுக்கான தகவல்களை வழங்குமாறு தொடர்ந்தும் அழைப்பு விடுப்போம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை -

இலங்கையை ஐ.நா. தீர்மானத்துக்கு முழுமையாக ஒத்துழைக்குமாறு தொடர்ந்தும் வலியுறுத்தப் போவதாக ஐ.நாவுக்கான பிரிட்டனின் தூதுக்குழுவினர் குறித்த இணையத்தளத்துக்குத் தெரிவித்துள்ளனர்.

(த-சி)

## மீன்பிடித்துறை பட்டதாரிகள் போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக. 22

மீன்பிடித்துறையில் பட்டப்படிப்பை நிறைவு செய்த 60 பட்டதாரிகள் நேற்று வட மாகாண சபை செயலகத்தின் முன்னால் தமக்கான நிரந்தர நியனம் கோரியும், தமது வாழ்வாதார நிலைமைகளை எடுத்துக் கூறியும் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தினர். தமது பிரச்சினைகளுக்கான மனுக்களையும் அவர்கள் கையளித்தனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் மீன்பிடியியல் விஞ்ஞானத்துறையில் டிப்ளோமா பட்டப்படிப்பை நிறைவு செய்த 60 பட்டதாரிகள் தமக்கான நிரந்தர வேலை வாய்ப்பைக்

(22ஆம் பக்கம் பார்க்க)

## வறட்சித் தணிப்பு நடவடிக்கைகளில் மாகாண அரசையும் இணையுங்கள்

### நேற்றைய அமர்வில் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக. 22

வறட்சி தணிப்பு நடவடிக்கைகளில் மாகாண அரசையும் இணைத்து மத்திய அரசு செயற்படவேண்டும் என்று வடக்கு மாகாணசபை நேற்றுக் கோரிக்கை விடுத்தது.

தனித்து மத்திய அமைச்சர் மற்றும் மாவட்ட அரச அதிபர் ஆகியோர் நடவடிக்கை எடுப்பதை விடுத்து இணைத் தலைமை என்ற அடிப்படையில் மாகாண சபையுடனும் இணைந்து செயற்படவேண்டும் என்று வடக்கு மாகாண சபையில் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில், அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானத்தினால், பருவ மழை பொய்த்ததன் காரணமாக வறட்சியினால் வடக்கு மாகாணத்தில் பொதுமக்கள் குடிதண்ணீரின்றித் துன்பப்படுவதுடன் கால்நடைகளும், குளங்கள் போன்ற நீர்நிலைகளில் நீரின்மையால் அலைந்து திரிவதையும் காணக்கூடியதாக உள்ளது.

இவ்வாறான இயற்கை

(22ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் போதைப் பொருளுடன் ஒருவர் கைது

வவுனியா, ஒக. 22

வவுனியாவில் போதைப் பொருள்விற்பனையில் ஈடுபட்டிருந்த இளைஞர் ஒருவர் நேற்று வியாழக்கிழமை மதியம் கைது செய்யப்பட்டதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியாவில் பல்வேறு இடங்களில் போதைப்பொருள் விற்பனை செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனைக் கட்டுப்படுத்தும் வகையில் வவுனியா பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டுள்ள

(22ஆம் பக்கம் பார்க்க)

## கிராமத்துக்கு 1 மில்லியன் திட்டத்தை உரியவகையில் நடைமுறைப்படுத்துக

### மாகாண சபை அமர்வில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஒக. 22

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழான, கிராமத்துக்கு ஒரு மில்லியன் வேலைத் திட்டத்தைச் சுற்றறிக்கையில் சொல்லப்பட்டுள்ளவாறு பிரதேச அரசியல் தலைமைத்துவத்தையும் இணைத்து நடைமுறைப்படுத்தவேண்டும் என்று வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணசபையின் 14 ஆவது அமர்வு நேற்று இடம்பெற்றது. இதில் 8 பிரேரணைகள் முன்வைக்கப்பட்டிருந்த நிலையில் அவற்றில் 5 பிரேரணைகள் மாத்திரமே ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளன.

அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானத்தினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்,

2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட அரச ஊழியர்களுக்கான புதிய சம்பள அளவுத் திட்டத்தின் பிரகாரம், அந்தத் திகதிக்குப் பின்னர் ஓய்வு பெற்ற ஊழியர்களின் ஓய்வூதியம் கணிக்கப்பட்டு வருகின்றது.

(22ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் அரசியல் கைதிகள் மூவரின் விடுதலைக்கு நடவடிக்கை எடுக்குக

### மாகாணசபை உறுப்பினர் அனந்தி கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக. 22

அநுராதபுரம் சிறைச்சாலையில் தொடர்ச்சியாக 8 நாள்களாக உண்ணாவிரதம் இருந்து வரும் தமிழ் அரசியல் கைதிகள் மூவரின் விடுதலை தொடர்பிலும் வடக்கு மாகாண சபை நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும், இது தொடர்பில் ஜனாதிபதிக்கு வலியுறுத்தவேண்டும் எனவும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அநுராதபுரம் சிறைச்சாலையில் இருந்த 53 தமிழ் அரசியல் கைதிகளுள், மூன்று தமிழ் அரசியல் கைதிகள் மாத்திரம் அங்கிருந்து வேறாக்கப்பட்டுச் சிங்கள கைதிகளுடன் தங்க வைக்

(22ஆம் பக்கம் பார்க்க)

## முகப்பூச்சுக் கொள்வனவில் அவதானத்துடன் இருங்கள்

### பாவனையாளர் அதிகார சபை எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஒக. 22

முகப்பூச்சு கிறீம் வகைகளைக் கொள்வனவு செய்வதில் பொதுமக்களை மிகவும் விழிப்புணர்வுடன் செயற்படுமாறு பாவணையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையின் யாழ். மாவட்ட அதிகாரி தனசேகரன் வசந்தசேகரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

யாழ். நகரப்பகுதியில் உள்ள விற்பனை முகவர் ஒருவர் தரம் குறைந்த முகப்பூச்சு வகைகளை விற்பனை செய்தமை தொடர்பில் கண்டு பிடிக்கப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளார்.

இவ்வாறு தரம் குறைந்த முகப்பூச்சு வகைகளை விற்பனை செய்த முகவருக்கு யாழ். நீதிமன்றினால் 8 ஆயிரம் ரூபா தண்டப் பணம் அறவிடப்பட்டுள்ளதுடன், தரம் குறைந்த முகப்பூச்சு வகைகளை விற்பனை செய்த வர்த்தகர்களிடமிருந்து மீளப்பெறுமாறும் நீதிமன்றினால் உத்தரவிடப்பட்டுள்ளது.

அத்துடன், எதிர்காலத்தில் தரம் குறைந்த முகப்பூச்சு வகைகளை விற்பனை செய்தால்

(22ஆம் பக்கம் பார்க்க)

## யசிந்தன் சார்பிலும் மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஒக. 22

நெடுந்தீவுப் பிரதேச சபைத் தவிசாளர் தானியல் றெக்ஷயனின் கொலை தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஈ.பி.டி.பியின் முன்னாள் உறுப்பினரும் இரண்டாவது சந்தேக நபருமான லண்டன் யசிந்தனைப் பிணையில் விடுவிக்குமாறு கோரி யாழ்.மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதனைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்ட மேல்நீதிமன்று வழக்கின் எதிர் மனு

(22ஆம் பக்கம் பார்க்க)

100% எழுத்து மூலமான உத்தரவாதத்துடன்

எண்ணி 30 நாள்களில்

ஆஸ்திரேலியா பறக்கலாம்

தனியாளாக ஆஸி பறக்க

விரைந்து வாருங்கள்

100% சட்ட ஆலோசனை

7 பேருக்கு மட்டுமே

(C/16136)(10.3)

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்

175, பருத்தித்துறை வீதி,

யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 221 9016, 021 568 9090



## சுன்னாகம் கிணறுகளில் கழிவு ஒயில்; உடன் தீர்வு காணாவிட்டால் வழக்கு

### மாகாண சுற்றுச் சூழல் அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 22

சுன்னாகம் பகுதியிலுள்ள கிணறுகளில் கழிவு ஒயில் கலந்துள்ளமை தொடர்பான பிரச்சினையை உடனடியாகத் தீர்ப்பதற்கு இலங்கை மின்சார சபை தவறுமாயின் அவர்களுக்கு எதிராக வடக்கு மாகாண சபையினால் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று வடக்கு மாகாண விவசாய, சுற்றுச் சூழல் அமைச்சர் பொ.ஜங்கரநேசன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணசபையின் நேற்றைய அமர்வில், அவைத் தலைவரினால் கொண்டுவரப்பட்ட வறட்சி தொடர்பான பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் ஆளுங்கட்சி உறுப்பினர் பா.கஜதீபன் உரையாற்றுகையில், சுன்னாகம் பகுதியிலுள்ள கிணறுகளில் கழிவு ஒயில் கலக்கப்பட்டு மிகப்பெரிய பிரச்சினையாகியுள்ளது: மின்சார சபையைச் சுற்றியுள்ள சுமார் 2 கிலோ மீற்றர் நீளமான சுற்றயல் பிரதேசங்களின் கிணறுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதே பிரச்சினை தென்னிலங்கையிலும் ஏற்பட்டது. இதன்போது மின்சக்தி எரிசக்தி அமைச்சரும், இடர் முகாமைத்துவ அமைச்சரும் இணைந்து அதனை உடனடியாகத் தீர்த்து வைத்தார்கள். ஆனால் இது தமிழர்களின் பிரதேசம் என்பதால் அவை அழிந்து போகட்டும் என்று விட்டுவிட்டிருக்கின்றார்களோ தெரியவில்லை. இதற்கு மத்திய அரசில் இருப்பவர்களும் உடந்தைதான்.

இதன் பின்னர் ஆளுங்கட்சி உறுப்பினர் த.சித்தார்த்தன் உரையாற்றுகையில், சுன்னாகம் பகுதியிலுள்ள மக்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கப்பட வேண்டும். அத்துடன் அவர்களது இந்தப்

(22ஆம் பக்கம் பார்க்க)

HNB

**அடகுப் பொருள்கள்**
**ஏல விற்பனைக்கான அறிவித்தல்**

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, சுன்னாகம், மானிப்பாய், கைதடி, திருநெல்வேலி, சங்கானை, கிளிநொச்சி வடக்கு, கிளிநொச்சி தெற்கு, அச்சுவேலி, கொடிகாமம், முள்ளியவளை, மல்லாவி, நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, முல்லைத்தீவு, வேலணை ஆகிய கிளைகளில் 31.07.2013 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் 25.08.2014 தொடக்கம் 29.08.2014 (திங்கள்- வெள்ளி) வரை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை இல.212, 214 ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள எமது யாழ். கிளையில் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என்பதனை அறியத்தருகின் றோம்.

ஏல விற்பனைத்திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமைகள் வங்கிக்கு உண்டு.

**ஹற்றன் நஷனல் வங்கி**

**பகிரங்கப்படுத்தல்**
**மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையம் அமைந்திருக்கும் காணி உரிமம் தொடர்பான விடயம்**

மட்டுவில் தெற்கை பூர்வீகமாகக் கொண்ட எனது பெற்றோர் ஆகிய திரு முருகேசு வேலுப்பிள்ளை, திருமதி செல்லம்மா வேலுப்பிள்ளை அவர்களினால் 1965 ஆம் ஆண்டு மட்டுவில் தெற்கு சனசமூக நிலையத்திற்கு தர்மம் தலைகாக்கும் என்ற கருப்பொருளுக்கமைய தரும சாதனமாக வழங்கப்பட்ட மேற்படிப் நிலப்பரப்பு அப்போதைய புத்திஜீவிகளின் வேண்டுகோளுக்கமைய 1978 ஆம் ஆண்டு கிராம அபிவிருத்தி கருதி மட்டுவில் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு பிரபல சட்டத்தரணி சுப்பிரமணியம் கந்தசாமி அவர்களினால் உரிமை மாற்றம் செய்து மீண்டும் தருமசாதனமாக அப்போது தென்மராட்சிக்கு உதவி அரசாங்க அதிபராக இருந்த சுப்பிரமணியம் முருகவேள் அவர்களின் பெயருக்கு உறுதி எழுதிக் கொடுக்கப்பட்டது. இந்த ஆவணம் இயங்குநிலை வரை ஓர் அரச உடைமை ஆதனமாகும்.

இதனை மீறும் வகையிலும் சமூக ஒற்றுமைக்கு பங்கம் விளைவிக்கும் வகையிலும் எழுத்து மூலமான எந்த ஒரு தீர்மானமும் இன்றி ஒரு சிலர் ஒன்று சேர்ந்து கள்ளத்தனமாக வளர்மதி சனசமூக நிலையம் என்ற அமைப்பின் பெயரில் நன்கொடையாக உறுதி முடித்து கொடுத்து பாராட்டுக்களும் வழங்கப்பட்டதாக எமது ஊர் மக்களால் பரவலாக பேசப்படுகின்ற நிலையில் இந்தப் பகிரங்கப்படுத்தலை வெளியிடுகின்றேன்.

மட்டுவில் தெற்கு கிராம அபிவிருத்திச்சங்கத்திற்கான காணி உறுதியும் அதற்கான தோம்பு உறுதியும் அடுத்த மாத முற்பகுதியில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரிடம் எனது குடும்ப அங்கத்தவர்களால் கையளிக்கப்படவுள்ளது.

இந்த விடயத்திற்கு மட்டுவில் தெற்கைச் சேர்ந்த பொது மக்கள் யாராவது ஆட்சேபனை தெரிவிக்க விரும்பினால் பொருத்தமான ஆதாரங்கள் மூலம் 31.08.2014 ஆம் திகதிக்கு முன்பு என்னுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தர்மசாதன பின்தத்துவகாரரும்
கல்விபயிலாளருமாகிய
வேலுப்பிள்ளை கந்தசாமி இராஜேந்திரன்
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (51121)(4.6.3)

# கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் குளங்களை ஆழமாக்க நடவடிக்கை

கரணவாய், ஓக.22

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் கிராம சேவகர் பிரிவு ரீதியாக உள்ள 20 குளங்களை ஆழமாக்கும் செயற்றிட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

தற்போது நிலவும் கடும் வறட்சியான காலநிலை காரணமாக பல குளங்கள் வற்றி வறண்டு காணப்படுகின்றன. இதனால் அந்தப் பகுதிகளைச் சேர்ந்த சிறுபோக நெற்செய்கையாளர்களும் கால்நடை வளர்ப்போரும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இதனை நிவர்த்தி செய்யும் முகமாக முக்கியமாக சில குளங்கள் இனங்காணப்பட்டு ஆழமாக்கப்படவுள்ளன. அதற்கான முன்மொழிவுகள் யாழ்.மாவட்ட அரச அதிபருக்கு வழங்கப்பட்டுள்ளன என்றும் கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ தெரிவித்தார். (வ-108)

## பொலிஸாரை கற்களால் தாக்கிய நபருக்கு விளக்க மறியல்

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிய நபரைக் கைது செய்யச்சென்ற பொலிஸார் மீது கற்கள் வீசித் தாக்கி கடமை செய்ய விடாமல் இடையூறு விளைவித்த நபரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் உத்தரவிடப்பட்டது.

கடந்த மே மாதம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய நபர் தலைமறைவாகி இருந்துள்ளார். அவரைக் கைது செய்த கொடிகாமம் பொலிஸார் நேற்றுமுன்தினம் நீதிமன்றில் முற்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிவான் குறித்த நபரை எதிர்வரும் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ஓ-9)

## மயானங்கள், வீதிகள் புனரமைப்பு

கரவெட்டிப் பிரதேச சபையால் இவ்வருடம் மூன்று வீதிகளும் இரண்டு மயானங்களும் முழுமையாகப் புனரமைக்கப்பட்டுள்ளன.

பொதுமக்களின் பயன்பாட்டின் அடிப்படையில் முன்னுரிமை வழங்கி சபை நிதியில் இருந்தே வீதிகளும் மயானங்களும் புனரமைக்கப்பட்டுள்ளன. கரவெட்டி சரஸ்வதி வித்தியாலய வீதி, துன்னாலை தக்குச்சம்பாதி வீதி மற்றும் நெல்லியடி முடக்காடு வீதி என்பனவும்- உடுப்பிட்டி கிறிஸ்தவ மயானம், வல்லை முள்ளிமயானம் என்பனவும் முழுமையாகப் புனரமைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை நெல்லியடி மத்திய சந்தைக் கட்டத்தொகுதி, மண்டான் சந்தை என்பன வற்றையும் துன்னாலை ஆட்டுப்பட்டி வீதி, மத்தொனி சண்டிங்குளம் வீதி மற்றும் கரணவாய் விழுந்தாலடி வீதி என்பனவற்றையும் சபை நிதியின் மூலம் புனரமைக்கும் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. (வ-108)

## பாடசாலைக்கு பியானோ அன்பளிப்பு

கிளிநொச்சி முரசுமோட்டை முருகானந்தா கல்லூரிக்கு பியானோ ஒன்று வழங்கப்பட்டுள்ளது. அந்தக் கல்லூரியில் கற்று தற்போது லண்டனில் வாழ்ந்து வரும்பழைய மாணவர்களான ஜெப்பிர காஷ்தம்பதியினர்ஒன் றரைலட்சம்ரூபாமதிப்பான பியானோ இசைக்கருவி ஒன்றை அன்பளிப்புச் செய்தனர். (வ-421)

**காணி விற்பனைக்கு**

கந்தர்மடம், அம்மன் வீதியில், பலாலி வீதிக்கு அண்மையில் 2 பரப்பு வெற்றுக் காணி உடன் விற்பனைக்குண்டு. அரசடி வீதி, கந்தபுராண வீதிபூடாகவும் காணிக்குப் பாதை உண்டு.

தொடர்பு: 077 795 3581

## பெயர்மாற்றம்

(முகவரி) 105/1, மொகிதீன்மஜித் மாவத்த, கொழும்பு-10 ஐச் சேர்ந்த (பழைய பெயர்) சாருஜன் ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை (புதிய பெயர்) அஜெந்தன் என மாற்றிக் கொண்டுள்ளேன் எனவும் இனிமேல் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பமிடுவேன் எனவும் இத்தால் இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் மக்களுக்கும் அறியத் தருகின்றேன்.

இ.அஜெந்தன் (51133) (7.6.3)

## கண்ணீர் அஞ்சலி



உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலயத்தில் முன்னர் குருக்களாக இருந்த மு.ஐயாத்துரை ஐயாவின் மகனும், ஆலயத்தில் முன்னர் பூசகராக இருந்தவருமான

**ஐ.அரவிந்தசர்மா**
(அசோக்)

அவர்களது மறைவுச்செய்தி அறிந்து ஆழ்ந்த துயருறுகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய கற்பக விநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆலய பரிபாலன சபை
உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலயம்

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அராலி மேற்கு கோட்டைக்காட்டைச் சேர்ந்த **அருள்வாக்குச்** சொல்பவரும் எனது தாயாருமாகிய

**திருமதி செல்லம்மா கந்தசாமி**

22.07.2014 காலமானார். அன்னாரின் 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (22.08.2014) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் இடம் பெறும் என்பதை அறியத் தருகின்றேன்.

க.கணேசமூர்த்தி (மகன்)
அராலி மேற்கு, வட்டுக்கோட்டை.

## மரண அறிவித்தல்



**பொன்னு நல்லையா**
**(மோட்டார் கார் சாரதி)**

மட்டுவில் தெற்கு, வளர்மதி வீதியினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னு நல்லையா நேற்று (21.08.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந.வசந்தாதேவி (மனைவி)
(51132) (45.3)

ஓம் மகா கணபதி துணை



# ஆத்திசூடி ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம்

**ஆத்திசூடி வீதி, கந்தர்மடம்,**

**ஆலய கட்டட ஒப்பந்தகாரரைத் தெரிவுசெய்தல்**

மேற்படி ஆலயம் இடம்மாற்றப்பட்டு நிர்மாணிக்கப்படவுள்ளது. ஆலய கட்டடத்திற்கு ஆகம விதிகளின்படியும் அளவுப் பிரமாணங்களின்படியும் ஆலயத்தை நிர்மாணித்து வழங்கக் கூடிய தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப் படுகின்றன.

நிர்மாணிக்கப்படவுள்ள ஆலயத்தின் மாதிரி வரைபடம், அளவுப்பிரமாணங்கள், விதிகள் மற்றும் நிபந்தனைகள் என்பவற்றை ஆலய பொருளாளர், மே/பா, திரு அ.சிவராசா, 66, ஆத்திசூடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் மீளளிக்கப்படாத வைப்புப் பணம் ரூபா 1,000/= ஐச் செலுத்திப் பெற்றுக்கொள் ளலாம். விண்ணப்பங்களைக் கையளிப்பதற்கான இறுதித்திகதி 05/09/2014 ஆகும்.

**ஆலய பரிபாலன சபையினர்,**
**ஆத்திசூடி, ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம்,**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**
**21/08/2014** (51130)(4.6.3)

## ஆண்டு பத்தில்

**நீளநினைந்து நெஞ்சுருகிப் பிரார்த்திக்கின்றோம்.**

**திருமதி மனோரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்**



11 - 08 - 1930
வையத்துள்

11 - 09 - 2004
தெய்வத்துள்

திதி: ஆவணி மாதத்து அபரபக்கத் துவாதசி 22.08.2014 வெள்ளிக்கிழமை

**மனைத்தக்க மாண்புடன் மனைமாட்சி பேணினீர்**
**ஈன்ற பொழுதின் சான்றோராய்க் கண்டு பெரிதுவந்தீர்**
**செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருந்தீர்**
**நல்விருந்தாய் வான் உறையும் சிவனார் பதம் பணிந்தீர்.**

'எபநேசர்'
செம்மணி வீதி,
நல்லூர்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

22 AUG 2014

## மஞ்சவனப் பதியில் இன்று கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஓக. 22
கொக்குவில், மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தின் பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிறன்று மஞ்சமும் 5 ஆம் திகதி சனிக்கிழமை சப்பறத் திருவிழாவும், 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தேர் உற்சவமும் மறுநாள் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது.

சிவப்பிரம்ம ஸ்ரீ இரத்தினசபாபதிக் குருக்கள் விக்னேஸ்வரக் குருக்கள் பிரதம குருவாக்விருந்து மஹோற்சவங்களை நடத்தி வைப்பார். (ஓ)

## நல்லூரில் பக்தி இசைகானம்

யாழ்ப்பாணம், ஓக. 22
கொழும்பு திவ்விய நாதலய மன்ற மாணவர்களால் நல்லூர் திருவிழாவை முன்னிட்டு மகேஸ்வரன் மணி மண்டபத்தில் தேர், தீர்த்த உற்சவ தினங்களில் மாலை 6.45 மணியளவில் பக்தி இசைகானங்கள் நிகழ்ச்சி நடைபெறும் என்று மன்ற ஆசிரியர் அறிவித்துள்ளார். (ஓ)

**அசத்தலான தள்ளுபடி**

நல்லூர் திருவிழாவை முன்னிட்டு நல்லூர் கிளையில் மட்டும் மலிவு விலையில் அண்ணா உற்பத்திப் பொருள்கள் (நூடில்ஸ் பைக்கற், மல்லிக் கோப்பி ரின், ஜீவாகாரம், டிப்பிடிப்பி பைக்கற், சாம்பிராணிப் பெட்டி) 5 பொருள்கள் அடங்கிய பொதி.
ஒன்று 250/= விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**அண்ணா கோப்பி காட்சியறை**
பருத்தித்துறை வீதி, நல்லூர்.
(நல்லூர் சிவன் கோயில் பின்புறம்)
(சி/16102)
(7.6.3)







காலை: தெண்டாயுதபாணி உற்சவம்

## நல்லூர் ஆலயச் சூழலில்

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெரும் திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் நடத்தி வரும் சமய சொற்பொழிவுகள் மற்றும் கலை நிகழ்வுகள் வரிசையில் இன்று பிற்பகல் 3 மணிக்கு-

'இந்து மதம் காட்டும் அறிவியல்' என்ற தலைப்பில் சைவப்புலவர் ச.நவநீதனின் சிறப்புச் சொற்பொழிவும், மாதகல் சித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலை, தெல்லிப்பழை கந்த செல்வாபுரம் கன்னி வளவுப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை, சங்கத்தானை இத்தியடி இந்து இளைஞர் மன்ற அறநெறிப் பாடசாலை, பன்னாலை முத்துமாரி அம்பாள் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் காலை நிகழ்வாக நாவற்குழி அறிவொளி மன்ற அறநெறிப் பாடசாலை மற்றும் பொலிகண்டி விநா யகர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (ஒ-7)

★ ★ ★

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தின் அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தி வரும் தெய்வீக இசையரங்கு வரிசையில் இன்று மாலை 6.45 மணிக்கு - பாட்டு - திருமதி தாரணி ராஜ்குமார், வயலின் - செல்வி பாக்கியலட்சுமி நடராசா, மிருதங்கம் - ஆர்.கஜானனன், தபேலா - பி.சியாம் கிருஷ்ணா. (ஓ)

★ ★ ★

'பிரம்மகான சபை'யால் நல்லை ஆதீனத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு இசை அர்ச்சனை இடம்பெறும். ஏ.ஜி.சுவாமிநாதன் குழுவினர் நிகழ்வில் பங்குபற்றுவர். (ஓ)

★ ★ ★

நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன குருமூர்த்த ஆலயத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு பிரம்மஸ்ரீ சிவ. வை. நித் தியானந்த சர்மா பக்க வாத்திய சகிதம் வழங்கும் 'கம்பராமாயணம்' தொடர் நிகழ்வில் 'இன்று போய் நாளை வா' இசைப் பேருரை இடம்பெறும். (ஓ)


★ ★ ★

யாழ்ப்பாணம் சின்மயாமிஷனின் ஏற்பாட்டில் 'இந்துவாக வாழ்வோம்' செயற்றிட்டத்தின் ஓர் அங்கமான ஆன்மிக அருளுரை ஆலய வடக்கு வீதியிலுள்ள மகேஸ்வரன் மணி மண்டபத்தில் மாலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இன்றைய அருளுரையின்தலைப்பு 'அன்பே சிவம்' என்பதாகும். (ஓ)

## கலாசாரப் பேரவை செயற்குழு கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக.22
யாழ்.மாவட்ட கலை, கலாசாரப் பேரவையின் செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.
இதில் அனைத்து செயற்குழு உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு மேலதிக அரச அதிபர் அறிவித்துள்ளார். (ஓ)

இருபத்தோராம் நாள் திருவிழா



## கண்கண்ட தெய்வம் நீயன்றோ...

கானக் குற வள்ளியை கைப்பிடித்த கந்தா
கருணை மழை பொழிவாய் நல்லூரின் நாயகா
ஈனப் பிறவி தனை இன்றே அறுத்தெறிய
இலங்கு மயில் மீது வந்திடுவாய் நல்லூரின் வேலவா
ஞானப் பெருவடிவே நல்லூரின் கோமகனே
ஞாலத்தில் நன்மைகள் பெருகிட அருள்வாய்
கான மழை பொழிந்தோம் நின் சந்நிதியில்
கண்கண்ட தெய்வம் நீயன்றோ எமக்கு

*செ.சிவபாதசுந்தரம், மீசாலை.*

## நல்லருளை என்றும் தா

நல்லைநகர் நாயகனாம் முருகாவுன் திருவருளால்
தொல்வினை யாவும் போக்கி- எல்லையில்லா
இன்பப் பெருவாழ்வு நாளும் நாம் பெறவே
உன்னன்புத் திருவருளைத் தா

மெச்சு புகழ் நல்லைநகர் வாழும் நாயகனே
அச்சமின்றி எங்கும் நாம் சென்று வர- இச்செகத்தில்
நல்லாயுள் நற்சுகங்கள் நாமெல்லாம் பெறவே
நல்லருளை என்றும் தா

*- கச்சாயூரான்*

## அருளொளி வீசிடுவாய்

உலுப்பிடும் வறட்சியும் உறுத்தும் வன்முறைகளும்
ஊறுடைய வாழ்வும் ஊர் முழுதும் காண்பாய்
எம் மண்ணை விட்டேகி எத்தனையோ சகாப்தங்கள்
ஏதிலிகள் என்றானோம் ஏக்கமுற்று வாழ்கின்றோம்

ஐயனுக்கு உபதேசித்து ஐயம் தீர்த்தவனே
ஒருமித்த இலங்கையில் சமமான உரிமைகளுடன்
ஓரில்ல மக்களாய் ஓரணியில் வாழ்ந்திட
ஔவையின் அன்பனே அருளொளி வீசிடுவாய்.

*திருச்சி நவரத்தினம், தெல்லிப்பழை.*



பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு
பதிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களுக்கான விலைமனு கேள்வி அழைப்பு
அலுவலகப் பொருள்கள், மின்சாரம் மற்றும் இலத்திரனியல் உபகரணங்களுக்கான பெறுகைகள்

பிராந்திய பெறுகைகள் குழு தகுதியான, தகைமைவாய்ந்தவர்களிடம் கீழ்வரும் பொருள்களிற்கான முத்திரையிடப்பட்ட பெறுகைகளினைப் பின்வருமாறு கோருகின்றது.

| Reference No | Item | Qty | Reference No | Item | Qty |
|---|---|---|---|---|---|
| NP/04/44/02/Com &Ele/HSDP II/2014/01 | Photocopy Machine | 01 | | Office Table | 14 |
| | Desktop Computer | 05 | | Steel cupboard | 04 |
| | Lap top computer | 01 | | Wooden almyrah | 02 |
| | Laser Printer | 01 | | Computer table | 01 |
| | Pen Drive | 02 | | Computer chair | 01 |
| | UPS | 05 | | Arm chair | 20 |
| | Voice Recorder | 02 | | Staff chair | 36 |
| | Date loader | 05 | | Office chair | 04 |
| | Multimedia projector | 03 | | Visitors chair | 04 |
| | 32" LED TV | 02 | | Patient chair | 06 |
| | DVD Player | 02 | | Patient waiting chair (Airport Chair) | 05 |
| | Water Filter | 01 | | Store rack | 06 |
| | Digital Camera | 01 | | Patient waiting chair | 05 |
| | Refrigerator | 06 | | | |
| | | | | | |
| NP/04/44/02/Fur /HSDP II/2014/02 | Junior executive table | 01 | | | |
| | Junior executive Chair | 01 | | | |
| | Revolving Chair | 13 | | White board | 04 |
| | Steel table | 02 | | Pin board | 02 |
| | Almyrah with front class | 05 | | Display board | 02 |
| | Filing cabinet | 02 | | | |

* ஒவ்வொருபெறுகைக்கும் மீளளிக்கமுடியாத கேள்விப்பத்திரப்பணம் ரூபா 200/= செலுத்தப்படவேண்டும்

1. தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை அலுவலக நேரங்களில் (021 229 0111) பிராந்திய சுகாதாரசேவைகள் திணைக்களம் முல்லைத்தீவிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.
2. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இப்பணிமனையில் கிடைக்கும் **'Application for Bid docu- ments'**என்றபடிவத்தினைப் பூர்த்தி செய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக மேலேகுறிப்பிட்ட தொகையை காசாகச் செலுத்தி பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாள்களில் 25.08.2014 தொடக்கம் 15.09.2014 வரையான காலப்பகுதியில் 09.00 மணிதொடக்கம் 15.00 மணிவரை (12.30 தொடக்கம் 13.30 மணி தவிர்ந்த) நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
3. விலைக்கேள்விகள் **16.09.2014 ஆம் திகதி 10.00 மணிக்கு** முன்பதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு நிதிக்கிளை அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**வைத்திய கலாநிதி த. பூங்கோதை**
**தலைவர்**
**பிராந்திய பெறுகைகள் குழு**
**பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு.** (C/16118)(4.3.6)

## தீவுப் பகுதி மக்களுக்கு யாழ்.மாநகர சபையால் குடிதண்ணீர் விநியோகம்

யாழ்ப்பாணம், ஒக.22
தீவுப் பகுதி மக்களின் குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் யாழ்.மாநகரசபை வேலணை, ஊர்காவற்றுறை பகுதிகளுக்கு பவுஸர்கள் மூலம் குடிதண்ணீரை வழங்கி வருகின்றது.

வேலணை, ஊர்காவற்றுறை பிரதேச செயலகங்கள், பிரதேச சபைகள் மூலம் மக்களுக்குத் தேவையான குடிதண்ணீரை வழங்க நாங்கள் முன்வந்துள்ளோம்.

மக்களின் தேவைகளுக்கு உதவுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம் என யாழ்.மாநகரசபை முதல்வர் தெரிவித்தார். (த-7)

**தேவை**
நல்ல குருத்தோலை சார்வு தேவை.
வைத்திருப்போர் தொடர்பு கொள்ளவும்.
அன்னை தொழிலகம்
துரை வீதி, இணுவில். (சி/16101) (7.6.3)

**இலவச திருமண சேவை**
உங்கள் பிள்ளைகளின் ஜாதகக் குறிப்பின் நவக்கிரக நிலை, நவாம்ச நிலை பிறந்ததிகதி, நேரம், கிரகபாவம் என்பவற்றுடன் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம் ஆகியவற்றை
balaramanov@gmail.com
என்ற முகவரிக்கு அனுப்பி வைத்து பயன்பெறுங்கள்.
(51048)(46.3.6)

**J.C.B (பைக்கோ) வாடகைக்கு**

குறிப்பு :★ போக்குவரத்துக் கூலி அறவிடப்பட மாட்டாது.
★ஒப்பந்தவேலைகளுக்கு விஷேட விலைக்கழிவு வழங்கப்படும்.
தொடர்பு: 021 224 1466 (யாழ்ப்பாணம்)
077 771 2482 (கல்வியங்காடு) /077 984 7285 (பருத்தித்துறை)
புதிய எரிபொருள் நிரப்பு நிலையம்
207, K.K.S.வீதி, சுன்னாகம். (50575) (4.6.3)



உ
மகாமாரி அம்மன் துணை
யா/அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் கோயில்
# கல்யாண மண்டப திறப்பு விழா
22.08.2014.

அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் கோயில் கல்யாண மண்டபம் இன்று 22.08.2014ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு திறந்து வைக்க மகாமாரி அம்மன் திருவருள் கூடியுள்ளது.

**நிகழ்ச்சி நிரல்**
22.08.2014 – வெள்ளிக்கிழமை காலை 07.52 தொடக்கம் 09.39 வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் பட்ஸ்தாபனம்.
காலை 10.00 மணி தொடக்கம்,
மாலை மரியாதை: குருமார், பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர்கள்.
நாடா வெட்டுதல்.
தீபமேற்றுதல்.

**நிகழ்ச்சிகள்.**
1. தேவாரம்.
2. தலைமை உரை - திரு. சு. கமலநாதன். (தலைவர், யாழ். அ.பி.ம.அ. கோயில்)
3. வரவேற்புரை - திரு. ந. குகதாசன். (உப தலைவர், யாழ். அ.பி.ம.அ. கோயில்)
4. சிறப்புரை - திரு. சு. சண்முகரட்ணம். (பரிபாலன சபை உறுப்பினர், யாழ். அ.பி.ம.அ. கோயில்)
5. விசேட விருந்தினர் உரை.
   (1) திரு. பி. செந்தில் நந்தனன். (பிரதேச செயலர், பிரதேச செயலகம், நல்லூர்)
   (2) திரு. வி. சுதாகர். (பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி சபை)
6. பிரதம விருந்தினர் உரை - திரு. ஆறு திருமுருகன். (தலைவர், சிவபூமி அறக்கட்டளை)
7. நன்றியுரை - திரு. செ. ஜெயபாலன். (கௌரவ செயலாளர், யாழ். அ.பி.ம.அ. கோயில்)
8. தேவாரம்.
9. இசைக்கச்சேரி.
10. விருந்துண்ணல்.

இத்திறப்பு விழா நிகழ்வில் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
திருமண மற்றும் சுபகாரிய நிகழ்வுகளுக்கான முற்பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.
தொடர்புகளுக்கு: 021 221 1200.
பரிபாலன சபை, யாழ். அ.பி.ம.அ. கோயில்



இஸ்ரேல் மேற்கொண்ட வான்வழித் தாக்குதல் ஒன்றில் பலஸ்தீனியர்களின் வாழ்விடங்கள் பலத்த சேதமடைந்துள்ளன. தாக்குதலில் வீடு ஒன்று முற்றாகச் சேதமடைந்துள்ளதைக் காணலாம். (வ)

## வெடிக்கும் நிலையில் ஐஸ்லாந்து எரிமலை

### பீதியில் மக்கள்

ஐஸ்லாந்தில் எரிமலை ஒன்று வெடிக்கும் நிலையில் இருப்பதால் அங்குள்ள மக்கள் அச்சத்தில் உள்ளனர்.

ஐஸ்லாந்து நாட்டின் தென் மேற்கே உள்ள வட் நோஜ்குல் பனிப்பாறையின் கீழ் காணப்படும் பர்டர்புங்கா எரிமலையில் செவ்வாய்க் கிழமை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இது மிகப்பெரிய நில நடுக்கம் என்று வானிலை ஆய்வாளர்கள் கூறியதால், எந்த நேரமும் அந்த எரிமலை வெடிக்கக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில் முதலில் வெடிப்புக்கான அறிகுறிகள் காணப்பட்ட போதிலும், அதன் பின் இதுவரை எந்தச் சம்பவமும் நிகழவில்லை என்று கூறப்படுகிறது. (வ)

## உலகிலேயே அதிக வயதான ஆணாக ஜப்பான் தாத்தா



டோக்கியோ, ஓக.22

உலகிலேயே அதிக வயதான ஆணாக கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பிடித்தார் ஜப்பானைச் சேர்ந்த சக்காரி மோமோய்.

புக்குஷிமா அருகிலுள்ள மினி யாமிசோனாவில் 1903 ஆம் ஆண்டு பிறந்து, ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்று, ஜப்பான் தலைநகர் டோக்கியோவின் வடக்குப் பகுதியில் உள்ள முதியோர் காப்பகத்தில் வாழ்ந்துவரும் சக்காரி மோமோய்க்கு தற்போது 111 வயது ஆகின்றது.

உலகிலேயே அதிக வயதான ஆணாக கின்னஸில் இடம் பிடித்திருந்த அமெரிக்காவை சேர்ந்த அலெக்ஸாண்டர் இமிச் என்பவர் கடந்த ஜூன் மாதம் மரணம் அடைந்ததையடுத்து, இந்த அங்கீகாரம் சக்காரி மோமோயை வந்தடைந்துள்ளது. ஏற்கனவே, உலகின் அதிக வயதான பெண்மணி என்ற கின்னஸ் அங்கீகாரத்தை ஜப்பானின் ஒஸாக்கா நகரில் வாழ்ந்து வரும் மிசாவோ ஒக்காவா (வயது - 116) என்ற மூதாட்டி பெற்றுள்ள நிலையில், உலகிலேயே அதிக வயதான ஆணும், பெண்ணும் வாழும் நாடு என்ற பெருமைக்குரிய அடையாளத்தை சக்காரி மோமோய் மூலம் தற்போது ஜப்பான் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இன்றளவும் செவித்திறன் குறைபாடு தவிர வேறு எந்த வித உடல் சார்ந்த பாதிப்பும் அவருக்கு இல்லை என்றும்- புத்தகம் படிப்பதிலும், தொலைக்காட்சி அலைவரிசையில் சுமோ மற்போர் போட்டிகளைப் பார்த்து ரசிப்பதிலும் அவர் ஆர்வம் காட்டி வருவதாகவும் உறவினர்கள் கூறுகின்றனர். கின்னஸில் தனது பெயர் இடம்பெற்றமை குறித்து பெருமை பொங்க செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த சக்காரி மோமோய் இன்னும் 2 ஆண்டுகள்வரை வாழ விரும்புகிறேன் என்று தெரிவித்தார். (வ)

# மக்களுக்கான பணி ஈராக்கில் தொடரும்

### பத்திரிகையாளர் தலை துண்டித்துக் கொலை தொடர்பில் ஒபாமா ஆவேசம்


மாசசூசட்ஸ், ஓக.22

அமெரிக்கப் பத்திரிகையாளர் ஜேம்ஸ் போலி தலை துண்டித்துப் படுகொலை செய்யப்பட்ட செயல் ஒட்டுமொத்த உலகத்தையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. ஆனால் நாம் ஈராக்கில் தற்போது என்ன செய்து கொண்டிருக்கிறோமோ அதை நிறுத்தப்போவதில்லை. அஞ்சப் போவதில்லை. மக்களைக் காக்கும் பணியில் தொடர்ந்து ஈடுபடுவோம்.

எந்தக் கடவுளும் இந்த அக்கிரமச் செயலைப் பொறுத்துக் கொள்ள மாட்டார் என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

அமெரிக்கப் பத்திரிகையாளர் ஜேம்ஸ் போலி கொடூரமாக தலை துண்டித்துக் கொலை செய்யப்பட்டதற்கு அவர் கடும் கண்டனமும் அதிர்ச்சியும் தெரிவித்தார்.

மாசாசூசட்ஸ் மாகாணத்தில் தற்போது ஓய்வில் இருந்து வரும் ஒபாமா அங்கிருந்தபடி ஒரு செய்தி அறிக்கையை வெளியிட்டார். அதில் அவர் கூறியுள்ளதாவது:-



"நான் ஜேம்ஸ் போலியின் குடும்பத்தினருடன் தொலைபேசியில் பேசினேன். அவர்களது இழப்பால் ஒட்டுமொத்த அமெரிக்கர்களின் மனங்களும் சிதறிப் போயுள்ளதாகத் தெரிவித்தேன். ஜேம்ஸ் போலி ஒரு பத்திரிகையாளர், மகன், சகோதரன், நல்ல நண்பன், நல்ல குடிமகன். அவரது சாவு ஒட்டுமொத்த மனித குலத்தின் மனசாட்சியை உலுக்கியுள்ளது.

ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் இந்த உலகை அழிக்க வந்த புற்றுநோய். நகரங்களையும், கிராமங்களையும் பிடித்து, அழித்து, அப்பாவி மக்களைக் கொன்று குவித்து வரும் கோழைகள். அப்பாவிப் பெண்களைப் பாலியல் வன்புணர்வு செய்து, அவர்களைச் சித்திரவதை செய்து அடிமைகளாக்கி வரும் கோழைகள். எந்த மதமும் அப்பாவிகளைக் கொல்லச் சொல்வதில்லை, ஜேம்ஸ் போலிக்கு நடந்ததை எந்தக் கடவுளும் ஏற்க மாட்டார்.

ஒவ்வொரு நாளும் நடந்து வருவதை எந்தக் கடவுளும் ஏற்க மாட்டார். இதுபோன்ற குற்றங்களை இழைக்கும்நபர்கள் நிச்சயம் தோற்பார்கள். எதிர்காலத்தில் மக்கள்தான் வெல்வார்கள். அழிப்பவர்கள் வெல்ல முடியாது. ஆக்கபூர்வமானவர்கள்தான் வெல்வார்கள்"-என்றார். (வ)

## காஸாவில் போர் நிறுத்தம் தேவை

### ஐ.நா.சபை வலியுறுத்து

காஸாவில் நிரந்தர போர் நிறுத்தம் கொண்டு வருவதற்கான பேச்சுக்கு இஸ்ரேலும், பலஸ்தீனமும் முன்வர வேண்டும் என்று ஐ.நா. பாதுகாப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.

எகிப்தின் முயற்சியால் ஏற்படுத்தப்பட்ட மனிதாபிமான அடிப்படையிலான தற்காலிக போர் நிறுத்தம் மீறப்பட்டுள்ள நிலையில், பாதுகாப்புச் சபை இவ்வாறு கூறியுள்ளது. எகிப்தின் முயற்சிக்கு தங்களது ஆதரவைத் தெரிவித்துள்ள ஐ.நா. பாதுகாப்புச் சபை, நிரந்தர போர்நிறுத்தம் ஏற்படுதுவதற்கான பேச்சு உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

இதனிடையே செய்தியாளர்களிடம் பேசிய ஐ.நாவுக்கான பிரிட்டன் தூதர் மார்க் லயால் கிராண்ட், "காஸாவில் அப்பாவி மக்கள் உயிரிழப்பது மிகுந்த கவலை அளிப்பதாகவும், இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பது தொடர்பாக ஐ.நா. பாதுகாப்புச் சபை உறுப்பினர்கள் ஆலோசித்து வருவதாகவும் கூறினார். (வ)

## ஹமாஸ் தலைவரின் குடும்பம் வான் தாக்குதலில் உயிரிழப்பு

காஸா, ஓக.22

காஸாவில் இஸ்ரேல் மேற்கொண்ட வான்வழித் தாக்குதல் ஒன்றில், ஹமாஸ் இயக்கத்தின் தலைவர் ஒருவரின் மனைவி மற்றும் குழந்தை உட்பட மேலும் 11 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஹமாஸ் இயக்கத்தின் ஆயுதப்படைப் பிரிவின் தலைவர்களில் ஒருவரை இலக்கு வைத்து இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக ஹமாஸ் இயக்கத்தின் உத்தியோகபூர்வ தகவல்கள் தெரிவித்துள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சுமார் 50 ஏவுகணைகள் செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில் காஸா எல்லைப் பகுதியில் வீசப்பட்ட போதும், அதனால் இஸ்ரேல் தரப்பில் எவரும் காயமடையவில்லைஎன்று இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

அதனையடுத்து தற்காலிகமாக நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த போர் நிறுத்தம் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. (வ)

## சிறப்பாக ஆங்கிலம் பேசிய தீவிரவாதி யார்?

### அமெ.பத்திரிகையாளர் கொலை தொடர்பில் புதிய தகவல்

லண்டன், ஓக.22

அமெரிக்க பத்திரிகையாளரின் தலையைத் துண்டித்த தீவிரவாதி பிரிட்டன் உச்சரிப்புடன் சரளமாக ஆங்கிலம் பேசியுள்ளார். வெளியிடப்பட்ட காணொலியில் தெளிவாகத் தெரிவதாக பிரிட்டன் வெளியுறவுத்துறை செயலாளர் பிலிப் ஹேமண்ட் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து பிலிப் ஹேமண்ட் கூறியதாவது:-

ஐரோப்பாவைச் சேர்ந்த தீவிரவாதிகள் தற்போது ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்புடன் இணைந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்தநிலையில் அமெரிக்க பத்திரிகையாளர் ஜேம்ஸ் போலே கொடூரமாக தலை துண்டிக்கப்பட்ட காணொலியில் இருந்த தீவிரவாதி பிரிட்டன் உச்சரிப்புடன் கூடிய ஆங்கிலத்தில் பேசுவது தெளிவாகத் தெரிகிறது.


இதன்மூலம் சிறிதும் ஈவு இரக்கமற்ற மிகக் கொடுமையான இயக்கம் ஐ.எஸ். ஐ.எஸ். என்பது புலப்படுகிறது. சிரியா மற்றும் ஈராக்கில் உள்ள பிரிட்டன் நாட்டவரால், தற்போது எங்களது நாட்டின் பாதுகாப்பும் கேள்விக்குறியாகியுள்ளது.

இப்படிப்பட்ட குரூரமான இயக்கத்தினரிடமிருந்து ஈராக், சிரியாவைக் காப்பாற்ற உலக சமுதாயத்தை ஒருங்கிணைக்கும் பணியைப் பிரிட்டன் தீவிரப்படுத்தும் என்று கூறியுள்ளார்.

மேலும், கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் சிரியாவுக்கு 400 பிரிட்டன் நாட்டவர்கள் போயிருக்கலாம் என்று கருதுகிறோம் என்றும் குறிப்பிட்டுள்ளார். (வ)



## இராட்சத கைகளுடன் அவதிப்படும் சிறுவன்



டில்லி, ஓக.22

இந்தியாவில் 8 வயதுச் சிறுவன் ஒருவன் அவனது தலையை விட மிகப்பெரிய கைகளுடன் அவதிப்பட்டு வருகிறான். மருத்துவர்களோ, இதற்கான காரணம் என்ன என்று தெரியாமல் குழம்பியுள்ளனர்.

பிறக்கும்போதே சாதாரண குழந்தையின் கைகளை விட இரண்டு மடங்கு பெரிய கைகளுடன் பிறந்த கலீம் என்ற சிறுவனது கைகள் அவன் வளர வளர அசுர வளர்ச்சி அடைந்தன. தற்போது அவனது உள்ளங்கையில் இருந்து நடுவிரலின் நுனி வரை அளவெடுத்தால் அவனது ஒவ்வொரு கையும் 13 அங்குல அளவுக்கு உள்ளது.

கை விரல்கள் மிகப் பெரியதாக இருப்பதால், அவனால் சிறியளவிலான வேலைகளைச் செய்ய முடியாமல் அவதிப்படுகிறான். அவனது கைகளைப் பார்த்து மற்ற பிள்ளைகள் பயப்படுவதால், அவன் பாடசாலைக்கும் செல்லாமல் வீட்டில் தனிமையிலேயே இருக்கிறான். கூலித்தொழிலாளர்களான அவனது பெற்றோர், அவர்களால் இயன்றளவுக்கு மருத்துவ சிகிச்சை அளித்து வருகின்றனர். என்றாவது ஒரு நாள் தமது மகனது கைகள் இயல்பு நிலைக்கு திரும்பும் என்ற நம்பிக்கையோடு அவனது பெற்றோர் காத்திருக்கின்றனர். (வ)

## அஸாமில் கடையடைப்பு இயல்பு வாழ்க்கை பாதிப்பு

கோலாகட், ஓக.22

நாகாலாந்து எல்லையில் வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த தவறிய அஸாம் மாநில அரசைக் கண்டித்து அஸாமில் நேற்று இடம்பெற்ற கடை அடைப்புப் போராட்டத்தால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

அஸாமைச் சேர்ந்த 9 பேர் நாகாலாந்து பகுதியில் படுகொலை செய்யப்பட்டனர். இதனைக் கண்டித்து நாகாலாந்து எல்லைப் பகுதியான கோலாகட் என்ற இடத்தில் அஸ்ஸாம் மாநிலத்தவர் போராட்டம் நடத்தினர். அப்போது நாகாலாந்து பகுதி யில் இருந்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதனைத்தொடர்ந்து வன்முறை வெடித்தது. அஸ்ஸாம் மாநில அரசு தங்களுக்குப் பாதுகாப்பு வழங்கவில்லை என்று கூறி பல்வேறு அஸ்ஸாமிய அமைப்புகள் போராட்டத்தில் குதித்தன. இது தொடர்பான வன்முறைகளில் மொத்தம் 15 பேர் வரை உயிரிழந்துள்ளனர். இதில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் மட்டும் 3 பேர் உயிரிழந்துள்ளனர்.



இந்த வன்முறைகள் தொடர்பான அறிக்கையை பிரதமர் அலுவலகத்திடம் மத்திய உள்துறை அமைச்சகம் நேற்று முன்தினம் சமர்ப்பித்தது. இரு மாநில முதல்வர்களுடன் உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பேச்சு நடத்தினார்.

இதனிடையே நிலைமையைக் கட்டுப்படுத்தத் தவறிய மாநில அரசைக் கண்டித்து அஸாம் கடையடைப்புக்கு வலியுறுத்தப்பட்டது. இதற்கு 13 அமைப்புகள் ஆதரவு தெரிவித்தன. நேற்றுக் காலை முதல் முழு அடைப்புப் போராட்டம் நடைபெற்று வருவதால் அஸ்ஸாம் மாநிலத்தில் இயல்பு வாழ்க்கை முடங்கிப் போயுள்ளது. நாகாலாந்து எல்லைப் பகுதியில் தொடர்ந்தும் பதற்றமான. நிலைமை நீடித்து வருகிறது.(வ)

## நீதிபதிகள் நியமனம் குறித்த மனு விசாரணைக்கு ஏற்பு

டில்லி, ஓக.22

தேசிய நீதிபதிகள் நியமன ஆணையம் தொடர்பாக, நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இரு பிரேரணைகளையும் நீக்குமாறு வலியுறுத்தி உச்சநீதிமன்றத்தில்தொடரப்பட்ட மனுக்கள் விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டன.

அந்த மனுக்களைத் திங்கட் கிழமை விசாரிப்பதாக உச்ச நீதிமன்ற நீதிபதிகள் கூறியுள்ளனர்.

உச்ச நீதிமன்ற, உயர் நீதிமன்ற நீதிபதிகளைத் தெரிவு செய்வதற்கு, நீதிபதிகள் தெரிவுக் குழுவுக்குப் பதிலாக, தேசிய நீதிபதிகள் நியமன ஆணையத்தை உருவாக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதுதொடர்பான பிரேரணையும், அந்தப் பிரேரணைக்கு அரசமைப்புச் சட்ட அங்கீகாரம் வழங்கும் மற்றொரு பிரேரணையும் மக்களவையில் கடந்த வாரம் நிறைவேற்றப்பட்டன. (வ)

## குஜராத்தை மிஞ்சிய வளங்கள் ஜார்க்கண்ட்டில்

### மோடி தெரிவிப்பு

ராஞ்சி, ஓக.22

வளர்ச்சியில் குஜராத்தை மிஞ்சும் அளவுக்கு ஜார்க்கண்ட் மாநிலத்துக்கு வளங்கள் இருக்கின்றன என்று பாரதப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். ஜார்க்கண்ட் மாநிலம் ராஞ்சியில் நேற்று டிஜிட்டல் கல்வி ஆரம்பவிழாவில் கலந்து கொண்டு பேசிய போதே அவர் இவ்வாறுகூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாநிலத் தேவைகளுக்காக, முதல்வர்கள் மத்திய அரசிடம் அவ்வப்போது கோரிக்கைகளை வைக்க வேண்டிய அவசியமே இல்லை. மாநிலங்களுக்குத் தேவையான



அனைத்துமே மத்திய அரசால் உடனுக்குடன் வழ்ங்கப்படும். மாநிலங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யாமல் இந்தியாவை முன்னெடுத்துச் சென்றுவிட முடியாது. ஒவ்வொரு மாநிலங்களின் வளர்ச்சியையுமே மத்திய அரசு விரும்புகிறது. குஜராத் மாநிலத்தைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு முன்னிலைபெறும் வகையில் அனைத்து வளங்களையும் ஜார்க்கண்ட் மாநிலம் பெற்றுள்ளது- என்றார். (வ)

ஒரே மேடையில் நான்கு அரங்கேற்றம்
குரும்பசிட்டியைச் சேர்ந்த
வேலாயுதக்குருக்கள் ஆனந்தலட்சுமியின் பேரர்களின்
அரங்கேற்ற அழைப்பு




திரு.திருமதி வரதராஜன் கலைமதி
தம்பதியினரின்
செல்வப் புதல்வன்
ஆதித்யன்
(மிருதங்கம்,வாய்ப்பாட்டு- அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
Student of Mahaa Ganeshesthiram)
அவர்களினதும்
செல்வப் புதல்வி
ஆரபி
(வீணை, நடனம் - 3ஆம் வருட மாணவி,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
Student of Natha Veena Mandram)
அவர்களினதும்
மிருதங்கம், வாய்ப்பாட்டு, பரதநாட்டியம், வீணை
அரங்கேற்ற நிகழ்வு ஒரே மேடையில் நடைபெற இருப்பதனால்
தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து நிகழ்வினை சிறப்பிக்கும்
வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்
குறிப்பு : இந்த அழைப்பிதழ் கிடைக்கப் பெறாதவர்கள் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்
திரு.திருமதி வரதராஜன் கலைமதி தம்பதியினர்.

இடம்: ஆதவன் மண்டபம், ஆவரங்கால்
காலம்: 22.08.2014 பி.ப 2.00 மணி
(51138)(5-3)

22 AUG 2014



சுகாதார தொழிற்சங்கங்களின் பிரச்சினை தொடர்பில் சுகாதார ஒன்றிணைந்த தொழிற்சங்க பிரதிநிதிகளை ஜனாதிபதி நேற்றுமுன்தினம் மாலை அலரி மாளிகையில் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். பேச்சை அடுத்து சுகாதார தொழிற்சங்கங்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார். தீர்வுத் திட்டங்கள் மூன்று மாத காலத்துக்குள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். கலந்துரையாடலில் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, நிதியமைச்சின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர ஆகியோர் உட்பட சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (ற)

## பலஸ்தீனத்துக்கு நிதி உதவி வழங்கியமை சட்டவிரோதம்

### முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவிப்பு

கொழும்பு, ஓக.22
பலஸ்தீனத்துக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவி வழங்கியமை சட்ட விரோதமானது என்று தெரிவித்துள்ளார் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா.
"நிதி அமைச்சின் செயலாளரும், நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷவும் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களை செலவிடுவது அரசியல் சாசனத்தின் 148 சரத்தை மீறும் செயலாகும். வரவு-செலவுத் திட்டத்துக்கு புறம்பாக இந்தப் பணம் செலவிடப்பட்டுள்ளது.
வரவு-செலவுத் திட்டத்துக்கு புறம்பாக இவ்வளவு பெரிய தொகை பணத்தை செலவிட வேண்டுமாயின் குறை நிரப்புப் பிரேணை ஒன்றை சமர்ப்பித்து அதற்கான அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமானது. பொது மக்கள் பணம் தொடர்பில் 148ஆம் இலக்க சரத்தின் அடிப்படையில் வரையறுக்கப் பட்டுள்ளது.
இந்தியா, இங்கிலாந்து, அமெரிக்கா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட அனைத்து ஜனநாயக நாடுகளினதும் நிதி நிர்வாகம் நாடாளுமன்றின் ஊடாகவே மேற்கொள்ளப்படுகின்றன. பொதுமக்களின் பணத்தை நிறைவேற்று அதிகார ஜனாதிபதி தனக்கு விரும்பியவாறு செலவிட முடியாது.
நாடு பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கி வருகின்றது. ஜனாதிபதியால் நன்கொடையாக வழங்கப் பட்ட பணத்தை ஈடு செய்ய நாடு மீண்டும் கடன் பெற வேண்டியிருக்கின்றது. ஏற்கனவே பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களை மீளச் செலுத்துவதற்கு அரசின் மொத்த வருமானம் போதுமானதாக இல்லை"- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

## அனுமதிப் பத்திரம் இன்றி ஓடும் பஸ்களுக்கு ஆபத்து

கொழும்பு, ஓக.22
போக்குவரத்து அனுமதிப் பத்திரமின்றி பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் பஸ்களுக்கு எதிராக எதிர்வரும் மூன்று வாரங்களில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேசிய போக்குவரத்து ஆணைக் குழு தெரிவித்துள்ளது.
இந்த நடவடிக்கைகளுக்காக பல குழுக்கள் நாடு பூராகவும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்று ஆணைக்குழுவின் தலைவர் ரேணுக பெரேரா தெரிவித்துள்ளார்.
குறிப்பாக யாழ்ப்பாணம் கொழும்பு, வவுனியா ஆகிய மார்க்கங்களில், பயணிக்கும் பஸ்கள், போக்குவரத்து அனுமதி பத்திரமின்றி பயணிக்கின்றமை குறித்து அதிகளவில் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.
இந்த நடவடிக்கையை தவிர்க்கும் வகையில், தற்காலிக அனு மதிப் பத்திரம் வழங்கும் திட் டம் நிறுத்தப்பட்டுள்ளது என் றும் அவர் குறிப்பிட்டார்.
எனினும், வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் மாத்திரம் ஒருநாள் அனுமதிபத்திரத்தை வழங்க, கொழும்பு பெஸ்டியன் மாவத்தை பஸ் தரிப்பிட முகாமையாளருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றும் ரேணுக பெரேரா மேலும் தெரிவித்துள்ளார். (ற)

## பிரபாகரன் கேட்டதையே கூட்டமைப்பும் கேட்கிறது

### எஸ்.பி.திஸாநாயக்க கூறுகின்றார்



கொழும்பு, ஓக.22
பிரபாகரன் கோரியதையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கோருகின்றது என்று கூறியுள்ளார் உயர் கல்வியமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க. நாடு மிக மோசமான காலகட்டமொன்றில் இருந்தபோது நாட்டைப் பொறுப்பேற்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாட்டைப் பாதுகாத்து அபிவிருத்தியை கட்டியெழுப்பியுள்ளார் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
"உலகிலுள்ள பயங்கரவாத அமைப்புகளில் முதலிடத்தில் புலிகள் இருந்ததுடன் வேறு எந்த பயங்கரவாதிகளிடமும் இல்லாத ஆயுதங்கள் நீர் மூழ்கிக் கப்பலுடன் உலகளாவிய வலையமைப்பும் இருந்தது. அரசிடம் கூட நீர் மூழ்கிக் கப்பல் இருக்கவில்லை. விமானப் பலம், கடற் பலம் என பலம் வாய்ந்த அமைப்பாக விளங்கிய புலிகள் மதத் தலைவர்களையும் அனைத்து மதத்தினரையும் வகை தொகையில்லாமல் கொன்றனர்.
இந்த கொடூர பயங்கரவாதத்தை இல்லாதொழித்தவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே. அவரது வழிகாட்டலில் இந்த நாட்டின் புத்திரர்களான படையினர் அர்ப்பணிப் புடன் செயற்பட்டு பயங்கரவாதத்தை ஒழித்தனர். நாடு சகல துறைகளிலும் வீழ்ச்சியடைந்து ஸ்தம்பித்துப் போயிருந்த நிலையில் மீள நாட்டை இயங்கச் செய்தவர் ஜனாதிபதியே.
ரணில் விக்கிரமசிங்க வடக்கு மக்களின் வாக்குகளைப் பெற்று வெல்ல முடியும் என எண்ணிக்கொண்டு செயற்படுகின்றார். வடக்கில் பிரபாகரன் கோரியதையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கோருகிறது. இதனை மக்கள் விரும்புவார்களா? கிழக்கு மக்கள் இதனை ஏற்பார்களா?. வடக்கு, கிழக்கில் மட்டுமன்றி நாடெங்கிலும் குண்டு வெடித்த யுகத்தை மக்கள் மீண்டும் விரும்புவார்களா?. நாடு தற்போது சுதந்திரமடைந்துள்ளது. அந்த நாட்டை நாம் அனைவரும் இணைந்து பாதுகாப்பது முக்கியமாகும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## பிரபா, திகாம்பரத்துக்கு பிரதி அமைச்சர் பதவி



கொழும்பு, ஓக.22
நாடாளுமன்ற உறுப்பினர்களான பிரபா கணேசன் மற்றும் பீ.திகாம்பரம் ஆகியோர் பிரதியமைச்சர்களாக பதவிப் பிரமாணம் செய்துகொண்டுள்ளனர்.
அலரி மாளிகையில் நேற்று முற்பகல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் இவர்கள் பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.
இதற்கமைய, தொலைத் தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்ப பிரதியமைச்சராக பிரபா கணேசனும், தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க பிரதியமைச்சராக பீ. திகாம்பரமும் பதவிப் பிரமாணம் செய்துகொண்டுள்ளனர். (ற)

## பெற்றோல், டீசல் விலைகளில் மாற்றங்கள் ஏதும் இல்லை

கொழும்பு, ஓக.22
பெற்றோல் மற்றும் டீசல் விலையில் திருத்தம் மேற்கொள்வது தொடர்பில் இது வரை உத்தேசம் இல்லை என்று பெற்றோலிய வளத் துறை அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.
நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.
ஆசியாவிலேயே பெற்றோல் தொடர்பில் நிலவும் குறைந்த விலைக்கே நாட்டில் பெற்றோல் கிடைக்கின்றது என்றும் அவர் சந்திப்பின்போது சுட்டிக் காட்டியுள்ளார். (ற)

## தடைசெய்யப்பட்ட இறைச்சியுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஓக.22
தடை செய்யப்பட்ட இறைச்சிகளுடன், சட்டவிரோத ஆயுதத்தை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
நவத்தேகம பொலிஸாரால் நேற்றுமுன்தினம் இவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ற)

## சீன வங்கியிடமிருந்து 2.6 பில். டொலர் கடன்

### பிரதி நிதி அமைச்சர் சரத் அமுனுகம நாடாளுமன்றில் தெரிவிப்பு



கொழும்பு, ஓக.22
சீன எக்ஸிம் வங்கியிடமிருந்து இலங்கை அரசு 2.6 பில்லியன் அமெரிக்க டொலர் கடனாக பெற்றுக்கொண்டுள்ளது. பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்காக இவ்வாறு கடன் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. 2009ஆம் ஆண்டு முதல் 2013ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இவ்வாறு கடன் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன - இவ்வாறு பிரதி நிதி அமைச்சர் சரத் அமுனுகம நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
"ஹம்பாந்தோட்டை துறைமுகம், கட்டுநாயக்கா அதிவேக நெடுஞ்சாலை, நுரைச்சோலை அனல்மின் நிலையம், வட மாகாண மின்சாரத் திட்டம் உள்ளிட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்காக இந்தக் கடன் பெற்றுக்கொள்ளப்பட்டது. 2 வீதம் முதல் 6.5 வீதம் வரையிலான வட்டியின் அடிப்படையில் கடன் பெற்றுக்கொள்ளப் பட் டுள்ளது.
மிகவும் திட்டமிட்ட வகையில் பல்வேறு காரணிகளை கருத்திற் கொண்டு இவ்வாறு கடன் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது"- என்று அவர் தெரிவித்துள்ளார்.
அதேவேளை, சீன எக்ஸிம் வங்கியிடமிருந்து கடன் பெற்றுக்கொண்டு அரசு பெருமளவில் தரகுப் பணத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது என்று எதிர்க்கட்சிகள் குற்றஞ்சுமத்தியுள்ளன. (ற)

## தங்கையை கத்தியால் குத்திய சிறுமி

கொழும்பு, ஓக.22
படல்குபுர பகுதியில் ஆறு வயது தங்கையை கத்தியால் குத்திக் கொன்றார் என்று கூறப்படும் 13 வயதுடைய சிறுமி ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
சந்தேகநபரால் தாக்குதலுக்கு இலக்கான பதிலா பானு எனப் படும் வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டு பின்னர் உயிரிழந்தார்.
அக்கா - தங்கை இருவருக்குள்ளும் ஏற்பட்ட முரண்பாடே கொலைக்குக் காரணம் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ற)

தமிழ் பேசும் மக்களின் சக்தி

# சக்தி FM யாழ் நேரலை

the capital maharaja organisation limited
Since 1930

## யாழ் மண்ணிலிருந்து உலகெங்கும்
## தமிழ் பேசும் மக்களின் சக்தி

யாழ் நல்லூரில்

# சக்தி வளாகம்




## ஆகஸ்ட்
## 18 - 24

உலகின் மிகப்பிரம்மாண்டமான
வானொலிக் கலையகம்
உங்கள் அன்பு அறிவிப்பாளர்கள்
ஏராளமான போட்டிகள்
அட்டகாசமான பரிசுகள்
தினமும் கலை நிகழ்ச்சிகள்

## அனைவரையும்
## அன்போடு அழைக்கின்றோம்

உத்தியோகபூர்வ பத்திரிகை

Shakthi சக்தி FM — Shakthi சக்தி TV — NEWS 1st — உதயன்

தமிழ் பேசும் மக்களின் சக்தி

நல்லூரான் சக்தி நாடெங்கும் பரவட்டும்

**104.1 / 103.9 FM**
**www.shakthifm.com**


## தொற்றா நோய்கள்; மீசாலை, இயற்றாலையில் பரிசோதனை முகாம்

தென்மராட்சி, ஓக.22
சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினரால் தொற்றா நோய்கள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கும் பரிசோதனை முகாமும் தென்மராட்சி பிரதேசத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. இதன் பிரகாரம் நாளை சனிக்கிழமை மீசாலை புத்தூர் சந்தி ஆரம்ப சுகாதார நிலையத்திலும், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வரணி - இயற்றாலை சரஸ்வதி சனசமூக நிலைய மண்டபத்திலும் இடம்பெறும். பரிசோதனை முகாமில் கண், பல், இரத்த அமுக்கம், நீரிழிவு உள்ளிட்ட பல் வேறு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்தப் பகுதிகளைச் சேர்ந்த 35 வயதுக்கு மேற்பட்ட அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சுகாதாரத் திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர். (ஓ-9)

---

நெஞ்சம் மறவாத

## 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் கிருஸ்ணபிள்ளை கணேசமூர்த்தி

(ஓடி கணேஸ்)

(வைரவர் கோவிலடி, பத்தமேனி, அச்சுவேலி)

| அன்னை மடியில் | அநியாய அழைப்பு |
| --- | --- |
| 27 | 03 |
| 07 | 09 |
| 1944 | 2002 |

திதி : துவாதசி
22.08.2014

அன்பான அப்பாவே!
எங்களைவிட்டுப் பிரிந்து
பன்னிரண்டு ஆண்டுகள் சென்றாலும்
பரிதவிக்கின்றது எங்கள் உள்ளம்

தந்தைபோல நல்ல தெய்வம் யாரும் இல்லையே?
உங்கள் உள்ளம் போல தெய்வம் கூட
ஆனதில்லையே அப்பா!
கோடிவரம் போலே மண்ணில் வந்த தெய்வமே!
உங்கள் அன்பிற்கு நிகர் யாரும் இல்லையே அப்பா!
நீங்கள் எங்களைவிட்டு சென்றதேனோ?

எங்கள் தேவை ஒவ்வொன்றும்
பார்த்துப் பார்த்துச் செய்துவிட்டு
பாதிவழியிலே ஊரில் உள்ள சிலரின் துரோகத்தால்
எம்மைப் பரிதவிக்கவிட்டு சென்றதேனோ அப்பா!

அழியாத உயிர்கொண்ட எம்தந்தையே!
நினைவோடு வாழ்கின்றீர் எம் உள்ளத்திலே
மீண்டும் ஓர் பிறப்பெடுத்து
எம்முன்னே வருவீரோ அப்பா.

அன்னார் எம்மைவிட்டுப் பிரிந்து
இன்று (22.08.2014) வெள்ளிக்கிழமை 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(51042) (7.6.3)

---

## முதலாம் வருட நினைவில்......



அமரர்
### சங்கரப்பிள்ளை நாகராஜா
(தம்பியண்ணா)

தோற்றம்
17.05.1940

மறைவு
01.09.2013

திதி: துவாதசி

குடும்பத்தின் குலவிளக்காய் குவலயம் போற்ற வைத்து
இமைப் பொழுதில் எமைப்பிரிந்து இமாலயம் சென்றாலும்
கணப்பொழுதும் உமை மறவோம் – உம்
ஆத்ம சாந்திக்காய் அனுதினமும் வேண்டிடுவோம்.

தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

உங்கள் நினைவுகளுடன் வாழும்
குடும்பத்தினர்.

(51022)(5.6.3)

---

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
### கைலாயபிள்ளை சிவலிங்கம்

**உதய நிலவாய்: 18.08.1934**
**இதய மலராய்: 01.09.2013**

**திதி: துவாதசி (22.09.2014)**

எங்கள் அன்புத் தெய்வமே!
ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் நிழலாக தொடருதப்பா
அன்பிற்கு இலக்கணமாய் பண்பிற்கு உறைவிடமாய்
மனைவிக்கு நல்ல கணவனாய்
பிள்ளைகளுக்கு நல்ல தந்தையுமாய்,
பேரக்குழந்தைகளுக்கு பாசமிகு பாட்டனுமாய்
அனைவர் உள்ளத்திலும் நீங்காத இடம்பெற்று
எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே!!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கதிரிப்பாய்,அச்சுவேலி.

மனைவி,பிள்ளைகள்.

(51032)(5.6.3)

---

# மரண அறிவித்தல்



## இளையதம்பி துரைசிங்கம்

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் ஆவரங்கால், சிவன் வீதியை வதிவிடமாகவும் கொண்ட இளையதம்பி துரைசிங்கம் 20.08.2014 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சிவனேஸ்வரியின் கணவரும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி-சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் மகனும், கந்தசாமி-நல்லபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், கன கம்மா, நல்லம்மா ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற பொன்னம்மாவின் மைத்துனரும், சுந்தரலிங்கத்தின் சகலனும் இரத்தினத்தின் மைத்துனரும், தங்கராசாவின் சகலனும், நவரட்ணராணி (UK), மனோன்மணி (உபதபாலதிபர் ஆவரங்கால்), காலஞ்சென்ற சிவராஜா (முன்னாள் பிரதேச சபை செயலாளர், பச்சிலைப்பள்ளி) மற்றும் விநாயகலிங்கம் (UK), வரதலக்ஷ்மி (UK), இரவீந்திரா (சுவிஸ்), கருணாகரன் (சுவிஸ்), நிமலா (UK) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீஸ்கந்தராஜா (Appex Engineering (pvt) Ltd.), தங்கராஜா (மலேசியா), கேதீஸ்வரி (ஆசிரியை, ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயம்), கணேஸ்வரி (UK), மாணிக்கவாசகர் (UK), திருச்செல்வம் (சுவிஸ்), கஜந்தினி (சுவிஸ்), சிவகுமார் (UK) ஆகியோரின் அன்பு மாமனும், லக்சிகா (UK), துளசிஜா (UK), நீபன், வைஸ்ணவி (ஸ்ரீ புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி), விதுர்சனா (நடராஜா இராமலிங்கம் வித்தியாலயம்) சிந்துஜன் (Royal Institute-Colombo), விதுர்ஷா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), விதுஜென் (சென் ஜோன்ஸ் கல்லூரி), சியானிஷா (நடராஜா இராமலிங்க வித்தியாலயம்), கோபிகன் (UK), துசிகன் (UK), பிரகலை (UK), வேணுகானன் (UK), ஆத்வன் (UK), திருசினி (சுவிஸ்), வேணுஜன் (சுவிஸ்), துசாந்தன் (சுவிஸ்), துசிந்தன் (சுவிஸ்), துசான் (சுவிஸ்), அஸ்வின் (UK) ஆகியோரின் அன்புப் பேரனும், சுந்தர்ராஜன், சுசீந்திரா, சுகுமார், சுரேந்திரன், சுரேஸ்குமார், தயானந்தன், ஜெயந்தினி, ஜெயந்தன் ஆகியோரின் பெரியதகப்பனும், காலஞ்சென்றவர்களான செல்வராஜா, சரஸ்வதி, சரோஜினிதேவி மற்றும் செல்வரத்தினம், தங்கராஜா, சகுந்தேஸ்வரி, யோகராஜா, விமலராணி, வரதராஜா, பத்மராணி, யோகசிவம், காலஞ்சென்ற வாமதேவன் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.08.2014) வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஆவரங்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிவன் வீதி, ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.**
**T.P: 021 205 8017, 077 022 0683**

(51117)
(10.6)

தகவல்:
**குடும்பத்தினர்.**

# வன்னியில் திடீர் மழையால் சிறுபோக அறுவடை பாதிப்பு

கிளிநொச்சி, ஓக.22
நீண்ட வறட்சியின் பின்னர் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் தற்போது பெய்து வரும் மழையினால் சிறுபோக நெற்செய்கை அறுவடை பாதிக்கப்படும் அபாய நிலை காணப்படுகின்றது.
கடந்த எட்டு மாதங்களாக நிலவி வந்த வறட்சியை அடுத்து தற்போது பரவலாக மாலை வேளைகளில் மழை பெய்து வருகின்றது.
இந்த நிலையில் கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழ் 500 ஏக்கர் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு தற்போது அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



குறித்த 500 ஏக்கரில் ஏறக்குறைய 85 ஏக்கர் வயல்களின் நெற் செய்கை இது வரை அறுவடை செய்யப்பட்டுள்ளது.
எஞ்சியவை அறுவடைக்குத் தயாராக உள்ளன. இந்த நிலையில் கடந்த சில தினங்களாகப் பெய்து வருகின்ற மழையினால் அறுவடை பாதிப்படையும் நிலைமை ஏற்பட்டுள்ளது.
இதேபோன்று, முல்லைத்தீவு உடையார்கட்டுக்குளத்தின் கீழ் 303 ஏக்கரில் மேற்கொள்ளப்பட்ட சிறுபோகச் செய்கையில் அரைவாசியே அறுவடை செய்யப்பட்டுள்ளது.
எஞ்சியவை அறுவடைக்குத் தயாரான நிலையில் உள்ளன.
தற்போது பெய்து வரும் மழையினால் அதன் அறுவடையும் பாதிக்கப்படும் நிலை காணப்படுகிறது.
கடந்த ஆண்டு நிலவிய வறட்சியைத் தொடர்ந்து விதை நெல் தேவையை பூர்த்தி செய்ய இந்தப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது.
இவ்வாறான காலநிலை நீடிக்குமானால் இந்த நெல்லை அறுவடை செய்து பாதுகாப்பதற்கு தாங்கள் சவால்களை எதிர்கொள்ள வேண்டி நேரிடும் என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (த-55)

## மேலதிக கள்ளை வைத்திருந்தோருக்கு தண்டப் பணம்

கிளிநொச்சி, ஓக.22
கிளிநொச்சியின் பல்வேறு பகுதிகளில் மதுவரித்திணைக்கள அதிகாரிகளால் ஒன்றரை லீற்றர் கள்ளுக்குப் பதிலாக மேலதிகமாக கள்ளை வைத்திருந்த 10 பேருக்குத் தலா ஆயிரம் ரூபா வீதம் தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது.
இந்த மாத முற்பகுதியில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மது வரித் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது மேலதிக கள் வைத்திருந்த 12 பேருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்த மதுவரித்திணைக்கள அதிகாரிகள் 10 பேரைக் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில முன்னிலைப்படுத்தினார்.
குறித்த 10 பேருக்கும் தலா ஆயிரம் ரூபா வீதம் 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. (த-55)

## 295 மலசலகூடங்கள், 10 கிணறுகள் கிளிநொச்சியில் அமைக்க ஏற்பாடு

கிளிநொச்சி, ஓக.22
கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேறிய குடும்பங்களுக்காக 295 மலசலகூடங்களும் 10 கிணறுகளும் இவ்வாண்டில் அமைக்கப் படவுள்ளன.
கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப் பள்ளி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இவை அமைக்கப்படவுள்ளன.
அந்த வகையில் 295 மலசல கூடங்கள் 14.75 மில்லியன் ரூபா செலவிலும், 10 கிணறுகள் 1.8 மில்லியன் ரூபா செலவிலும் அமைக்கப்படவுள்ளன. மீள்குடியேற்ற அமைச்சின் வேலைத் திட்டத்தின் கீழ் இவை அமைக்கப்படவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (த-55)



## வர்த்தக நிலையம் முன்பாக பஸ் தரிப்புக்கான குறியீடு

### பொதுமக்கள் பெரும் சிரமம்

மாங்குளத்தில் வர்த்தக நிலையமொன்றின் முன்பாக பஸ்கள் தரித்துச் செல்வதற்கான குறியீடு அமைக்கப்பட்டுள்ளதன் காரணமாக வர்த்தக நிலையத்துக்கு வரும் மக்கள் விபத்துக்குள்ளாகக்கூடிய அபாய நிலை காணப்படுகின்றது.
மாங்குளத்தில் மீள்குடியேற்றம் தொடங்கிய நாளில் இந்த வர்த்தக நிலையம் அமைக்கப்பட்டது. ஆனால் ஏ-9 வீதி புனரமைப்பின்போது இரவு வேளை தனது வர்த்தக நிலையத்துக்கு முன்னால் பஸ்கள் தரிப்பதற்கான குறியீட்டை வீதியைப் புனரமைத்தவர்கள் அமைத்துவிட்டார்கள் எனவும், வீதிப் போக்குவரத்துப் பொலிஸார் பஸ்களைத் தனது வர்த்தக நிலையத்துக்கு முன்னால் நிறுத்த வேண்டாமெனச் சாரதிகளிடம் கூறுமாறு வலியுறுத்தியதாகவும் குறிப்பிட்ட வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் தெரிவித்தார்.
தனது வியாபார நடவடிக்கைகளை பார்ப்பதா, அல்லது வீதியில் சென்று பஸ்களை நிறுத்த வேண்டாம் என்று கூறுவதா என தான் திண்டாடுவதாகவும் அவர் கூறினார்.
குறியீடுகளை தனது வர்த்தக நிலையங்களைத் தாண்டி ஒரு பொருத்தமான இடத்தில் அமைத்திருக்கலாம் எனவும் குறித்த வர்த்தகர் தெரிவித்தார். (த-18)

## ஒரு போத்தல் கசிப்புக்கு தண்டம் ரூ.15 ஆயிரம்

கிளிநொச்சி, ஓக 22
பிரமந்தனாறு, தம்பிராசபுரம் பகுதியில் ஒரு போத்தல் கசிப்பை வைத்திருந்த நபரொருவருக்கு கிளிநொச்சி நீதிமன்றம் நேற்று 15ஆயிரம் ரூபாவைத் தண்டப்பணமாக செலுத்தும்படி உத்தரவிட்டுள்ளது. (த-18)




முல்லைத்தீவு, மாங்குளம் நகரத்தில் எழுத்துப் பிழைகளுடன் பல இடங்களில் காணப்படுகிறது இந்த விளம்பரப் பலகை. பிளாஸ்ரிக், பொலித்தீன் பாவனையை தடை செய்யும் வகையில் அமைக்கப்பட்டுள்ள இந்த விளம்பரப் பலகையின் வாசகம் தமிழ் எழுத்துப் பிழைகளுடன் இருப்பதைக் காணலாம். (த-18)

## கோணாவிலில் கண்ணிவெடி விழிப்புணர்வு

கிளிநொச்சி, ஓக 22
கிளிநொச்சி கோணாவில் பகுதியில் சர்வோதய நிறுவனத்தினால் கண்ணிவெடி விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் பல்வேறு பகுதிகளிலேயே சர்வோதய நிறுவனத்தினால் இந்தக் கண்ணிவெடி விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
முதற்கட்டமாகக் கோணாவிலில் இந்த விழிப்புணர்வுச் செயற்பாடு இடம்பெற்று வருகின்றது. (த-55)



## மாங்குளம் நகரப் பகுதியில் பஸ் தரிப்பிடங்கள் இல்லை

முல்லைத்தீவு.ஓக.22
மாங்குளம் நகரத்தில் பஸ் தரிப்பிடங்கள் இல்லாததன் காரணமாகப் பயணிகள் பெரும் இடர்களை எதிர் கொண்டுள்ளனர்.
முல்லைத்தீவு, துணுக்காய், கிளிநொச்சி, வவுனியா ஆகிய நகரங்களுக்கு பயணிக்கும் மக்கள் ஒன்றுகூடும் மாங்குளம் நகரத்தில் பஸ் தரிப்பிடம் இல்லாத நிலை காணப்படுகின்றது.
கிளிநொச்சி பக்கமாகத் தகரத்தினாலான சிறிய பஸ் தரிப்பிடத்தைத் தவிர வேறு எதுவும் இல்லாமையால் துணுக்காய், வவுனியா, முல்லைத்தீவு நகரங்களுக்குச் செல்லும் மக்கள் நீண்டநேரம் வீதியில் பஸ்ஸுக்காகக் காத்து நிற்க வேண்டிய அவலம் காணப்படுகின்றது. அத்துடன் வெயில், மழை காலங்களில் பயணிகள் பெரும் இடர்களை எதிர்நோக்குகின்றனர். பஸ் நிலையத்தைப் பொருத்தமான இடத்தில் அமைக்க வேண்டுமெனப் பயணிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (த-18)

## சிறந்த வீட்டுத்தோட்ட செய்கையாளர் கிளிநொச்சி மாவட்டத்திலும் தெரிவு

கிளிநொச்சி, ஓக.22
வட மாகாண விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சின் அறிவுறுத்தலுக்கமைய வடமாகாண விவசாயத் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட விரிவாக்க அலுவலகத்தினால் இந்த ஆண்டுக்கான சிறந்த வீட்டுத் தோட்ட செய்கையாளர்களை மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் அ.செல்வராசா தெரிவித்துள்ளார்.
தெரிவுக்கான மதிப்பீட்டில் கீழ்க் குறிப்பிடப்படும் விடயங்களில் கூடிய கவனம் செலுத்தப்படும்.
1.நீர், நில வளங்களின் வினைத் திறனான பயன்பாடு
2.சேதன விவசாய, ஒருங்கிணைந்த விவசாய செயற்பாடுகள்
3.இயற்கைக் கழிவுகளின் மீள் சுழற்சி நடவடிக்கைகள்
4.தொடர் உற்பத்தியை பெறுவதற்கான நடவடிக்கைகள்
5.சூழலோடு நட்பான பீடை, நோய் முகாமைத்துவ முறைகள்
6.தேனீ வளர்ப்பு, காளான் செய்கை
7.பெறுமானம் சேர் உற்பத்திகளின் தயாரிப்பும் பயன்பாடும்
போட்டியில் கலந்து கொள்ள விரும்புவோர் விண்ணப்பப்படிவங்களை சம்பந்தப்பட்ட விவசாயப் போதனாசிரியர் அலுவலகத்தில் அல்லது மாவட்ட விவசாய (விரிவாக்கம்;) காரியாலயத்தில் இருந்து பெற்றுப் பூரணப்படுத்தி செப்ரெம்பர் 10ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும்.
முதற்கட்டத் தெரிவு, விவசாயப் போதனாசிரியர் மட்டத்தில் இடம் பெற்று 3 சிறந்த செய்கையாளர்கள் தெரிவு செய்யப்படுவர்.
இவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
இரண்டாம் கட்டத் தெரிவு, விவசாயப் போதனாசிரியர் மட்டத்தில் முத லிடம் பெற்றவர்கள் மத்தியில் நடத் தப்பட்டு, மாவட்ட மட்டத்தில் மூன்று வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு, பெறுமதி வாய்ந்த பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்படுவர் என அவர் தெரிவித்தார். (த-18)

# வெளி மாவட்ட பஸ்களுக்கு தரிப்பிடம் இன்னும் இல்லை

## நிலவாடகை செலுத்தி தனியார் காணியில் செயற்படும் நிலை

**மாநகர சபை நிலவாடகை பெறுவதில் மட்டும் குறியாகவுள்ளது. ஆனால் நிரந்தரமான பஸ் தரிப்பிடத்தை அமைத்துக் கொடுப்பதில் எவரும் அக்கறை எடுக்கவில்லை.**

யாழ்ப்பாணம், ஓக.22
யாழ்.மாவட்டத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்கான சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களுக்கான நிரந்தர பஸ் தரிப்பிடம் இன்னும் ஏற்படுத்தப்படவில்லை. தொடர்ந்தும் நிலவாடகை செலுத்தித் தனியார் காணியில் செயற்படும் நிலையிலேயே பஸ் உரிமையாளர்கள் உள்ளனர்.

வெளி மாவட்டங்களுக்கான தனியார் பஸ் தரிப்பிடம் இல்லாத காரணத்தால் சேவையில் ஈடுபடும் பஸ்கள் யாழ். முனீஸ்வரன் வீதியிலும், ஸ்ரான்லி வீதி ஒழுங்கையிலும் என் மாறி மாறித் தரித்து நின்று சேவையில் ஈடுபட்டு வருகின்றன. ஸ்ரான்லி வீதி ஒழுங்கையில் அமைக்கப்பட்ட பஸ்தரிப்பிடக் காணியில் குளப் புனரமைப்பு இடம்பெறுவதால் யாழ்.முனீஸ் வரன் வீதிப் பகுதியில் இருந்து சிறிது காலம் சேவை இடம்பெற்றது. இந்த நிலையில் மீண்டும் ஸ்ரான்லி வீதி ஒழுங்கைப் பகுதிக்கு பஸ் தரிப்பிடம் மாற்றப்பட்டுள்ளது.

இந்த பஸ்தரிப்பிடக் காணி தனியாருக்குச் சொந்தமாக இருப்பதால் காணி உரிமையாளர் அதற்கான நில வாடகையை வழங்குமாறு கோரியுள்ளார். இதற்கமைவாக; ஒவ்வொரு பஸ் உரிமையாளர்களிடமும் இருந்து ஒரு பஸ்ஸுக்கான நில வாடகையாக 40 ரூபா வீதம் அறவிடப்பட்டு வருகிறது. இதில் மாநகர சபைக்கு 10 ரூபா வழங்கப்பட்டு வருகிறது. தனியார் பஸ்களுக்கு பஸ் தரிப்பிடம் ஏற்படுத்தித் தருமாறு வடக்கு மாகாண சபையிடம் கோரிக்கை முன்வைத்த போதும் இது தொடர்பான நடவடிக்கைகள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்பட வில்லை என பஸ் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். மாநகர சபை நிலவாடகை பெறுவதில் மட்டும் குறியாகவுள்ளது. ஆனால் நிரந்தரமான பஸ் தரிப்பிடத்தை அமைத்துக் கொடுப்பதில் எவரும் அக்கறை எடுக்கவில்லை என அவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (கு-14)

### பாலாவிவாசிக்கு அழைப்பாணை

தென்மராட்சி, ஓக.22
பொலிஸ் நிலைய முறைப்பாட்டுக் கொப்பியில் முறைப்பாடு பதிவு செய்த பின்னர் அதில் கையொப்பமிட மறுத்த பாலாவிவாசியை நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை அனுப்ப நீதிமன்றில் நேற்று முன்தினம் பதிவாளருக்கு உத்தரவிடப்பட்டது.

பாலாவியைச் சேர்ந்த இந்த நபர் பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு செய்ய வந்து முறைப்பாட்டுப் புத்தகத்தில் வாக்குமூலம் பதிவு செய்த பின்னர் அதில் கையொப்பமிட மறுத்து வெளியேறியுள்ளார்.

இதனையடுத்து இது தொடர்பாக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

இதனை விசாரித்த நீதிவான் குறித்த நபரை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை அனுப்ப பதிவாளருக்கு உத்தரவிட்டார். (கு-9)

### போதையில் குழப்பம் செய்தவருக்கு 80 மணித்தியாலச் சமூகப் பணி

தென்மராட்சி, ஓக.22
மதுபோதையில் குழப்பம் விளைவித்த மந்துவில் வாசியொருவருக்கு 80 மணி நேர சமூகப் பணியில் ஈடுபடுமாறு சாவகச்சேரி நீதிமன்றால் உத்தரவிடப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிவான் குறித்த நபரை நீதிமன்ற சமூக சீர்திருத்தப் பிரிவு மூலம் ஆறு மாதம் காலத்துக்கு 80 மணி நேரம் சமூகப் பணியில் ஈடுபடுத்துமாறு உத்தரவிடப்பட்டது. இதேவேளை- 80 மணி நேர சமூகப் பணியில் ஈடுபடுமாறு ஏற்கனவே உத்தரவிடப்பட்ட நுணாவில் வாசியொருவர், எட்டு மணி நேரப் பணியின் பின்னர் சமூகப் பணியில் ஈடுபட வரவில்லையென நீதி மன்ற சமூக சீர் திருத் தப் பிரிவு உத்தியோகத் தரால் நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. (கு-9)



யாழ்.நகரப் பகுதியில் துர்நாற்றம் வீசும் நிலைமை காணப்பட்டு வருவதாகப் பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். யாழ். ஆஸ்பத்திரி வீதி, காந்திஜீ வீதி உள்ளிட்ட நகரின் முக்கிய வீதிகளில் உள்ள வாய்க்கால்கள் துப்புரவு செய்யப்படாததால் துர்நாற்றம் வீசுகின்றன. யாழ்.போதனா வைத்தியசாலையைச் சுற்றியுள்ள கால்வாய் புற்கள் நிறைந்து காணப்படுவதால், கழிவு நீர் பாய்ந்தோட முடியாமல் தேங்கி நிற்கின்றது. (கு-106)

### போலி நகை வங்கியில் அடைவு; பெண் கைது

தென்மராட்சி, ஓக.22
தங்க முலாம் பூசப்பட்ட ஆபரணத்தை கைதடி இலங்கை வங்கிக் கிளையில் அடைவு வைக்க முயன்ற பெண்ணொருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். கிளை முகாமையாளர் கொடுத்த முறைப்பாட்டை அடுத்து அங்கு விரைந்த சாவகச்சேரி பொலிஸார் குறித்த பெண்ணைக் கைது செய்தனர்.

இவரை நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தியபோது 50ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். (கு-9)

### சாவகச்சேரி மருத்துவமனையில் புதிய பார்வையாளர் மண்டபம்

நாளை மறுதினம் திறப்பு



தென்மராட்சி, ஓக.22
சாவகச்சேரி ஆதார மருத்துவமனை வளாகத்தில் அமரர் வ.பொன்னுச்சாமி குடும்பத்தினரால் நிர்மாணித்து வழங்கப்படும் பார்வையாளர் மண்டபம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமைமு.ப.10.30மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

சாவகச்சேரி ஆதார மருத்துவமனை நோயாளர் நலன்புரி சங்கத் தலைவர் யோ.ஜெயக்குமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் கலந்து கொள்வார்.

மருத்துவமனை விடுதிகளில் தங்கியிருப்போரைப் பார்வையிட வரும் பார்வையாளர்களின் நலன்கருதி இந்த மண்டபம் அமரர்களான வ.பொன்னுச்சாமி, திருமதி ந.பொன்னுச்சாமி, பொ.உருத்திரன் ஆகியோரின் நினைவாக அமைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (கு-9)

# வறட்சியால் தவிக்கும் மக்களுக்கு குடிதண்ணீர் வழங்க இயலாத நிலை

**போதிய பவுஸர் வாகனங்கள் இல்லாமையால் இந்த நிலை என்கிறது கரவெட்டிப் பிரதேச சபை**

கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கு வேண்டிய குடிதண்ணீர் வழங்குவதற்கு போதிய பவுஸர்கள் இன்மையால் பொதுமக்களுக்கு வேண்டிய நீரை வழங்க முடியாதுள்ளதாகப் பிரதேச சபையினர் தெரிவிக்கின்றனர்.

கரவெட்டிப் பிரதேச செயலகப் பிரிவில் 35 கிராம சேவகர் பிரிவுகள் உள்ள போதும் 15 கிராமசேவகர் பிரிவுகளில் குடிதண்ணீர் வசதி யின்றி மக்கள் அல்லலுறும் நிலை காணப்படுகின்றது.

தற்போது நிலவும் வறட்சி நிலை காரணமாக கரணவாய் மேற்கு, கரணவாய், கரவெட்டி கிழக்கு, உடுப்பிட்டி, உடுப்பிட்டி வடக்கு, கரவெட்டி மேற்கு, கரவெட்டி வடக்கு மத்தொனி, கரவெட்டி மத்தி, கரவெட்டி கிழக்கு கட்டைவேலி, துன்னாலை தெற்கு, துன்னாலை கிழக்கு, துன்னாலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் குடிதண்ணீர் வசதியின்றி பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றன.

இவர்களுக்கு வேண்டிய குடிதண்ணீர் வசதியை வழங்குவதற்கு தேவையான பவுஸர் வசதிகள் பிரதேச சபையிடம் இல்லாத நிலை காணப்படுகின்றது. இதனால் தினமும் பொதுமக்களுக்கு நீர் வழங்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளதால் ஒன்றுவிட்ட ஒரு நாள் என்ற அடிப்படையிலேயே குடிதண்ணீர் விநியோகம் இடம்பெற்று வருவதாகவும், மேலதிக பவுஸர் கிடைக்கும் பட்சத்தில் தினமும் நீர் விநியோகம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதேச சபையினர் தெரிவித்தனர். (கு-108)

## 50 ஆவது ஆண்டு நயினாதீவு - நல்லூர் பாதயாத்திரை நேற்று ஆரம்பம்

50 ஆவது ஆண்டு நயினை - நல்லூர் திருத்தலப் பஜனைப் பாதயாத்திரை நேற்று வியாழக்கிழமை ஆரம்பமானது. நேற்று நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூசை வழிபாட்டின்பின் காலை 8 மணிக்கு வேலுடன் திருத்தலப் பஜனைப் பாதயாத்திரை ஆரம்பமானது.

இந்தத் திருத்தல யாத்திரை குறிகாட்டுவான், புங்குடுதீவு, வேலணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்டைதீவு, பண்ணை, யாழ்ப்பாணம், வில்லூன்றி, கந்தர்மடம் வழியாக எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நல்லூர்த் தேர்திருவிழா அன்று காலை நல்லூரை வந்தடையும். இதேவேளை- நாளை சனிக்கிழமை மாலை யாழ். நகர் சத்திரம் ஞானவைரவர் ஆலயத்தை வந்தடையும். இந்தத் திருத்தல யாத்திரைக் குழுவினர் அங்கு பஜனை வழிபாடுகளில் ஈடுபடுவர். தொடர்ந்து நயினை - நல்லூர் 50 ஆவது பொன்விழா மலர் வெளியீடு, சிறப்பு சொற்பொழிவுகள் என்பன இடம்பெறும். (கு-17)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## முஸ்லிம் தலைவர்கள் தலையிடுவார்களா?

இலங்கையிலுள்ள முஸ்லிம் குழுக்கள் சில சர்வதேச இஸ்லாமிய அமைப்புகளுடன் தொடர்பைப் பேணி வருகின்றமை தொடர்பில் தமக்குத் தகவல் கிடைத்திருப்பதாகவும் அவற்றின் நடவடிக்கைகளைத் தாம் உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாகவும் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளரான கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அமெரிக்காவின் சிக்கல்களுக்கான நடவடிக்கை மையத்துக்கு அவர் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. முஸ்லிம் தீவிரவாதக் குழுக்கள் இலங்கைக்குள் ஊடுருவியுள்ளன, இவை இந்தியாவுக்குள் குண்டுத்தாக்குதல்களை நடத்த இலங்கையைத் தளமாகக் கொண்டு இயங்குகின்றன என்று ஏற்கனவே குற்றச்சாட்டுகள் எழுப்பப்பட்டு வந்தன. முஸ்லிம் தீவிரவாதம் குறித்து அடிக்கடி குரல் எழுப்பும் பொது பல சேனா அமைப்பும் இலங்கையிலுள்ள மூன்று குறிப்பிடத்தக்க முஸ்லிம் அமைப்புகள் உட்பட அனைத்து முஸ்லிம் அமைப்புகளையும் குறிவைத்துப் பிரசாரம் நடத்தி வருகிறது. இலங்கையிலுள்ள முஸ்லிம் அமைப்புகள் சர்வதேச முஸ்லிம் தீவிரவாதக் குழுக்களுடன் தொடர்புகொண்டிருப்பதாக குற்றம்சாட்டுகிறது. தற்பொழுது பாதுகாப்புச் செயலரும் வாய் திறந்துள்ளார். "இனக் குழுக்களிடையே மதவாதம் தலைதூக்குவதே யுத்தத்துக்குப் பிந்திய இலங்கையின் கரிசனைக்குரிய விடயமாக உள்ளது. அதற்குத் தீர்வு காணாவிட்டால் எதிர்காலத்தில் இன ரீதியான பதற்றநிலை தலைதூக்கலாம். போர்க் காலத்தில் புலிகளால் முஸ்லிம்களும் பாதிக்கப்பட்டனர். இதன் பின்னர் முஸ்லிம்கள் தங்களது பாதுகாப்பை தாங்களே உறுதிசெய்து கொண்டனர். புலிகளின் தோல்விக்குப் பின்னர் இந்தக் குழுக்கள் பாதுகாப்பு என்ற நிலையிலிருந்து விலகி வேறு பாதையில் செல்ல முயற்சிக்கின்றன. குறிப்பாக சர்வதேச இஸ்லாமிய அமைப்புகளுடன் இவை தொடர்பை ஏற்படுத்திக் கொண்டுள்ளன என்ற தகவல் வெளியாகியுள்ளது" - என்று அமெரிக்காவின் சிக்கல்களுக்கான நடவடிக்கை மையத்துக்கு பாதுகாப்புச் செயலர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

பொதுபலசேனா என்ற அமைப்பு உருவாக்கப்பட்ட பின்பு அந்த அமைப்பு முஸ்லிம்களைக் குறிவைத்து செயற்பட்டு வருகிறது. அவர்களின் மத வழிபாட்டு உரிமைகள் மறுக்கப்படுகின்றன. அவர்களது வர்த்தக நிலையங்கள் தாக்கப்படுகின்றன. இலங்கையிலுள்ள முஸ்லிம் அமைப்புகளை வளர விட்டால் நாட்டுக்குப் பேராபத்து ஏற்படும் என்ற எண்ணத்தை தென்னிலங்கையில் உருவாக்குவதில் பொதுபலசேனா குறிப்பிடத்தக்க வெற்றியை ஈட்டியுள்ளது. முஸ்லிம்கள் திட்டமிட்டு குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்படுகின்றனர். இப்படியான நிலையில் பாதுகாப்புச் செயலரின் குற்றச்சாட்டு முஸ்லிம்கள் மத்தியில் பலதரப்பட்ட சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது. முஸ்லிம் தீவிரவாதம் குறித்து பல தடவைகள் குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்பட்டுவிட்டன. ஆனால் இதுவரை இந்தக் குற்றச்சாட்டுகளை நிரூபிக்க முடியவில்லை. எவரும் கைதாகவில்லை. இந்த நாட்டின் முஸ்லிம்களுக்கு தீவிரவாதத்தில் நம்பிக்கை இல்லை. அவர்களது செயற்பாடுகள் முற்றிலும் மார்க்க ரீதியாகவே உள்ளன. இலங்கையில் ஸ்ரீலங்கா தவ்ஹீத் ஜமா அத், அகில இலங்கை தவ்ஹீத் ஜமா அத், ஜமா அத் - ஈ - இஸ்லாமி உட்பட பல முஸ்லிம் அமைப்புகள் இயங்கி வருகின்றன. இவற்றுள் ஸ்ரீலங்கா தவ்ஹீத் ஜமா அத் அமைப்பு மட்டும் தனித்து மார்க்க விடயங்களில் மட்டுமன்றி பொதுமக்களின் பிரச்சினைகளிலும் தலையிட்டு வருகிறது. பொதுமக்களைத் திரட்டி அநீதிகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்துகிறது. எனினும் நாட்டின் சட்ட திட்டங்களை அது மீறியதில்லை. அரசு நடத்திய விசாரணைகள் மூலம் வெளிநாடுகளில் இருந்து பணம் கூட அதற்கு வருவதில்லை என்று கூறப்படுகிறது. மற்றைய அமைப்பான அகில இலங்கை தவ்ஹீத் ஜமாஅத் மார்க்க விடயங்களில் முழுமையாக ஈடுபடுகிறது. பள்ளிவாசல்களை நிர்மாணிப்பதில் கூடுதல் அக்கறை செலுத்துகிறது. ஜமாஅத் - ஈ - இஸ்லாமி ஒரு தொண்டு நிறுவனம் போன்று செயற்படுகிறது. பொதுபல சேனா இந்த மூன்று அமைப்புகளையும் குறிவைத்து எதிரிகளாகப் பார்க்கிறது. இந்த அமைப்புகள் பாரம்பரிய முஸ்லிம்கள் மத்தியில் தோன்றிய தீவிரவாத அமைப்புகள் என்று குற்றம் சாட்டுகிறது. இந்த அமைப்புகள் வளர்ந்துவருவது நாட்டுக்கு ஆபத்து என்று பகிரங்கமாகக் கூறுகிறது. இலங்கையில் குர்ஆன் சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டுவிட்டது. ஹதீஸ் எனப்படும் நபிகள் நாயகத்தின் வாழ்க்கை வரலாற்றின் ஒரு பகுதியும் சிங்களத்தில் வெளிவந்துவிட்டது. மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைக்குச் செல்வோரில் சிலர் இலங்கை திரும்பியதும் இஸ்லாத்துக்கு மதம் மாறுகிறார்கள். பொதுபல சேனா இந்த அமைப்புகள் மீது கண்வைக்க இவையும் காரணமாக இருக்கலாம். பாதுகாப்புச் செயலரின் குற்றச் சாட்டுக்குறித்து அரசில் உள்ள முஸ்லிம் அமைச்சர்கள் கவனம் செலுத்துவது அவசியமாகும். இது இன்றைய நிலையில் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதற்கு ஒப்பானதாகும்.

# முஸ்லிம் தலைமைகளுக்கு விழிப்பு ஏற்படுமா?



சேரலாதன்

பலஸ்தீனத்தின் காஸாப் பகுதியில் இஸ்ரேல் படையினரின் தாக்குதல்களுக்கு உள்ளாகித் தவிக்கும் மக்களுக்கு இலங்கை அரசு பத்து மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி வழங்கியதை ஒரு மனிதாபிமானச் செயலெனக் கொள்ள முடியும். தற்போது இலங்கை மக்கள் படுமோசமானதொரு பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கும் நிலையிலும் இந்த மனிதநேய உதவி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் பலஸ்தீனத்தின் தோழன் எனத் தன்னை அழைத்துக்கொள்ளும் இலங்கை அரசு காஸா மீதான இஸ்ரேலின் படை நடவடிக்கையைக் கண்டித்து ஒரு வார்த்தை தானும் வெளியிடாமல் இருப்பது தொடர்பாகப் பரவலான குற்றச்சாட்டுக்கள் எழுந்த நிலையில் அதனைத் தணிப்பதற்கான ஒரு தந்திரோபாயமே இந்த நிதியுதவி என்பதை சாதாரண மக்களும் புரிந்து கொள்வார்கள். ஆனால் அரசுடன் ஒட்டிக் கொண்டிருக்கும் முஸ்லிம் தலைகள் சில இந்தச் செயலை வெகுவாகப் புகழ்ந்து பாராட்டியுள்ளன. பலஸ்தீனத்தின் ஆபத்பாந்தவன் இலங்கையே என்றும் அவை புகழாரம் சூட்டியுள்ளன. ஆனால் இஸ்ரேல் நாட்டினுடனான இலங்கையின் தொடர்பு மிகவும் ஆழமானது. விடுதலைப் புலிகளுடனான போரின் போது இஸ்ரேல் நாட்டின் ஆயுத உபகரணங்கள் பெரிதும் பயன்படுத்தப்பட்டன. இதைவிட இஸ்ரேல் படைத்துறைசார் வல்லுநர்களின் ஆலோசனைகளும் பெறப்பட்டன. போரின்போது தமிழர் பிரதேசங்களில் அமைக்கப்பட்ட மண் அணைகள் இந்த ஆலோசனைகளில் ஒன்றாகும்.

இதேவேளை - முஸ்லிம் நாடுகளுடன் நட்புரிமை பூண்டுள்ளதாகக் கூறிக் கொள்ளும் இலங்கை தனது நாட்டில் வாழுகின்ற முஸ்லிம் இனத்தவருக்கு இழைக்கப்படும் அநீதிகளைக் கண்டும் காணாத நிலையில் உள்ளது.

கடந்த வாரம் திருகோணமலை வெள்ளை மணல், கருமலையூற்றுப் பகுதியில் அமைந்திருந்த 400 வருடங்கள் பழைமை வாய்ந்த பள்ளிவாசல் படையினரால் இடித்தழிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மூன்று தினங்கள் கடுமையான காற்றுடன் கூடிய மழை பெய்த நிலையில் இதனைச் சாதகமாகப் பயன்படுத்திய படையினர் பள்ளிவாசலை இடித்தழித்ததாக சம்பவத்தை அவதானித்த மக்கள் தெரிவித்துள்ளனர். பள்ளிவாசல் அமைந்திருந்த இடத்திலிருந்து கனரக வாகனங்களின் இரைச்சல் சத்தத்தைக் கேட்ட மக்கள் அங்கு செல்ல முற்பட்ட போது படையினர் அதற்கு அனுமதிக்கவில்லை. வேறு வழியில்லாமல் ஒரு சிலர் வள்ளமொன்றை எடுத்துக் கொண்டு, கடலுக்குள் சென்று குறிப்பிட்ட இடத்தைப் பார்த்தபோது படையினரின் பிரசன்னத்துடன் இந்தப் பள்ளிவாசல் இடிக்கப்படுவதைக் கண்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

பள்ளிவாசலும் அதனோடு இணைந்த பகுதிகளும் 2009 ஆம் ஆண்டு படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தன. இதனால் அங்கு வாழ்ந்த 350 குடும்பங்கள் இடம்பெயர வேண்டிய அவலநிலை ஏற்பட்டது. ஆனால், முஸ்லிம் தலைவர்களெனக் கூறிக் கொள்பவர்கள் பள்ளிவாசலை விடுவிப்பதாகவும், இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியமர்த்துவதாகவும் அவ்வப்போது கூறிய போதிலும் எதுவுமே நடக்கவில்லை. அவர்கள் இதில் கூடிய அக்கறை செலுத்தியிருந்தால் பள்ளிவாசலுக்கு இன்று இத்தகையதொரு அவலநிலை ஏற்பட்டிருக்கமாட்டாதென அந்தப் பகுதியைச் சேர்ந்த முஸ்லிம் மக்கள் மட்டுமல்ல ஏனைய பிரதேசங்களில் வாழுகின்றவர்களும் கவலை தெரிவிக்கின்றனர். மேலும், தம்புள்ளை, கொழும்பு கிராண்பாஸ் ஆகிய இடங்களில் அமைந்திருந்த பள்ளிவாசல்களுக்குச் சேதம் விளைவிக்கப்பட்ட நிலையில் தற்போது இந்தப் பழைமை வாய்ந்த பள்ளிவாசலும் திட்டமிட்ட வகையில் அழிக்கப்பட்டமை முஸ்லிம் மக்களைக் கொதிப்படையச் செய்துள்ளது.

ஆனால் பதவிச் சுகம் ஒன்றையே தமது ஒரே குறிக்கோளாகக் கொண்டு அரசுடன் ஒட்டிக்கொண்டிருக்கும் முஸ்லிம் அரசியல்வாதிகள் வழக்கம்போல கடிதம் எழுதுவதிலும், அறிக்கை வெளியிடுவதிலும் காலத்தைக் கடத்தி வருகின்றனர். நாடாளுமன்றத்தில் அரசின் பாதுகாவலன் போன்று செயற்பட்டு எதிரணியுடன் எதற்கெடுத்தாலும் தர்க்கம் புரிந்து வரும் நாடாளுமன்ற உறுப்பினரும், ஊடகத்துறை மேற்பார்வையாளர் என்ற அந்தஸ்தில் இருப்பவருமாகிய ஏ.எச்.எம். அஸ்வர் இந்தச் சம்பவத்துக்கு எதிராக ஒரு சொல் தானும் வெளிப்படுத்தவில்லை. வழக்கம் போன்று ஜனாதிபதியின் கவனத்துக்கு இதனைக் கொண்டு வந்ததாகக் கூறியதுடன் ஓய்ந்துவிட்டார். நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு நியமிக்கப்படவில்லை என்ற ஒரே காரணத்தை கூறி ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகி ஆளும் தரப்புடன் இணைந்த அஸ்வர் ஜனாதிபதியின் விசுவாசத்தைப் பெற வேண்டும் என்பதற்காகவே நாடாளுமன்றத்திலும் வெளியிலும் செயற்பட்டு வருபவர். இவர் இன்னமும் தமது பதவியில் ஒட்டிக் கொண்டிருப்பதைக் காண முடிகின்றது.

இவர் இப்படியென்றால் கிழக்கு மாகாண முதலமைச்சர் இன்னமும் ஒருபடி உயர்ந்த நிலையில் காணப்படுகின்றார். கருமலையூற்றுப் பள்ளிவாசல் படையினரால் இடித்து அழிக்கப்படவில்லையெனவும் கடுமையான காற்று மற்றும் மழை காரணமாகவே இடிந்து வீழ்ந்துள்ளதாகவும் கிழக்கு மாகாணக் கட்டளைத் தளபதி கூறியதை நியாயப்படுத்தும் வகையில் கிழக்கு மாகாண முதலமைச்சர் நடந்து கொண்டதை எந்த முஸ்லிம் மகனும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. காற்று மற்றும் மழை காரணமாக அந்தப் பள்ளிவாசல் இடிந்து வீழ்ந்திருக்கலாமென முதலமைச்சர் கூறியமை அவரது அரச விசுவாசத்துக்கு மகுடம் சூட்டியதைப் போன்று உள்ளது. ஜனாதிபதியின் முதலமைச்சர் தெரிவு மிகச் சரியானது என்பதையும் அவர் நிரூபித்துள்ளார். செயற்றிறன் இல்லாதவர், தீர்மானங்களைக் கிடப்பில் போட்டு விட்டுத் தூங்குபவர் என்ற குற்றச் சாட்டுக்கள் இவர்மீது தெரிவிக்கப்பட்டாலும், இவரது அரச விசுவாசம் அவற்றையெல்லாம் முறியடித்து விடும். தமது இனத்தைவிட அந்த விசுவாசமே உயர்ந்தது என்பதை அவர் நிரூபித்துள்ளார்.

இந்த நிலையில் திருகோணமலை சீனன்குடாவில் விமானப் பராமரிப்பு நிலையமொன்றை அமைப்பதற்கென 1,200 ஏக்கர் நிலம் நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் சீனாவுக்கு ஒதுக்கப்படவிருப்பதால் சுமார் 450 தமிழ், முஸ்லிம் குடும்பங்கள் நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்படவுள்ளன.

ஏற்கனவே, சம்பூரிலிருந்து தமிழர்கள் வெளியேற்றப்பட்டதும், வடக்கிலுள்ள வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் 6,300 ஏக்கர் பொதுமக்களின் காணி பறிக்கப்பட்டதும் தமிழர்களுக்கு மாறாத சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் இன்னொரு சிறுபான்மை இனமான முஸ்லிம்களும் குறிவைக்கப்பட்டுள்ளமை இந்த நாட்டில் சிறுபான்மை மக்களின் எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்கியுள்ளது.

# வறட்சியே தூர விலகிவிடு

ராஜகுமாரன்

நீண்ட வறட்சிக்குப் பின்னர் வடபகுதி மக்கள் மீது வருண பகவானின் கடைக்கண் பார்வை இப்போது மெல்ல மெல்லப் பதிந்து வருவதைக் காண முடிகின்றது. கடந்த சில தினங்களாக வடபகுதியின் அனேகமாக சகல பகுதிகளிலும் ஓரளவு மழை பெய்து வருகின்றது.



மழை பொய்த்து இலங்கையின் வட பகுதி பாலைவனமாக மாறி விடுமென எதிர்வு கூறப்பட்டதற்கு ஏற்ப வடபகுதி மக்கள் கடந்த ஆண்டும், இந்த ஆண்டும் வறட்சியின் கொடுமையைப் போதும் போதுமென்று கூறுமளவுக்கு அனுபவித்து விட்டார்கள். வறண்டு போய்க் கிடக்கும் ஆபிரிக்கக் கண்டத்தின் சில பகுதிகளில் வாழுகின்ற மக்களைப் போன்றதொரு அவல நிலை இங்கு வாழும் மக்களுக்கும் ஏற்பட்டது. வறட்சியினால் ஏற்படும் முதலாவது பாதிப்பு தண்ணீருக்கான தட்டுப்பாடுதான். தண்ணீர் இல்லாவிட்டால் எல்லாமே இல்லாதது மாதிரித்தான். இதனால் தான் 'நீரின்றி அமையாது உலகு' என்று கூறினார்கள். வட பகுதியிலுள்ள வன்னிப் பிரதேசத்தின் பல பகுதிகளிலும், யாழ்.குடாநாட்டின் தீவகப் பிரதேசங்களிலும் வறட்சியின் அவலங்களை அதிகளவில் காண முடிந்தது. அருந்துவதற்கு நீர் கிடைக்காத நிலையில் மக்கள் அங்கு மிங்கும் அலைந்து திரிந்தமை பார்ப்பதற்கு வேதனையைத் தந்தது. சில இடங்களில் குளிப்பதற்கும், ஆடைகளைத் துவைப்பதற்கும் கூட நீர் கிடைக்கவில்லை. போரினால் இடம்பெயர்ந்து வெட்ட வெளியில் அமைக்கப்பட்ட தற்காலிகக் குடிசைகளில் வாழுகின்ற மக்கள் வறட்சி மற்றும் கடுமையான வெப்பம் காரணமாக எதிர்கொண்ட அவலங்களைச் சொல்லவே முடியாது. காட்டுவாசிகள் போன்றதொரு நிலையிலேயே இவர்கள் காணப்படுகின்றனர்.

இதேவேளை - மக்களின் தேவைக்குப் பயன்படும் நன்னீர்க் கிணறுகளைப் படையினர் தமது தேவைக்குப் பெருமளவில் பயன்படுத்துவதால் சில பின் தங்கிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் மேலும் இடரினுள் தள்ளப்பட்டுள்ளனர். புத்துவெட்டுவான், ஐயன்கன்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இந்த வகையில் பாதிக்கப்பட்டுள்ளனர். படையினர் தமக்குத் தேவையான நீரை வேறு வழிகளில் பெற்றுக்கொள்ள வேண்டுமே தவிர பொது மக்களுக்கு இடையூறு ஏற்படும் விதத்தில் நடந்து கொள்கின்றமை சரியானதல்ல.



இதேவேளை எதிர்காலத்திலும் வட பகுதி வறட்சியின் பிடிக்குள் சிக்கிக் கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் அதிகரித்துச் செல்கின்றன. வகை தொகையின்றிக் காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றமையே இதற்கான பிரதான காரணமாகும். விடுதலைப் புலிகளின் காலத்தில் காட்டு வளங்கள் பெருமளவில் பாதுகாக்கப்பட்டதுடன் மரநடுகையும் சிறப்பாக இடம்பெற்றது. ஆனால் போர் ஓய்ந்த பின்னர் இங்கு எல்லாமே மாறிவிட்டன. வெளியாள்கள் சுதந்திரமாக இங்கு வந்து காடுகளை அழித்து மரங்களைப் பெருமளவில் எடுத்துச் செல்கின்றனர். இதனைத் தடுக்க வேண்டியவர்கள் அதற்கு உடந்தையாக இருக்கின்றனர். மேலும் மணல் மற்றும் கிரவல் மண் அகழ்வு காரண மாகவும் பெருமளவு மரங்கள் நிலத்தடி ஆதாரமில்லாததால் பாறி வீழ்ந்து கிடக்கின்றன. ஏற்கனவே மழை வீழ்ச்சி குறைந்து வறண்டு காய்ந்து போய்க் கிடக்கும் வடபகுதி பாலைவனமாக மாறுவதற்கான காரணியாக இந்தக் காட்டு வளங்கள் அழிக்கப்படுகின்றமை அமையப் போகின்றது.

மேலும், இங்கு மலைகள், ஆறுகள் என்பன இல்லாததால் நிலத்தடி நீரே பிரதான நீராதாரமாகக் காணப்படுகின்றது. குளங்கள் பல இருந்தாலும் மழை பெய்யாவிட்டால் அவை வறண்டு போய் விடுகின்றன. இந்த வகையில் தற்போது இங்குள்ள குளங்கள் யாவும் நீர் இல்லாது வெற்று நிலங்களாகக் காணப்படுகின்றன. இங்குள்ள பிரதான குளங்களான முத்துஐயன் கட்டுக்குளம், இரணை மடுக்குளம் ஆகியனவே வறட்சிக்குத் தாக்குப் பிடிக்க முடியாத நிலையில் வறண்டு போய்க் காணப் படும்போது ஏனைய சிறு குளங்கள் தொடர் பாகப் பேசவே தேவையில்லை.

இதேவேளை - அநுராதபுர மாவட்டத்துடன் முடங்கிப் போய்க் கிடக்கும் மகாவலி நீர் வடபகுதியை எட்டிப் பார்ப்பதற்கு ஏனோ தயங்கி நிற்கின்றது.

சிலவேளை, அரசு தனது ஏதாவது நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு மகாவலி நீரை வடபகுதிக்குத் திருப்பி விடவும் கூடும். ஆகவே, வடபகுதி மக்கள் இதிலும் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

ஆனால் ஒன்றை மட்டும் எம்மால் மறுக்க முடியாது. இங்கு வாழுகின்ற மக்கள் நீரை விரயம் செய்வதில் காட்டுகின்ற அக்கறையை அதைச் சேமிப்பதில் காட்டுவதில்லை. நீர் முகாமைத்துவம் என்பது எம்மவரிடத்தில் அறவே கிடையாது. பணத்தைத் தண்ணீராகச் செலவழித்தல் என்பதை தண்ணீரைப் பணம் போன்று செலவழித்தல் என மாற்றியமைக்க வேண்டும். ஏனென்றால் இன்னும் சில வருடங்களில் தண்ணீர் விலை மதிப்பு மிக்க ஒரு பொருளாக மாறிவிடப் போகின்றது. ஆகவே நாம் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு இப்போதே ஆரம்பிக்க வேண்டும். நாளை பார்க்கலாம் என்று வாளா விருந்தால் எமது தவித்த வாய்க்கு நீர் கூடக் கிடைக்காத நிலை ஏற்பட்டு விடும்.

# இப்படியும் அடிமைகள்

தட்சா.ஜோ

ஒவ்வொரு வீட்டிலும் அடிமைகள் இருக்கிறார்கள். ஏன் உங்கள் வீட்டையே எடுத்துக்கொள்ளுங்கள். அன்புக்கு அடிமையாக ஒருவர் இருப்பார். சில வீடுகளில் மதுவுக்கு அடிமையாக யாராவது இருப்பார்கள். அல்லது புகைத்தலுக்கு அடிமையாக இருப்பார்கள். துரதிஷ்டவசமாக சிலர் போதைப் பொருளுக்கும் அடிமையாக இருப்பார்கள். ஆனால் வீட்டுக்கொரு அடிமை நிச்சயமாக இருப்பார் என்றால் அது தொலைக்காட்சிக்காகத்தான் இருக்கும்.

சிறுவர்கள், சிறுமிகள் திரைப்படங்களில் வரும் ஹீரோ, ஹீரோயின் ஆகவே தங்களை நினைத்துக்கொள்கின்றனர். சிறுவயதிலேயே புகைப்பிடித்தல், மதுப்பாவனை, களவு, கொள்ளை எனப் பல பழக்கங்களை தொலைக்காட்சி வாயிலாக சிலர் பழகிக்கொள்கின்றனர். இப்போது வெளிவரும் திரைப் படங்கள் இவற்றைத்தான் அதிகளவில் காட்டுகின்றன. பல அனுகூலங்களும் காணப்படுகின்றன. மறுப்பதற்கில்லை. ஒரு காலத்தில் குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் குறித்த நிகழ்வு மட்டும் பார்க்கலாம் என்றிருந்த நிலை முற்றிலும் மாறுபட்டு வீடுகளில் 24 மணிநேரமும் உழைக்கின்றன தொலைக்காட்சிகள்.



தொலைக்காட்சி மட்டும் என்று சொல்லிவிட முடியாது. வீடியோ கேம், இணையம், சமூக வலைத்தளங்கள், நவீனரக செல்லிடத் தொலைபேசிகள் என இளமையை பயனற்ற விதத்தில் விழுங்கும் சாதனங்களின் பட்டியல் அதிகம் உள்ளன.

வெறும் குறைகளை மட்டும் சொல்லிக்கொண்டிருக்க முடியாது. மாணவர்களின் அறிவை வளர்க்கும் விடயங்கள் கணக்கிடமுடியாமல் இணையத்தில் கிடைக்கின்றன. அதே வேளை தொலைக்காட்சியிலும் அறிவுசார்ந்த நிகழ்சிகள் ஒளிபரப்பப்படுகின்றன. அதனை மாணவர்கள் பார்க்கிறார்களா என்பதே இங்கு கேள்வியாகும்.

மாலை 6 மணி முதல் இரவு 11.30 வரைக்கிடையில் சீரியலை சீரியஸா பார்க்கிற வீடுகளுக்கு மறந்தும் கூட போகமுடியாத நிலைமைதான் தற்போதுள்ளது. ஏன் வந்தனீங்கள் என்று கூட கேட்கமாட்டார்கள். போன குற்றத்துக்காக நீங்களும் அங்கிருந்து சீரியலைப் பார்த்துவிட்டு வரலாம். வரும் போது அந்த வீட்டு நாய் தன் மொழியில் ஏதோ ஒன்று சொல்லும். அதைச் சரியாக மொழிபெயர்த்துக் கூறினால் உங்களக்கு இது புதுசு. எனக்குப் பழகிப்போச்சு என்று சொல்லுமோ என்னமோ.

தடுப்புச் சுவராக தணிக்கை செய்யும் அதிகாரியாக இருக்க வேண்டிய பெற்றோர்களே தொலைக்காட்சிக்கு அடிமையாக இருக்கும்பட்சத்தில் பிள்ளைகளை அதிலிருந்து விடுவிப்பது கடினம்தான். புலமைப்பரிசில் பரீட்சை எடுக்கும் மாணவர்களின் வீடுகளில் அல்லது சாதாரண, உயர்தரப் பரீட்சை எடுக்கவுள்ள மாணவர்களின் வீடுகளில் மட்டுமே பரீட்சை முடியும் வரை தொலைக்காட்சிப் பெட்டி பெட்டிக்குள் போய்விடும். அதுவும் பரீட்சை முடியும் வரை மட்டுமே.

சில வீடுகளில் அப்பா நிற்கும் வரை செய்திகளை ஒலிபரப்பும் அலைவரிசைகளே போடப்படும். அப்பா வெளியில் சென்றவுடன் பிள்ளைகளும் அம்மாவும் சீரியலுக்கும் திரைப்படப்பாடல் அலைவரிசைகளுக்கும் சண்டை போடுவார்கள். செய்தியைத் தவர வேறு ஏதாவது பார்ப்பார்கள். மீண்டும் அப்பா வீட்டுக்குள் வரும் போது பழையபடி செய்தி போய்க்கொண்டிருக்கும்.


தொலைக்காட்சி, இணையம் என்பன கிடைக்காத மாணவர்கள் வாசிப்புப் பழக்கத்தில் ஒருபடி உயர்வாக உள்ளனர் என்பது ஆய்வுகளின் முடிவு. குறிப்பாக நடிப் ஆற்றல், விளையாட்டுத்திறன், பேச்சுத்திறன் போன்றவற்றைக் குறிப்பிடுகின்றனர் அவற்றுள் முக்கியமாகக் கூறப்படுவது வாசிப்புத்திறன்.

தொலைக்காட்சி போன்ற நவீன ஊடகங்கள் மாணவர்களின் வாசிப்புத் திறனை அயகரித்து பாழ்படுத்தி விட்டன. ஒரு காலத்தில் மாணவர்களால் நிரம்பி வழிந்த நூலகங்கள் இன்று வெறிச்சோடிப்போய் கிடக்கின்றன. அல்லாது போனால் ஒரு சில வயதான சமுதாயத்தை தன்னிடத்தில் வைத்துள்ளன. நமது மாணவ சமுதாயத்துக்கு வாசிக்க வேண்டியதன் தேவை குறைந்துவிட்டதென்பதே உண்மை. இதன் மூலம் தேடலும் குறைவடைந்துள்ளது. தேவையானதை இணையத்தில் தரவிறக்கம் செய்துவிட்டு கைவீசி நடக்கும் சமுதாயமாகி விட்டனர் எம்மவர்கள்.

பெற்றோர் பக்கத்தில் இருந்தால்கூட ஓரிடத்தில் இருந்து படிப்பதை சலிப்பாக நினைக்கும் மாணவர்கள் மத்தியில் தந்தை, தாய் இருவரும் வேலைக்குச் சென்றாலும் தானே உணர்ந்து படிக்கும் மாணவர்கள் இல்லாமல் இல்லை. அவர்கள் பெற்றோருக்கு மட்டுமன்றி சமுதாயத்துக்கே ஒரு வரம் என்று சொல்லலாம்.

தொலைக்காட்சி கலாசாரம் வெகுவாக எங்கள் சமுதாயத்தைப் பாதிக்கின்றது. அதிலிருந்து விடுபடுவது என்பது எங்கள் கைகளில்தான் உள்ளதேயன்றி அதற்காக வேறு யாரும் முயற்சிகளை மேற்கொள்ளமுடியாது.

தொலைக்காட்சி போன்ற நவீன ஊடகங்களுக்குள் மூழ்கிப் போயுள்ள மாணவர்களை வெளிக்கொண்டு வரவேண்டியதன் கடப்பாடு சகலருக்கும் உரியதே.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: சுறுசுறுப்புடன் செயற்படுவீர்கள். எடுத்துக்கொண்ட காரியத்தில் வெற்றிபெறுவதற்காக பம்பரமாகச் சுழன்று உழைப்பீர்கள். எதிர்பார்த்ததைவிட இலாபம் அதிகரிக்கும். குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்திசெய்வீர்கள்.



**இடபம்**: உங்களைவிட்டு விலகியிருக்கும் பிள்ளைகள் வலிய வந்து சேர்வார்கள். வியாபாரிகள் எதிர்பார்த்த லாபத்தை அடைவார்கள். அரச ஊழியர்கள் விரும்பிய இடமாற்றல் பெறுவர். மாணவர்கள் அதிக மதிப்பெண்கள் பெறுவார்கள்.



**மிதுனம்**: அரசியல் பிரமுகர்கள் பொதுமக்களிடம் நல்ல மதிப்பும் மரியாதையும் அடைவார்கள். பொறுமையுடன் செயற்பட்டு காரியங்களைச் சாதிப்பீர்கள். பிள்ளைகளால் பெருமைப்படுவீர்கள்.



**கடகம்**: தொல்லை கொடுத்துவந்த உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்படும். உடன்பிறந்தவர்களால் ஏற்பட்ட பிரச்சினைகள் சுமுகமாகும். தொழிலதிபர்கள் தொழிலாளர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.



**சிங்கம்**: வியாபாரத்தில் நல்ல மேன்மையையும் இலாபத்தையும் அடைவீர்கள். இளைஞர்கள் தக்க வேலைவாய்ப்பைப் பெறுவார்கள். மகான்களின் தரிசனம் கிடைக்கும். தூரத்திலிருந்து அனுகூலச் செய்திகளைப் பெறுவீர்கள்.



**கன்னி**: உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவார்கள். வரவேண்டிய நிலுவைகள் வந்துசேரும். அரசியல் தலைவர்கள் பரபரப்பாக இருப்பார்கள். பிரிந்துசென்ற சொந்தங்கள் வலிய வந்துசேரும்.



**துலாம்**: உத்தியோகத்தர்கள் சக ஊழியர்களிடம் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். அவர்களால் சில பிரச்சினைகளைச் சந்திக்க நேரலாம். உடன்பிறந்தவர்கள் ஆதரவாக இருப்பார்கள்.



**விருச்சிகம்**: வழக்குகள் வெற்றியைத் தரும். நண்பர்கள் ஆதரவு கிடைக்கும். சந்தித்து வந்த தடை, தாமதங்கள் விலகிச்செல்லும். திருப்தியான பணவரவு உண்டு. தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும்.



**தனுசு**: தொழிலதிபர்கள் நினைத்தபடி, தொழிலாளர்கள் ஒற்றுமையோடு உற்பத்தியை அதிகரிப்பார்கள். அரசு ஊழியர்கள் எதிர்பார்த்த மாறுதல் தள்ளிப்போகும். வியாபாரிகள் செய்த கொள்முதல் அனைத்தும் விற்பனை ஆகும்.



**மகரம்**: பெற்றோர்கள் வழியில் இருந்துவந்த மருத்துவச் செலவுகள் குறையும். பிரிந்துசென்ற தம்பதியர் ஒன்றுசேர்வார்கள். மாணவர்கள் எண்ணம் ஈடேறும். வீடு மனை தொடர்பான அலுவல்கள் அனுகூலமாக அமையும்.



**கும்பம்**: உங்களுக்கு குடும்ப உறுப்பினர்களின் ஒத்துழைப்பு கூடும். பிரிந்த தம்பதியர் ஒன்றுசேர்வார்கள். தொழிலதிபர்கள் உற்பத்திப் பொருள்களால் நல்ல லாபத்தை அடைவார்கள். வெளிநாடு செல்லத் திட்டமிட்டவர்களின் எண்ணம் ஈடேறும்.



**மீனம்**: உத்தியோகத்தர்கள் விரும்பிய இடத்துக்கு இடமாற்றல் கிட்டும். இதுவரை தொல்லைகொடுத்த நோய் விலகும். மாண வர்கள் கல்வியில் சிறந்து விளங்குவார்கள். பெற்றோர் வழியில் ஏற்பட்ட மருத்துவச் செலவுகள் குறையும்.

## நாளை

**ஆவணி-07 சனிக்கிழமை | 23.08.2014**

திதி: திரயோதசி பி.ப.04.20 வரை
நட்சத்திரம்: பூசம்
பி.இ.02.07 வரை

சுபநேரம்: 03.05-04.35 வரை
இராகுகாலம்: 09.05-10.35 வரை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



கருத்துக்கள்வளர்ச்சிஅடையும், ஆனால் அவற்றை விளக்கும் உவமைக் கதைகளில் வரலாற்று மதிப்பு எதுவும் இல்லை. நமது காட்சிகளை விட மோசஸின் காட்சிகளில் பிழைகள் அதிகம் இருக்க நியாயமுண்டு. ஏனெனில் எமது அறிவு உயர்ந்தது, அதனால் பொய்க்காட்சிகளில் நாம் அதிகம் ஏமாறுவதில்லை. நமது சொந்த (அறிவென்னும்) புத்தகம் திறக்காத வரை மற்றப் புத்தகங்கள் பயனற்றவை. நமது அறிவைப் பலப்படுத்தும் அளவே பிற புத்தகங்கள் நன்மை பயப்பவை. வலிமையான ஒன்றே வலிமையை உணரும். சிங்கத்தின்வலிமையையானையால் தான் அறிய முடியும். எலியால்முடியாது. யேசுவைப் போலாகாமல் அவரை எப்படி அறிய முடியும்? இரண்டு ரொட்டித் துண்டுகளைக் கொண்டு ஐயாயிரம் பேரை உண்பிப்பது போன்றவை எல்லாம் கனவில்தான் நிகழும். இவை

### வலிமையான ஒன்றே வலிமையை உணரும்

எதுவும்உண்மையல்ல; ஒன்றை ஒன்று பாதிப்பதும் இல்லை. சிறப்பே சிறப்பின் மதிப்பை உணரும். கடவுளே கடவுளை உணர்வார். கனவு காண்பவனே, கனவும் ஆகிறான். இதற்கு வேறு ஆதாரம் ஏது? கனவு வேறு, கனவு காண்பவன் வேறு அல்ல, "நானே அவன்,நானே அவன்" என்பது தான் இந்தக் கீதத்தின் ஆதார சுருதி. மற்றச் சுருதிகள் எல்லாம் அவற்றின் மாறுபாடுகளே; அவை மூலசுருதியைப் பாதிப்பது இல்லை. நாமே வாழும் நூல்கள், நாம் பேசிய வார்த்தைகளே புத்தகங்கள். ஒவ்வொன்றும் உயிருள்ள இறைவனே; வாழும் யேசுவே. இந்தக் கருத்துடன் பார். வாழும் கவிதையே மனிதன். அவனை நீ படி. எல்லாப் பைபிள்களுக்கும், என்றேனும் தோன்றியுள்ள எல்லா யேசுநாதர்களுக்கும் புத்தர்களுக்கும் விளக்கம் கொடுக்கும் ஒளி நாமே. அப்படி நாம் ஒளி தராமல் போனால் அவை நம்மைப் பொறுத்தவரையில் இறந்து போனவையே.

உனது சொந்த ஆன்மாவின் பலத்திலேயே நில். பிணம் கோபப்படுவதில்லை. நமது உடலைப் பிணத்துக்கு ஒப்பாக நாம் செய்து கொள்வோம்! பிணங்களுடன் நம்மை ஒன்றுபடுத்திக் கொள் வதை நிறுத்திவிடுவோம்.

# கருந்துளையைக் கண்டுபிடித்தனர் இந்திய விஞ்ஞானிகள்



வானவெளியில் அடர்த்தியும், ஈர்ப்புச் சக்தியும், அதிகமான 'கருந்துளை'களும் உண்டு என்று கூறப்படுவது உண்டு. ஆனால் இதை யாரும் பார்த்தது இல்லை. கருந்துளை என்று எதுவும் இல்லை என்று கூறுபவர்களும் உள்ளனர். நட்சத்திரக் கூட்டங்கள் அழியும்போது இந்தக் கருந்துளை உருவாகிறது என்றும், அது தன்னை நோக்கி வரும் எல்லாப் பொருளையும் உள்ளே ஈர்த்துக்கொள்ளும் சக்தி கொண்டது என்றும், அதில் இருந்து எதுவும் தப்ப முடியாது என்றும் கூறப்படுவது உண்டு. இப்போது கருந்துளை ஒன்றை இந்திய வானவெளி விஞ்ஞானிகள்கண்டுபிடித்து அதன் அளவையும் வெளியிட்டு சாதனை படைத்து இருக்கிறார்கள்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 1 | | 2 | | | | | |
| 7 | | | 4 | | 1 | | | |
| 4 | | | | 6 | 7 | | 2 | |
| 6 | | 5 | | | | | | 3 |
| 9 | | 1 | 7 | | 8 | 5 | | 2 |
| 3 | | | | | | 4 | | 8 |
| | 9 | | 8 | 2 | | | | 6 |
| | | | 5 | | 6 | | | 7 |
| | | | | | 3 | | 8 | 9 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 2 | 8 | 1 | 3 | 5 | 6 | 7 | 4 |
| 4 | 3 | 6 | 8 | 2 | 7 | 5 | 1 | 9 |
| 7 | 5 | 1 | 9 | 6 | 4 | 8 | 2 | 3 |
| 2 | 8 | 4 | 7 | 9 | 6 | 1 | 3 | 5 |
| 6 | 7 | 5 | 4 | 1 | 3 | 9 | 8 | 2 |
| 3 | 1 | 9 | 2 | 5 | 8 | 4 | 6 | 7 |
| 5 | 9 | 7 | 3 | 8 | 1 | 2 | 4 | 6 |
| 1 | 6 | 3 | 5 | 4 | 2 | 7 | 9 | 8 |
| 8 | 4 | 2 | 6 | 7 | 9 | 3 | 5 | 1 |

# உதைபந்தாட்டப் போட்டியின்போது ஏற்பாட்டாளர்கள் மீது தாக்குதல்

## இருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் உடுத்துறை செந்தமிழ் மைதானத்தில் சம்பவம்

கரணவாய், ஓக.22

மைதானத்தில் பார்வையாளர்கள் மத்தியில் இடம்பெற்ற குழப்பம் மற்றும் தாக்குதல் காரணமாக உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழக வீரர்கள் இருவர் படுகாயமடைந்து மருதங்கேணி அரச மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

அதில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் கொடுக்கிளாய் சக்திவேல் விளையாட்டுக்கழக 'ஏ' அணியும் சென்மேரிஸ் விளையாட்டுக்கழகமும் மோதின. இதில் கொடுக்கிளாய் சக்திவேல் விளையாட்டுக்கழக வீரர் ஒருவர் போட்டி நடுவரைத் தாக்கியதால் குழப்பம் ஏற்பட்டது. இதனை அடுத்து அந்த இடத்துக்கு விரைந்த மருதங்கேணி பொலிஸாரும், விளையாட்டுக்குழு ஏற்பாட்டாளர்களும் ஒருவாறு சமரசம் செய்து போட்டியை நடத்தி முடித்தனர்.

இதன் பின்னர் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற ஆட்டத்தில் விளையாட்டுக் கழக சக்திவேல் அணியும் உடுப்பிட்டி யுத் விளையாட்டுக்கழகமும் மோதின. இதில் உடுப்பிட்டி யுத் விளையாட்டுக்கழகம் ஒரு கட்டத்தில் 3 கோல்களை அடித்திருந்தது. ஆட்டம் நிறை வடைவதற்கு 10 நிமிடங்கள் இருக்கும்போது சக்திவேல் விளையாட்டுக் கழக அணியின் ரசிகர்கள் சிலர் அநாகரிகமாக நடந்து கொண்டதுடன், தர்க்கத்திலும் ஈடு பட்டதுடன் மைதானத்துக்குள்ளும் பிரவேசித்து குழப்பம் விளைவித்தனர்.

இதனை அடுத்து ஏற்பாட்டாளர்கள் அவர்களை அப்புறப்படுத்த முயற்சித்தபோது ஏற்பாட்டாளர்கள்மீது கொட்டன்பொல்லுகளால் சரமாரியாகத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் செந்தமிழ் விளையாட்டுக் கழக செயலாளர் எஸ்.தங்கரதீஸ்வரன் (வயது - 31), எஸ்.சிவானந்தன் (வயது - 33) ஆகியோரே கடும் தாக்குதலுக்கு உள்ளாகிய நிலையில் படுகாயமடைந்து மருதங்கேணி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற போது மருதங்கேணிப் பொலிஸாருக்கு அது குறித்து அறிவிக்கப்பட்ட போதிலும் அவர்கள் குழப்பம் முடிவடைந்த பின்னரே சம்பவ இடத்துக்கு வந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை - இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப்பொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர். (த-108)

# மோதலை அடுத்து போட்டி நிறுத்தம்

மைதானத்தில் பார்வையாளர்கள் ஏற்படுத்திய குழப்பம் காரணமாக உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக்கழகத்தின் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன், உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இதில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஆட்டத்தில் பார்வையாளர்கள் குழப்பம் விளைவித்ததுடன், ஏற்பாட்டாளர்கள் மீது தாக்குதலும் மேற்கொண்டனர்.

இதனாலேயே இந்தப் போட்டிகள் ஒத்திவைக்கப்பட்டன என்றும் - போட்டிகள் இடம் பெறும் திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (த-108)

# அசத்தலாக ஆடி வென்றது றோயல்



கரணவாய், ஓக.22

விறுவிறுப்பாக இடம் பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் 4:2 என்ற கோல்களால் வெற்றி பெற்றது.

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழகம் நடத்தும் சிவகுரு ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

நேற்று இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகமும், பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகமும் மோதின. மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் போட்டி ஆரம்பமாகி சற்று நேரத்தில் ஊரெழு அணியைச் சேர்ந்த கபில் தமது அணி சார்பாக முதலாவது கோலைப் போட்டார்.

தொடர்ந்து அந்த அணியின் அனுபவ வீரர் வெள்ளை (தர்மகுலசிங்கம்) மிகவும் அற்புதமாகத் தமது அணிக்கான இரண்டாவது கோலைப் போட 2:0 என்ற நிலையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் ஆரம்பமாகி விறுவிறுப்பாக இடம்பெற்ற போது இரு அணி வீரர்களும் உத்வேகத்துடன் விளையாடி மாறி மாறி கோல்களைப் போட்டனர். இடைவேளையின் பின் விண்மீன் அணி சார்பாக யூட், காண்டீபன் ஆகியோர் இரண்டு கோல்களையும், றோயல் அணி சார்பாக கோபன், சயந்தன் ஆகியோர் தலா ஒரு கோலையும் போட்டனர்.

இதனால் 4:2 கோல்கள் என்ற அடிப்படையில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. (த-108)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஓக. 22

கொக்குவில் பொற்பதி விளையாட்டுக்கழகம் நடத்தும் சிவகுரு ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான அணிக்கு 7 பேர் பங்கு பற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தப்படும் இந்தப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள்து விவரம் வருமாறு:-

மாலை 4 மணி - நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகம் எதிர் பருத்தித்துறை திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் - மாலை 5 மணி - குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழகம் எதிர் சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழகம். (த-108-23)

* * *

வடக்கு மாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் வட மாகாண பின்தங்கிய பாடசாலைகளின் மாணவர்களின் விளையாட்டுத்துறைக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விபரம் வருமாறு:-

வடமராட்சி திக்கம் விளையாட்டுக் கழகம் எதிர் மானிப்பாய் றெட்ரேஞ்சர் விளையாட்டுக் கழகம். இளவாலை சென்லூட்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் குப்பிளான் குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக் கழகம். (த-86-23)

* * *

கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் உருத்திரபுரம் உழவர் ஒன்றியம் விளையாட்டுக்கழகம் நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டுமைதானத்தில் மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இன்று வெள்ளிக்கிழமை இடம் பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு.

காலை 8.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் செந்தாரகை விளையாட்டுக்கழக 'ஏ' அணியை எதிர்த்து இரணைமாதா நகர் சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. காலை 9.30 மணிக்க இடம்பெறும் ஆட்டத்தில் ஸ்கந்த விளையாட்டுக்கழக 'பி' அணியை எதிர்த்து வலைப்பாடு சென்.ஆன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. காலை 10.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளந் தளிர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உருத்திரபுரம் (பச்சை) அணி மோதவுள்ளது. (த-23)

* * *

இலங்கை வங்கி, வர்த்தக வங்கி மற்றும் மக்கள் வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் யாழ். மாவட்ட ரீதியில் கைதடி விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் நடத்தி வரும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் - இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழகம் மோத இருக்கின்றது. (த-288)

# காலரன் கூடைப்பந்தாட்டத்துக்கு உடுவில் மகளிர் கல்லூரி தெரிவு



வலி.வடக்கு, ஓக. 22

கொழும்பு கால்ரன் அமைப்பினால் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்படும் 14 வயதுப் பிரிவு பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் கலந்து கொள்வதற்காக உடுவில் மகளிர் கல்லூரி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த மாதம் யாழ்ப்பாணம் கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்திய கூடைப்பந்தாட்டப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் இந்த அணி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. இதன் அடிப்படையில் கொழும்பில் நடைபெறவுள்ள இந்தப் போட்டியில் கலந்துகொள்வதற்காக நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இருந்து இந்த அணி புறப்பட்டுச் செல்லவுள்ளது. (த-86)

# இரண்டாம் சுற்றில் நுழைந்தது ஜேம்ஸ்

வலி.வடக்கு, ஓக. 22

வடக்கு மாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் வட மாகாண பின்தங்கிய பாடசாலைகளின் மாணவர்களின் விளையாட்டுத் துறைக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் நடத்தும் 07 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டப் போட்டிகள் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின.

நேற்றுமுன்தினம் நடந்த போட்டியில் அராலி ஜேம்ஸ் விளையாட்டுக் கழகமும் புன்னாலைக்கட்டுவன் ஈவினை கலைமகள் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

முதல்பாதி ஆட்டத்தில் 4:2 என்ற கோல் கணக்கில் ஜேம்ஸ் விளையாட்டுக் கழகம் முன்னிலையில் இருந்த வேளை ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் ஜேம்ஸ் விளையாட்டுக் கழகம் முழுமையாக மைதானத்தைத் தனது ஆதிக்கத்தில் வைத்துக் கொண்டு ஆறு கோல்களைப் பெற்றவேளை ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் ஜேம்ஸ் விளையாட்டுக் கழகம் 10:2 என்ற கோல் கணக்கில் கலைமகள் விளையாட்டுக் கழகத்தை வெற்றி பெற்று இரண்டாம் சுற்றில் விளையாடத் தகுதி பெற்றது. (த-86)



# யாழ்ப்பாணத் தமிழன் சாதனை

சுவிஸ் நகரில் வசிக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ் இளைஞன் ஒருவர் அங்கு நடந்த மெய்வன்மைப் போட்டியில் பங்கேற்று புதிய சாதனை படைத்துள்ளார்.

சுவிஸ் சூரிஷ் நகரை அண்டிய சிலிரனில் வசிக்கும் தமிழ் இளைஞனான சுகந்தன் சோமசுந்தரம் மெய்வல்லுனர் போட்டியில் சுவிஸ் நாட்டின் சார்பில் 4X100 மீற்றர் அஞ்சலோட்டத்தின் இறுதிப் போட்டியில் (38:53S) 4 வது இடத்தைப் பெற்றுள்ளார்.

ஐரோப்பிய ரீதியில் நடைபெற்ற இம் மெய்வல்லுனர் போட்டியில் கலந்து கொண்ட இவர், 4X100 மீற்றர் அஞ்சலோட்டத்தில் பங்குபெற்று, முதல் சுற்றில் (38:56S) 2ம் இடத்தை பெற்று தெரிவாகி இறுதிப் போட்டியில் (38:53 S) 4 வது இடத்தை பிடித்தார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சோமசுந்தரம் சுகந்தினி தம்பதிகளின் புதல்வனான இவர், தனது 22 வது வயதில் புதிய சாதனையாளர் என்ற பாராட்டைப் பெற்று சுவிஸ் நாட்டு அனைத்து தமிழ் பிரஜைகளின் மனதிலும் இடம் பிடித்துள்ளார்.

மேலும், 100 மீற்றர் ஓட்டத்தை 10:51 வினாடிகளிலும், 200 மீற்றர் ஓட்டத்தை 21:29 வினாடிகளிலும் ஓடி தனது இளம் வயதில் சுவிஸ் நாட்டின் சாதனை வீரன் என்ற பாராட்டையும் பெற்றுள்ளார். (ரி)




# இந்தியா மண் கவ்வும் சவால் விட்ட மெக்ராத்



ஆஸ்திரேலிய சுற்றுப்பயணத்தில் இந்தியா 4 டெஸ்டிலும் கண்டிப்பாகத் தோற்கும் என ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் கிளைன் மெக்ராத் சவால் விட்டுள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்தியா 1-3 என்ற கணக்கில் மோசமாகப் பறிகொடுத்துள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் டிசம்பர், ஜனவரி மாதங்களில் ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் செய்யவுள்ள இந்திய அணி அங்கு 4 டெஸ்ட் ஆட்டங்களிலும், இங்கிலாந்து பங்கேற்கவுள்ள முத்தரப்பு ஒரு நாள் கிரிக்கெட் தொடரிலும் விளையாட இருக்கிறது.

இந்நிலையில் அண்மைக்காலமாக வெளிநாட்டு மண்ணில் தொடர்ந்து சொதப்பி வரும் இந்திய அணிக்கு ஆஸ்திரேலிய தொடரில் ஒரு வெற்றியும் கிடைக்காது என கிளைன் மெக்ராத் ஆரூடம் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில், ஆஸ்திரேலிய அணி உலகில் எங்கு விளையாடினாலும், தங்களது முழு திறமையைக் கணிசமாக வெளிப்படுத்துவர். அதனால் அவர்களை வீழ்த்துவது என்பது உண்மையிலேயே கடினமான காரியம். இந்நிலையில் இந்திய அணி ஆஸ்திரேலியாவிடம் மோதவுள்ளது. கடந்த ஆண்டு இங்கிலாந்து அணி ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஆஷஸ் டெஸ்ட் தொடரில் ஆடிய போது, 0-5 என்ற கணக்கில் படுதோல்வியைச் சந்தித்தது. எங்களிடம் தோல்வி கண்ட அந்த இங்கிலாந்து அணி தற்போதைய தொடரில் சிறப்பாக விளையாடி இந்தியாவை 3-1 என்ற கணக்கில் வீழ்த்தி இருக்கிறது. எனவே கண்டிப்பாக இந்திய அணிக்கு ஆஸ்திரேலிய தொடர் மிகவும் கடினமாக இருக்கப்போகிறது என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. வெளிப்படையாகச் சொல்ல வேண்டும் என்றால், ஆஸ்திரேலிய மண்ணில் இந்திய அணி எந்த ஒரு டெஸ்டிலும் வெற்றி பெறும் என்று நான் நினைக்கவில்லை. எனது கணிப்பு ஆஸ்திரேலியா தொடரை 4-0 என்ற கணக்கில் கைப்பற்றும் என்பது தான். எனது கணிப்பு தவறு என்பதை நிரூபிக்க வேண்டியது இந்திய அணியைப் பொறுத்தது. மீண்டும் பழைய நிலைமைக்கு திரும்புவதற்கான வழிமுறைகளை இந்திய வீரர்கள் கண்டறிய வேண்டும் என்று அவர் கூறியுள்ளார். (ரி)

# துடுப்பாட்டம் நன்று அணித்தலைமை மோசம்

டோனி பற்றி கருத்து சொல்கிறார் கங்குலி



அந்நிய மண்ணில் டோனியின் துடுப்பாட்டம் சிறப்பாக உள்ள போதிலும், அணித் தலைவராக டோனியிடம் புதுமையான திட்டங்கள் இல்லை என்று குற்றம் சாட்டியுள்ளார் இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் கங்குலி.

இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த இந்திய அணி இந்த முறையும் டெஸ்ட் தொடரில் படுமோசமாக விளையாடி தொடரை இழந்தது. இதையடுத்து இந்திய முன்னாள் வீரர்கள் உட்பட உலக கிரிக்கெட் நிபுணர்களின் விமர்சனங்களும், ஆய்வுகளும் தொடர்ந்த வண்ணம் உள்ளன. தற்போது இந்த வரிசையில் தன் பங்கிற்கு கங்குலியும் சேர்ந்துள்ளார். இந்தியாவின் சிறந்த டெஸ்ட் அணித் தலைவர் யார் என்பதில் டோனிக்கும், கங்குலிக்கும் இடையே இன்று வரை போட்டி தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இந்நிலையில் இங்கிலாந்து டெஸ்ட் தோல்வி குறித்து கங்குலி கூறுகையில், டோனியின் சாதனைப் புத்தகத்தைப் பார்த்தால் கடந்த நான்கு வருடமாகவே அவர் சரியாக விளையாட வில்லை. டோனியிடம் கற்பனை வளம் இல்லை. புதுமையான எண்ணங்கள் இல்லை. வெளிநாடுகளில் அவரது துடுப்பாட்டம் நன்றாக மாறியுள்ளது. அதே சமயம் அணித் தலைவர் பொறுப்பு சொல்லிக் கொள்ளும்படியாக இல்லை. இருப்பினும் 2015 உலகக் கிண்ண தொடர் வரை டோனியே அணித்தலைவராக நீடிக்க வேண்டும். நமது அணியைப் போலவே டோனியும் சிறந்தவர்தான், திறமை படைத்தவர்தான். அதில் சந்தேகமே இல்லை. ஆனால் டெஸ்ட் போட்டிகளில் அவரது உத்திகளை மாற்றிக் கொள்ள வேண்டிய நேரம் வந்து விட்டது. அடுத்து மேற்கிந்தியதீவுகள் அணி இந்தியா வந்து விளையாடவுள்ளது. அதில் கூட பிரச்சினை இல்லை. நாம் சமாளித்து விடலாம். ஆனால் அடுத்து ஆஸ்திரேலியாவுக்கு கடினமான சுற்றுப் பயணத்தைஇந்தியாமேற்கொள்ளவுள்ளது. இங்கிலாந்து தொடரை விட ஆஸ்திரேலிய தொடர் இன்னும் மோசமாகவே இருக்கும். எனவே அதற்குள் தனது அணித்தலைவர் தரத்தை உயர்த்திக் கொள்ள டோனி முயல வேண்டும் என்று அவர் கூறியுள்ளார். (ரி)

# மிகச்சிறந்த அணித் தலைவர் டோனியே - பங்கஜ் அத்வானி




இந்தியாவின் மிகச் சிறந்த அணித்தலைவராக டோனி திகழ்கிறார். அணியை வழி நடத்திச் செல்லக்கூடிய அனுபவம் இவருக்கு மட்டுமே உள்ளது என உலக பில்லியர்ட்ஸ் சம்பியனான பங்கஜ் அத்வானி தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்திய அணி 1-3 என இழந்துள்ளதையடுத்து அணித்தலைவர் பதவியிலிருந்து டோனியை நீக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

இது குறித்து பங்கஜ் அத்வானி கூறியதாவது: இங்கிலாந்து டெஸ்ட் தொடரில் இந்திய அணி தோல்வியடைந்தபின், டோனியின் அணித்தலைமைப் பதவி குறித்து பலர் கேள்வி எழுப்புகின்றனர். என்னைப்பொறுத்தவரை, டோனியால் மட்டுமே அணியைச் சிறப்பாக வழி நடத்த முடியும். இவரே சிறந்த அணித்தலைவர். கிரிக்கெட் அல்லது எந்தவிதமான விளையாட்டிலும் வெற்றி, தோல்வி அடைந்தவுடன் இந்தியர்கள் அதிக உணர்ச்சிவசப்படுவர். இன்று தோல்வியடையும் அணி, நாளை மீண்டும் வெற்றிப்பாதைக்கு திரும்பும். மீண்டும் தொடரை கைப்பற்றிவிட்டால் பழைய நிகழ்வுகள் அனைத்தையும் மறந்துவிடுவோம். லோர்ட்சில் வென்றவுடன், வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றி என்று கொண்டாடினோம். கிரிக்கெட் வீரர்களுக்குத்தான் எது நல்லது, எது கெட்டது எனத் தெரியும். சொந்த மண்ணில் வெற்றி பெறுவதும், வெளிநாட்டு தொடர்களில் வீழ்வதும் தொடர்கிறது. இதற்காக அணியை குறை சொல்லிக் கொண்டிருக்கக்கூடாது. இப்பிரச்னைக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும். தவறினால், இதே நிலைமை தொடர்ந்து கொண்டுதான் இருக்கும். இவ்வாறு பங்கஜ் அத்வானி கூறினார். (ரி)

# இந்தியாவை பின் தள்ளிய இலங்கை

இங்கிலாந்து - இந்தியா மற்றும் இலங்கை-பாகிஸ்தான் டெஸ்ட் தொடர்கள் முடிவடைந்த நிலையில், சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் வெளியிட்டுள்ள புதிய தரவரிசைப் பட்டியலின்படி இந்திய அணியைப் பின் தள்ளிய இலங்கை அணி நான்காவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் தோல்வி அடைந்த இந்திய அணி 6 புள்ளிகளை இழந்து நான்காவது இடத்திலிருந்து ஐந்தாவது இடத்திற்கு பின்னடைந்துள்ளது. இந்தியாவுக்கு எதிரான தொடரை கைப்பற்றி அசத்திய இங்கிலாந்து அணி இரண்டு இடம் முன்னேறி மூன்றாமிடத்திற்கு முன்னேறியுள்ளது.

அதேவேளை பாகிஸ்தானுக்கு எதிரான தொடரை 2-0 என்ற கணக்கில் தம்வசப்படுத்திய இலங்கை அணி ஐந்தாமிடத்திலிருந்து நான்காமிடத்திற்கு 101 புள்ளிகளுடன் முன்னேறியுள்ளது. இலங்கையிடம் படுதோல்வி அடைந்த பாகிஸ்தான் அணி 7 புள்ளிகளை இழந்த நிலையில் மூன்றாமிடத்திலிருந்து ஏழாமிடத்திற்கு பின்தள்ளப்பட்டுள்ளது. இந்தியா, பாகிஸ்தான் அணிகள் தலா 96 புள்ளிகள் பெற்ற போதிலும் இந்தியா பாகிஸ்தானை விட முன்னிலையில் இருக்கிறது.

புதிய தரப்படுத்தலின்படி தென் ஆபிரிக்க அணி 124 புள்ளிகளுடன் முதலிடத்திலும், ஆஸ்திரேலிய அணி 123 புள்ளிகளுடன் இரண்டாமிடத்திலும், இங்கிலாந்து அணி 104 புள்ளிகளுடன் மூன்றாமிடத்திலும் உள்ளன. (ரி)

International Cricket Council

# சென்.சேவியர் அணியை வென்று அடுத்த சுற்றுக்குள் நவஜீவன்ஸ் வி.க

கரணவாய், ஒக.22

பலத்த எதிர்பார்ப்பின் மத்தியில் இடம்பெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி 3:2 என்ற கோல் கணக்கில் சக்கோட்டை சென். சேவியர் விளையாட்டுக் கழகத்தை தோற்கடித்து அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக்கழகம், பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடத்தும் அணிக்கு 9 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் பல களம் கண்டு வெற்றி வாகை சூடிவரும் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் சக்கோட்டை சென் சேவியர் விளையாட்டுக் கழகமும் மோதின.

மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் ஆட்டம் ஆரம்பமாகி 11 ஆவது நிமிடத்தில் நவஜீவன்ஸ் அணி வீரர் உஷானந் தமது அணிக்கான முதலாவது கோலைப் போட்டார்.

இதனால் வீறு கொண்டு எழுந்த சென் சேவியர் அணி வீரர் நிரோஜன் 20 ஆவது மற்றும் 22 ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்துக் கோல் போட நிலை தடுமாறியது நவஜீவன்ஸ் அணி. ஆனாலும் எதிரணி வெற்றி பெறவிடக் கூடாது என்று பல்வேறு உத்திகளைக் கையாண்டு போட்டி வியூகங்களை மாற்றியமைத்து ஆட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் 2:1 என்ற கோல்கள் அடிப்படையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் ஊடுருவித் தாக்கும் பாணியில் ஈடுபட்ட நவஜீவன்ஸ் அணியின் புவிநாதன் 32 ஆவது நிமிடத்தில் மிகவும் அற்புதமான கோல் ஒன்றைப் போட ஆட்டம் 2:2 என்று சமநிலை பெற்றது.

இதனை அடுத்து இரு அணி வீரர்களும் வெற்றிக்கோலைப் போடுவதற்காக கங்கணம் கட்டினர். இதற்கு 49 ஆவது நிமிடத்தில் கைமேல் பலன் கிடைத்தது. நவஜீவன்ஸ் அணியினருக்கு அந்த அணியின் முன்கள வீரர் கௌதமன் நேர்த்தியான கோல் ஒன்றைப் போட 3:2 என்று நவஜீவன்ஸ் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது.

(த-108)

# சென்.ஜோன்ஸ் கல்லூரி வெற்றி

யாழ்ப்பாணம், ஒக 22

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடத்தும் 17 வயது பிரிவு 2 இற்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்றில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 69 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து பண்டாரவளை சென்.தோமஸ் கல்லூரி அணி மோதிக் கொண்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியினர் 49.4 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 200 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். இதில் ஜெனிபிளமிங் 74 ஓட்டங்களையும், கிரட்லக்சி 28 ஓட்டங்களையும், நிலோசன் 23 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனா.

பந்து வீச்சில் பண்டாரவளை சென். தோமஸ் கல்லூரி அணி சார்பில் திலீபன் 9 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 35 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், சௌவ்வினித் 9.4 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 35 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.

201 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பண்டாரவளை சென்.தோமஸ் கல்லூரி அணியினர் 39.5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 131 ஓட்டங்களைப் பெற்று 69 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவினர். இதில் செவ்வினித் 34 ஓட்டங்களையும், குணதிலக 21 ஓட்டங்களையும் விஜயவாத்தன 20 ஓட்டங்களையும், தமது அணி சார்பாக பெற்றனர்.

பந்து வீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பில் நிரோஷன் 9.4 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 31 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், நிலோசன் 7 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 30 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், சோமஸ்கரன் 8 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 22ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

(ரி-23)



# மன்னார் தடகள ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக.22

மன்னார் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான தடகளப் போட்டிகள் நாளையும் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் மன்னார் பொது மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

தடகளப்போட்டியின் இறுதியாட்ட நிகழ்வுகள் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மன்னார் பிரதேச செயலாளா வசந்தகுமார் தலைமையில் இடம் பெறவுள்ளது. இறுதி நாள் நிகழ்விற்கு பிரதம விருந்தினரக மன்னார் மாவட்ட அரச அதிபா எம். வை.எஸ்.தேசபிரிய கலந்து கொள்ளவுள்ளார்.

இவ் இறுதியாட்ட நிகழ்வுகளில், பிரதேச செயலங்களுக்கிடையில் இடம்பெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித்தொடரின் இறுதியாட்டம் இடம்பெறவுள்ளது. இறுதியாட்டத்தில் பள்ளிமுனை சென்.லூட்சிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பனங்கட்டுகொட்டு சென். ஜோசப் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ரி-23)

# தாச்சிப் போட்டி

கைதடி, ஒக. 22

இலங்கை வங்கி, வர்த்தக வங்கி மற்றும் மக்கள் வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் யாழ். மாவட்ட ரீதியில் கைதடி விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் நடத்தி வரும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் -

இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழகம் மோதவிருக்கின்றது. (த-288)

# மானிப்பாய் ஏஞ்சல் ஆண் அணி கால்ரன் கூடைப்பந்தாட்டத்துக்கு

வலி.வடக்கு, ஒக 22

கொழும்பு கால்ரன் அமைப்பினால் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்படும் 14 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் கலந்து கொள்வதற்காக மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை அணி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த மாதம் யாழ்ப்பாணம் கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்திய கூடைப்பந்தாட்டப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் இந்த அணி சம்பியனாகியது.

இதன் அடிப்படையில் கொழும்பில் நடைபெறவுள்ள இந்தப் போட்டியில் கலந்து கொள்வதற்காக நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இருந்து இந்த அணி புறப்பட்டு செல்லவுள்ளது. (த-86)

# ரவிசாஸ்திரியால் உடனடி மாற்றம் வரப்போவதில்லை - கவாஸ்கர்



இந்திய அணியின் ஒரு நாள் போட்டி இயக்குனராக ரவி சாஸ்திரி நியமிக்கப்பட்டமையால் இந்திய அணியில் உடனடி மாற்றம் எதுவும் ஏற்படப்போவதில்லை என இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் சுனில் கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை மோசமாக இழந்துள்ளதன் எதிரொலியாக அவ்வணிக்கெதிரான ஒருநாள் போட்டிக்கான இந்திய அணியின் இயக்குனராக ரவி சாஸ்திரி நியமிக்கப்பட்டு உள்ளார். இதுகுறித்து கவாஸ்கர் கூறுகையில், ரவி சாஸ்திரி இயக்குனராக நியமிக்கப்பட்டதை வரவேற்கிறேன். ஆனால் அவரை வைத்தும், உதவிப் பயிற்சியாளர்களை வைத்தும் உடனடி மாற்றத்தை எதிர்பார்க்க முடியாது. அவ்வாறு எதிர்பார்ப்பதும் தவறானது. அதற்கும் சில காலம் தேவைப்படும். அதுவரை நாம் பொறுமையாக இருக்க வேண்டும். 2004ம் ஆண்டு ஜான்ரைட் பயிற்சியாளராக இருந்த போது நான் துடுப்பாட்ட ஆலோசகராக நியமிக்கப்பட்டேன். அணியில் வீரர்களை தேர்வு செய்யும் அதிகாரம் எனக்கு கிடையாது. ஜான்ரைட் பணியில் தலையிட விரும்பாததால் அந்தப் பணியை தொடராமல் பதவியிலிருந்து விலகிவிட்டேன்.

இயக்குனராக நியமிக்கப்பட்ட ரவிசாஸ்திரி எந்தப் பணியில் ஈடுபடுவார் என்று எனக்கு தெரியாது. அதைஅவர்தான்தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். தற்போது அணியின் வயது சராசரி 30க்கு கீழ் இருக்கிறது. இளம் வீரர்கள் பலர் உள்ளனர். அவர்களுக்கு சரியான வழிகாட்டுதல், பயிற்சி தேவை. தவறான பயிற்சி அளித்தால் அது அணியைத்தான் பாதிக்கும் என்று அவர் கூறினார்.

இதுபற்றி ரவிசாஸ்திரி தெரிவிக்கையில் தன்னிடமோ அல்லது இந்திய அணியிடமோ பெரிய அளவில் எதையும் யாரும் எதிர் பார்க்க வேண்டாம் என்று தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

நான் இந்திய அணிக்கு பாடம் நடத்தப் போக வில்லை. மாறாக உண்மையைக் கண்டறியும் நோக்கத்துடன் பணி புரியப் போவதாகத்தான் கொள்ள வேண்டும். நான் பயிற்சியாளர் டங்கன் பிளட்சருடன் பேசி, அணியின் மோசமான தோல்விக்கு என்ன காரணம் என்பதைக் கண்டறிய முயற்சிப்பேன்.

லோர்ட்ஸ் மைதானத்தில் நாங்கள் மிகப் பிரமாதமான வெற்றியைப் பெற்றோம். ஆனால் அதற்கு அடுத்த 3 போட்டிகளில் மிக மோசமாக தோற்றுள்ளோம். இதற்கான காரணத்தை நான் ஆராய வேண்டியுள்ளது.

இந்திய கிரிக்கெட் வாரியத்தைப் போலவே நானும் என்ன தவறு நடந்தது என்பதை அறிய ஆவலாக உள்ளேன். அதைச் சரி செய்ய முயற்சிப்பேன்.

பிளட்சருக்கு அடுத்து நீங்கள் தான் பயிற்சியாளரா என்று கேட்டால் அதற்கு என்னால் பதில் சொல்ல முடியாது. எதிர் காலத்தை என்னால் இப் போதே கூறமுடியாது. அதைப் பற்றி நான் நினைக்கவும் இல்லை. இப்போது நிலைமை சரியில்லை. அதை சரி செய்ய வேண்டியதுதான் முக்கியமானது.

என்னுடைய முதல் வேலை நடந்தது என்ன என்பதை ஆராய்ந்து கிரிக்கெட் வாரியத்திடம் அறிக்கை கொடுப்பதுதான். அதைப் பற்றி மட்டுமே இப்போது நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்.

அடுத்த 15 நாட்களுக்குள் இந்திய அணியில் மிகப் பெரிய மாற்றம் நடந்து விடும், நான் அதைச் செய்வேன், அணி அதைச் செய்யும் என்று தயவு செய்து யாரும் எண்ண வேண்டாம். அது நடக்கவும் சாத்தியமில்லை. சிறப்பான தொடராக வருகிற ஒரு நாள் தொடர் அமையும் என்று அனைவரையும் போல நீங்களும் நம்புங்கள் என்றார் சாஸ்திரி. (ரி)

# தோல்விக்கு காரணம் தோழியர் பிசிசிஐயின் புதிய கண்டுபிடிப்பு

காதலி மற்றும் மனைவிகளினால் தான் இந்திய வீரர்கள் சரிவர விளையாட வில்லை என்று இந்தியக் கிரிக்கெட் வாரியம் கூறியுள்ளது.

இங்கிலாந்து டெஸ்ட் தொடரில் மோசமான தோல்விக்கான காரணத்தை ஆராய்ந்த இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் வீரர்களின் மனைவியர் மற்றும் காதலிகள் தான் இதற்கு காரணம் என்று ஒரு தக வலை வெளியிட்டுள்ளது.

இங்கிலாந்து தொடருக்கு இந்திய அணி சென்ற போது வீரர்களுடன் மனைவியரும் செல்ல இந்தியக் கிரிக்கெட் வாரியம் அனுமதி கொடுத்திருந்தது. இதனாலேயே சென்ற இடத்தில் 3- 1 என்ற கணக்கில் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை இந்தியா இழக்க நேரிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மூன்று வகை ஆட்டங்களி லும் கலக்கலாகஆடிய கோஹ்லி இங்கிலாந்தில் சொதப்ப அவரது காதலி அனுஷ்கா சர்மாவே காரணமாக இருந்துள்ளார். இங்கிலாந்து சென்ற விராட் கோஹ்லி தன்னுடன் காதலி அனுஷ்காவையும் அழைத்துச் செல்ல சிறப்பு அனுமதி கோரியிருந்தாராம், வாரியமும் அதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

அதேபோல அஸ்வின், சித்தேஸ்வர் புஜாரா, முரளி விஜய், ஸ்டூவர்ட் பின்னி, கௌதம் கம்பீர் ஆகியோர் வாரியத்திடம் அனுமதி பெற்று தங்களது மனைவிகளையும் அழைத்துச் சென்றனர்.

இதுகுறித்து கிரிக்கெட் வாரிய அதிகாரி ஒருவர் கூறுகையில், டெஸ்ட் தொடர் முழுவதும் மனைவியரும், தோழியரும் கூடவே இருந்ததால், வீரர்களால் விளையாட முடியாமல் போனது. அவர்கள் பயிற்சி செய்ய நினைத்தாலும் இவர்கள் விடுவதில்லை. ஊர் சுற்றப் போகலாம் என அழைத்துள்ளனர். பிறகெப்படி வீரர்களால் கவனமாக ஆட முடியும். இதைத் தொடர்ந்து வீரர்களுடன் எவ்வளவு நாட்களுக்கு மனைவியர் உடன் இருக்கலாம் என்பது குறித்து இனிகாலவரையறை நிர்ணயிக்கப் படும் என்று கூறியுள்ளார். (ரி)

முதலாம் பக்கத் தொடர்ச்சி

## இலத்திரனியல்

புதிதாக நடைமுறைப்படுத்தவுள்ள இலத்திரனியல் அடையாள அட்டையைப் பெறுவதற்குப் பல்வேறு தகவல்கள் கோரப்பட்டுள்ளன.

இவ்வாறு தனிநபர்கள் குறித்த தகவல்கள் கோரப்படுவதன் பின்னணி என்ன? கிராம சேவகர்களுக்கு இவை குறித்து பயிற்சியளிக்கப்பட்டு தற்போது விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படுகின்றன. இந்த நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளவரின் பின்னணி என்ன?

அத்துடன், பத்து விரல்களினதும் அடையாளம் பெறப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. குற்றவாளிகள், சந்தேகநபர்களிடமே கைவிரல் அடையாளம் பெறப்படும். நிலைமை இப்படியிருக்கையில் மக்களிடம் ஏன் அவற்றைப் பெறவேண்டும்? மக்களை இந்த அரசு குற்றவாளிகளாகவா கருதுகின்றது?

தனிநபர்களிடமிருந்து இவ்வாறு பெறப்படும் தரவுகள் வேறு யாருக்காவது வழங்கப்படுமா? கோபக்காரர்கள் இருந்தால் அவர்களிடம்கூட ஒப்படைக்கலாம். எனவே, இதற்கு இடமளிக்கக்கூடாது. இதன் முன்னோடியாக எனது கைவிரல் அடையாளத்தை வழங்காமல் இருப்பதற்குத் தீர்மானித்துள்ளேன் - என்று தெரிவித்துள்ளார்.

(ற-சி)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 567 11 11
advt@uthayan.com

## கண்ணீர் அஞ்சலி



எமது ஆலயத்தின் பிரதம குருக்களான
சிவஸ்ரீ மு.ஐயாத்துரைக்
குருக்களின் மகனும்,
ஆலய நித்திய பூசகருமான

**அனந்தசர்மா (அசோக் ஐயா)**

அவர்கள் 18.08.2014 சிவபதமடைந்ததை யிட்டு அன்னாரது குடும்பத்திற்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதுடன், ஆழ்ந்த அனுதாபங்களை யும் தெரிவித்து, அவரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலன சபை, (51136)(6.4.3)
கைதடி கிழக்கு வீரமஹாகாளி அம்மன் ஆலயம், கைதடி.

## கொக்கட்டிச்சோலையில் எலும்புக்கூடுகள் மீட்பு

கொக்கட்டிச்சோலை, ஓக. 22

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலைப் பகுதியில் எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. கொக்கட்டிச் சோலைப் பகுதியில் உள்ள வயல்வெளி ஒன்றி லேயே மேற்படி எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

எலும்புக் கூடுகளுடன் அடையான அட்டை, ஒளிப்படம் மற்றும் உடைகள் என்பனவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சம்பவ இடத்துக்குச் சென்ற களுவாஞ்சிக்குடி நீதிமன்ற நீதிவான் குறித்த பகுதியில் அண்மையில் மீட்கப்பட்ட மண்டையோட்டின் பகுதிகளாகவே குறித்த எலும்புக் கூடுகள் இருக்கக் கூடும் எனச் சந்தே கித்த அதேவேளை, மேலதிக விசாரணை களை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு உத்தர விட்டுள்ளார். (ஓ-10)

## பணியாளர்கள் தேவை

**பணம் வசூலிப்பாளர் தேவை.**

✱ தகைமைகள் :
அனுபவம் இருக்க வேண்டும். கிராம அலுவலரது பதிவுச் சான்றிதழ், பிறப்பு சான்றிதழ், மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம், பொறுப்பு சான்றிதழ் என்பன வேண்டும்.

✱ பணியாற்ற வேண்டிய இடங்கள் :
வலைப்பாடு, வவுனியா, கிராஞ்சி, பூநகரி, முழங்காவில்.

தொடர்புகளுக்கு:
077 721 8055, 072 228 9375

சினேறு என்ரபிறைசஸ்
கிளிநொச்சி. (47856)(7.6.3)

## அனுதாப அஞ்சலி



கைதடி வடக்கைப் பிறப்பிட மாகக் கொண்ட

**ஐயாத்துரை குருக்கள் அனந்தசர்மா (அசோக் ஐயா)**

அவர்கள் 18.08.2014 திங்கட் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் எமது ஆலய அர்ச்ச கரும் அதன் வளர்ச்சிக்கான அரும் பெரும் தொண்டருமாவார்.

இவரின் பிரிவு அன்னாரது குடும்பத்தினருக்கும் எமது ஆலய வளர்ச்சிக்கும் ஊர்மக்களுக்கும் பேரிழப்பாகும்.


இவரது ஆத்மாசாந்தியடைய எல்லாம்வல்ல கயிற்றசிட்டி கந்தவேள் பெருமானை வேண்டுவதுடன், இவரது பிரிவால் துயருறும் குடும்பத் தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கைதடி வடக்கு, கைதடி. (51137)(4.6.3)
பரிபாலனசபை, கயிற்றசிட்டி கந்தசுவாமி தேவஸ்தானம்.

## மரண அறிவித்தல்

### ஞானப்பிரகாசம் சிவலிங்கம் (சந்திரன்)



இல.118/3, திருவையாறு, கிளிநொச்சியைப் வசிப்பிட மாகக் கொண்ட ஞானப்பிரகாசம் சிவலிங்கம் 20.08.2014 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானப்பிரகாசம்-வள்ளி யம்மை தம்பதியரின் அன்புப் புதல்வனும், லலிதாவின் அன் புக் கணவரும், சசிக்குமார் (கண்ணா), றமா, ராதா, மேனகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரமேஸ், விமல், வின் சிலோ ஆகியோரின் மாமனும், கிசாந் லோஜிதா, கோபி, மோக னப்பிரியன், கெவின், நபிசா ஆகியோரின் பேரனும், மகா லிங்கம், காலஞ்சென்ற அமிர்தலிங்கம் மற்றும் ஜெயலிங் கம் (ஜெயா), யோகலிங்கம் (கோபு), காலஞ்சென்ற மங்கை யர்திலகம் (பவா) மற்றும் அற்புதமலர் (தேவி) ஆகியோ ரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.08.2014) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத் தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இரணை மடு பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன் - கண்ணன் (சசி)
குடும்பத்தினர்.

118/3, திருவையாறு,
கிளிநொச்சி. (47857)(10.3)

## மரண அறிவித்தல்

### திருமதி சிவபாக்கியம் கந்தசாமி



மீசாலை மேற்கு, மீசாலை யைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் கந்தசாமி நேற்று (21.08.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம்-பொன்னம்மா தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற கதிரித்தம்பி-விசாலாட்சி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கதிரித்தம்பி கந்தசாமியின் (ஓய்வு பெற்ற மரக்கூட்டு தாபனம்), அன்பு மனைவியும், ராகினி (ஆசிரியர்), மாலினி (கனடா), சுபாசினி, நளாயினி (அமெரிக்கா), உதயகுமார் (கனடா), சிறீ தரன் (லண்டன்), பிரபாகரன் (கனடா), ஆகியோரின் அன்புத் தாயாரும், தவேந்திரன் (ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்), பேரின்பசோதி (கனடா), பரிமளராசா (பெற்றோலியக் கூட்டுத்தாபனம்), கேசவன் (அமெரிக்கா), சசிராதா (கனடா), புவனேஸ்வரி (லண்டன்), பால நந்தினி (கனடா), ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற வர்களான பொன்னுத்துரை, நல்லம்மா, நவரத்தினம், யோகசுந்தரம் ஆகியோ ரின் அன்புச் சகோதரியும், டிலுக்சன், சம்யுதா, ஜதீஷன், செந்தியா, டிலானி, றஜீதன், தனீஷன், சுவைஸ்தா, சுபேந்தா, பிருந்தன், கீர்த்தன், ஷனீத்தா, பிரணவன், சேயோன், விருந்தினி, பிறேமி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.08.2014) வெள்ளிக் கிழமை நடைபெற்று, பி.ப 02 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை மேற்கு,
மீசாலை.
077 910 3340/077 667 1937 (47254)(3.4)

தகவல்:
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக் கிரியையும், நன்றி நவிலலும்



| இகம் | பரம் |
|---|---|
| ஜ | இ |
| 24 | 26 |
| இ | இ |
| 10 | 07 |
| இ | இ |
| 1929 | 2014 |

### அமரர் சின்னத்தம்பி சுப்பிரமணியம்

(யாழ்ப்பாணம் கரவெட்டி (துன்னாலை மத்தி) அல்லையம்பதியை பிறப்பிடமாகவும் மட்டக்களப்பை வசிப்பிடமாகவும் கொண்டவர்)

கடந்த 26.07.2014 சனிக்கிழமை மதியம் இறைவன் திருவடியடைந்த அன்னார் காலஞ் சென்ற சின்னத்தம்பி சின்னப்பிள்ளையின் மகனும், காலஞ் சென்ற சின்னத்தம்பி செல்லாச்சியின் மருமகனும், காலஞ் சென்ற பரிமளம் அவர்களின் அன்பு கணவரும் பாலச்சந்திரன் ( PMP மரச்சாலை - அல்லையம்பதி), சந்திரகுமார் (அல்லையம்பதி), காலஞ் சென்ற உதயகுமார், விஜகுமார், நந்தகுமார் (சன்சைன் பேக்கறி, மாகாநதி ஹெக்ஸ்ரைல் – மட்டக்களப்பு) சிவகுமார் (யூ.கே.ஈ – கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், குணநேசம், காலஞ் சென்ற மீனகுமாரி, ராஜினி, விஜி, சுபாஷினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

எமது குடும்பத்தலைவர் அமரர். சின்னத்தம்பி சுப்பிரமணியம் அவர்களுக்கு அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 23.08.2014 சனிக்கிழமை காலை 07.00 மணியளவில் மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலய அந்தியேட்டி மடத்தில் நடைபெறவுள்ளதோடு, வீட்டுக்கிருத்திய சபிண்டிகரண நிகழ்வு 25.08.2014 திங்கட்கிழமை அன்னாரின் மட்டக்களப்பு இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அனைவரும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதோடு, தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அத்துடன் அன்னாரின் பிரிவுச் செய்தி கேட்டு உடன் வந்து எங்களுடன் துயரத்தைப் பகிர்ந்து கொண்ட உற்றார்,உறவினர் நண்பர்கள் அனைவருக்கும், வெளிநாடுகளிலிருந்து எமக்கு தொலைபேசி,மின்னஞ்சல் மூலம் அனுதாபங்களை தெரிவித்தவர்களுக்கும், மாலைகள் அணிவித்தும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பதாதைகள், அனுதாபத்துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டோருக்கும், இரங்கலுரை நிகழ்த்தியவர்களுக்கும், இறுதி யாத்திரை, அந்தியேட்டி சபிண்டிகரண நிகழ்வுகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல.428/7, திருமலை வீதி,
மட்டக்களப்பு.

குடும்பத்தினர்.

## புலிகளின் பெயருடன் வெடிபொருள் மீட்பு

வாகரை.ஒக.22
தமிழீழ விடுதலைப் புலிகள் என எழுதப்பட்டுள்ள வெடிபொருள்கள் வாகரை - கதிரவெளி இராணுவ முகாம் பகுதியில் மீட்கப்பட்டுள்ளன. இராணுவ முகாமுக்கு முன்னால் உள்ள காட்டுப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் சில வெடி பொருள்கள் கைப்பற்றப்பட்டுள் ளன.

நேற்றுமுன்தினம் பிற்பகல் இராணு வத்தினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து குறித்த பிரதேசத் தில் இருந்து ரீ 81 ரக மோட்டார் குண்டு ஒன்றும் கைக்குண்டு ஒன்றும் வாகரை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. மீட்கப்பட்ட கைக் குண்டில் தமிழீழ விடுதலைப் புலிகள் என எழுதப்பட்டுள்ளதாக வாகரை பொலிஸார் தெரிவித்த துடன் இதனை செயல் இழக்கச் செய்வதற்காக இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் குறிப்பிட்டனர்.

(ஓ-10)

## கறுத்தார்முறிக்குளம் புனரமைப்பு



வவுணதீவு, ஒக.22
வவுணதீவு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இலுப்படிச் சேனை கறுத்தார்முறிக் குளம்புனரமைக்கும் வேலைத் திட்டம் புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

14 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ள இந்த வேலைத் திட்டத்தை மண் முனை மேற்கு பிரதேச செயலாளர் எஸ்.சுதாகர் மற்றும் உதவி திட்டமிடல் பணிப்பாளர் ரி.நிர்மல்ராஜ் ஆகியோர் ஆரம்பித்துவைத்தனர்.

இந்தக் குளம் புனரமைக்கப்பட்டால் தமக்கு பெரும் உதவியாக இருக்கும் எனவும் பெரும்போகத்தில் தண்ணீர் தட்டுப் பாடு ஏற்பட்டால் சில ஏக்கர் வயல் காணிகளுக்கு தண்ணீர் பாய்ச்சலாம் எனவும் தோட்டப்பயிர் செய்கைக்கும் இது உதவியாக அமையவுள்ளதுடன் வறட்சி காலத்தில் குளத்தை அண்டிய கிணறுகளில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்கும் எனவும் இப்பகுதி பொதுமக்கள் தெரிவித் தனர்.

(ஓ-10)

## வாகரையில் ஷெல் மீட்பு

வாகரை, ஒக, 22
மட்டக்களப்பு வாகரைப்பகுதியில் மோட்டார் ஷெல்குண்டுகள் இரண்டு மீட்கப்பட்டுள்ளன. புதன்கிழமை மீட்கப்பட்ட இந்தக் குண்டுகள் செயலி ழக்கச் செய்யப்பட்டன என்று வாகரைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். வாகரை 233ஆவது படைப்பிரிவினருக்கு குறித்த குண்டுகள் தொடர் பில் பொதுமக்கள் தகவல் வழங்கியுள்ளனர். இதனையடுத்து குண்டுகள் காணப்பட்ட இடத்திற்கு படையினர் சென்று அவற்றை மீட்கும் பணியில் ஈடுபட்டதுடன் குண்டுகளைச் செயலிழக்கவும் செய்துள்ளனர். (ஓ-10)



### பாராட்டி வாழ்த்துகின்றோம்

Congratulations

**கந்தையா பரமானந்தராசா**

கோப்பாய் வடக்கை சேர்ந்த சமூகசேவையாளரும்
சித்திரவேல்வர் தொண்டரும் தரும பரிபாலன சபை உறுப்பினரும்
கோப்பாய் வடக்கு அந்தியகால சேவை சபை
சமூக சேவா மன்றம் ஆகியவற்றின் தலைவரும் அகில இன நல்லுறவு
ஒன்றியத்தால் "சாமஸ்ரீ" தேசிய பட்டம் பெற்றவரும்
கோப்பாய சரவணபவணந்த வித்தியாசாலை
பழைய மாணவருமான கந்தையா பரமானந்தராசா
15.07.2014 அன்று யாழ். மாவட்ட நீதிமன்றில் நீதிபதி
உயர்திரு A.A. ஆனந்தராசா முன்னிலையில்
சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்துள்ளமையை
பாராட்டி வாழ்த்துவதுடன், மேலும் சமூகத்திற்கு சிறந்த
நல்ல பல சேவைகளை ஆற்ற இறையருளை வேண்டுகின்றோம்.

உறவினர்கள்
சமூக சேவா சங்கம் (பாலர் பகல் விடுதி)
அந்திய கால சேவை சபை.

**Personal / Group class**
*(English/Tamil)*
Biology & Chemistry
35 வருட வினாக்கள் கற்பிக்கப்படும்.
T.P: 076 654 1292 (51156)(10)

**Phone விற்பனைக்கு**
Samsung Galaxy S5
Android Smartphone white
16 GB (Unlocked)
Brand New with the box
076 524 1624
076 524 1629
விலை: Rs.85.000

### புன்னாலைக்கட்டுவன் வடக்கு ஸ்ரீதுர்க்கா சனசமுக நிலைய வளர்ச்சி நிதிக்காக

**மாபெரும் மாட்டுவண்டிச் சவாரி**

இடம் : நீர்வேலி சவாரித் திடல்
காலம்: 24.08.2014
ஞாயிற்றுக்கிழமை
பி.ப 1 மணி
நிர்வாகிகள்.
(51157)(10)



### 45ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
02.06.1933

மறைவு
08.07.2014

**அமரர் வதனலட்சுமி பத்மநாதன்**

அன்பின் வடிவமாய் அனைவரையும் காத்தாய்
பண்பின் உறைவிடமாய் பார்போற்ற வாழ்ந்தாய்
உதவி என எவர் வரினும் உடன் அதனைச் செய்தாய்
உன் நினைவால் வாடுகின்றோம் என்றும் உன்னை மறவோம்.

பருத்தித்துறை வீதி,
புத்தூர் கிழக்கு, புத்தூர்.
குடும்பத்தினர்.

## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
## கேள்வி அறிவித்தல்

தவிசாளர் பெறுகைக்குழு மாவட்டச் செயலகம் சார்பாக அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளரால் சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சின் கட்டடத் தொகுதி-மருதங்கேணிப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள கட்டட வேலைக்காக தகைமையுடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக் கேள்விகள் கோரப்படுகின்றன.

1)விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடத்தப்படும்.
2)தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக் கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
3)ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் நிர்வாகக் கிளை மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 22.08.2014 தொடக்கம் காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 மணி வரை விலைக் கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம் என்பதுடன், உதவி மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் (தொலைபேசி இல. 021 222 2771) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
4)விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றின் நிர்வாகக் கிளை மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 22.08.2014 முதல் 04.09.2014 வரை காலை 9.00 மணியிலிருந்து மாலை 2.00 மணி வரையான காலப்பகுதியில் மீளளிக்கப் படாத தொகையான 1000/= கட்டணமாக செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
5)மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் தவிசாளர் பெறுகைக் குழு மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 05.09.2014ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் நிர்வாகக் கிளை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலையின் பெயர், மற்றும் கேள்வி இலக்கத்தை தபாலுறையின் இடது மேல்மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேற்குறிப்பிட்ட முகவரியில் நேரடியாக வருகைதர விரும்பும் விலைக் கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகளின் முன்னிலையில் 05.09.2014ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு திறக்கப்படும். கேள்விகளின் மூலப்பிரதி தனியாகவும் நகல் தனியாகவும் இரு கடித உறைகளில் சமர்ப்பித்தல் வேண்டும்.
6)கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச் சபையின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.
7)கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விலைக்கூறல் பிணையானது கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியிலிருந்து 90 நாள்களுக்கு செல்லுபடியாகும் விதத்திலும் கேள்விப் பிணைப் பொறுப்பு 120 நாள்கள் இலக்கம் இடப்பட்டும் இருத்தல் வேண்டும்.

| கேள்வி இல. | வேலை விவரம் | மதிப்பிட்டுத் தொகை (மில்லியன்) (Vat நீங்கலாக) | ஒப்பந்த காலம் (மில்லியன்) | தேவையான தரம் | கேள்விப் பிணைத் தொகை | மீளளிக்கப் படாத தொகை (ருபா) |
|---|---|---|---|---|---|---|
| JF/DCDC/ SAFE HOUSE/07 | பாதுகாப்பு மத்திய ஸ்தானம் நிர்மாணம் | 11.70 | 6 மாதம் | C6 | 117,000.00 | 1000/= |
| JF/DCDC/ SAFE HOUSE/07 | சுற்று மதில், கிணறு, நீர்த்தாங்கி அமைத்தல் | 4.39 | 3 மாதம் | C8 | 44,000.00 | 1000/= |

சுந்தரம் அருமைநாயகம்
*அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்*
*யாழ்ப்பாண மாவட்டம்.*

(சி/16135)(7.3)

### 20ஆம் ஆண்டு நினைவலைகள்...

திருமதி நவரத்தினம்
விசாலாட்சி

செல்வி நவரத்தினம்
ஜெயசுதா





தோற்றம் : 18.02.1947
மறைவு : 01.09.1994

தோற்றம் :23.04.1970
மறைவு :01.09.1994

திதி: ஆவணிமாதம் அபரபக்க ஏகாதசி
இருபதுஆண்டுகள் கரைந்தோடியும்
கண்களில் கண்ணீர் வழிந்தோட....
நீங்கள் சென்றதிசைதனைப் பார்த்து
ஏங்கிநிற்கின்றோம் நாம்
வளமானவாழ்வுநாம் வாழும் போது
எம்முடன் நீங்கள் இல்லையே....
எப்போதுஎமைநாடிவருவீர் என்று
சென்றவழிதனைப் பார்த்திருக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்
கலைரங்கன் ஜெயந்தினி

(C/16138)(10)

## தொடர்ச்சிகள்

### வறட்சி

அனர்த்தங்களைக் கையாள்வதற்கு குறுகியகால மற்றும் நீண்டகால நடவடிக்கைகளை வடக்கு மாகாண சபை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பின் அடிப்படையில் தற்போதைய பாதிப்புக்கள் பற்றிய தகவல்களையும் தரவுகளையும் பிரதேச செயலக ரீதியாகவும் திரட்டவும், குடிதண்ணீர்ப் பிரச்சினைகளை உடனடியாகவும், எதிர்காலத்திலும் கையாளக் கூடிய விதத்தில் திட்டங்களை வகுக்கவும் அவற்றை நிறைவேற்றுவதற்கான பொருத்தமான வழிமுறைகளை இனங்காணவும், அதிகாரிகளையும், நிபுணர்களையும் உள்ளடக்கிய குழுவொன்றை நியமித்து நடவடிக்கை எடுப்பதென்ற தீர்மானம் முன்மொழியப்பட்டது.

இதன் பின்னர் இதன் மீதான விவாதம் இடம்பெற்றது. விவசாய அமைச்சினால் குடிதண்ணீர் விநியோக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமைக்கு மாகாணசபையில் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டதுடன் இந்த நடவடிக்கை மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதன் பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் உரையாற்றுகையில், இது தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடல் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு துறைசார் அதிகாரிகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைவாக நீண்டகால, குறுகிய காலத் திட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. அவற்றை உள்ளடக்கி அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே நீங்கள் இப்போது தான் நடவடிக்கை மேற்கொள்கின்றீர்கள். நாங்கள் முன்னரே நடவடிக்கை எடுத்துள்ளோம் என்று தெரிவித்தார்.

இதன்போது அவைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், இணைத்தலைமை என்ற அடிப்படையில் மாகாண முதலமைச்சருடன் சேர்ந்தே இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். எங்களிடமும் வறட்சித் தணிப்புக்கான திட்டங்கள் உண்டு. ஆனால் மாகாண அரசை விடுத்து தனித்து அமைச்சரும், மாவட்ட அரச அதிபரும் சேர்ந்து முடிவெடுக்கின்றனர். இது தவறான நடைமுறை என்று தெரிவித்தனர்.

அத்துடன் மாகாண அரசு வறட்சி தணிப்பு நடவடிக்கைக்காக இரண்டு மாதங்களுக்கு முன்னரே குடிதண்ணீர் விநியோகத்தை தொடங்கியுள்ளதாக தெரிவித்த முதலமைச்சர், செயலை முன்னரே தொடங்கியிருந்தாலும் தற்போதே அதைப் பற்றிப் பேசுகின்றோம் - என்றார். (த-5)

### தமிழ் அரசியல்

கப்பட்டுள்ளனர். அங்குள்ள சிங்கள கைதிகளால் கொடுமையான சித்திரவதைக் குத் தமிழ் அரசியல் கைதிகள் உள்ளாக்கப்பட்டு வருகின்றனர்.

இதனால் தம்மை மீளவும் தமிழ் அரசியல் கைதிகளுடன் இருக்க விடுமாறு கோரி அவர்கள் கடந்த 8 நாள்களாக உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த தமிழ் அரசியல் கைதிகள் மூவரும், அவர்களுடன் இருந்த முஸ்லிம் கைதி ஒருவருடன் ஏற்பட்ட சிறு முரண்பாட்டை அடுத்து சிறைச்சாலை நிர்வாகத்தினால் வேறாக்கப்பட்டுச் சிங்கள கைதிகளுடன் விடப்பட்டுள்ளனர். ஆனால் இவர்களுடன் முரண்பட்ட முஸ்லிம் கைதி அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தித் தனக்கு வேண்டிய சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

ஆர்.சுரேஷ், அன் ரன் சாம்ஷன், கோபிநாத் ஆகிய மூன்று கைதிகளுமே இவ்வாறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த மாகாண சபையில் அவர்களின் விடுதலையை வலியுறுத்தி ஏற்கனவே தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த நிலையில் உணவுதவிர்ப்பில் ஈடுபட்டுள்ள கைதிகளின் கோரிக்கையை நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதன் பின்னர் உரையாற்றிய மாகாண சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர் கேசவன் சயந்தன், குறித்த கைதிகளைத் தான் நாளை (இன்று) பார்வையிடவுள்ளதாகவும் தெரிவித்தார். (த-5)

### மீன்பிடித்துறை

கோரியும், தமது குடும்பத்தின் வறுமை நிலைகளைக் குறிப்பிட்டும், தாம் வேலை செய்தவாறே பிறிதொரு பட்டக் கற்கை நெறியை பூர்த்தி செய்வதற்கு விரும்புவதாகவும் குறிப்பிட்டு கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

குறித்த போராட்டத்தின் இறுதியில் வட மாகாண முதலமைச்சர் க.விக்னேஸ்வரனுக்கும், வட மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசாவுக்கும் மனுக்கள் கையளிக்கப்பட்டன. (த-22-86)

### கிராமத்துக்கு

எனினும் 2006 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதிக்கு முன்னர் ஓய்வு பெற்ற ஓய்வூதியர்களின் ஓய்வூதியம் தொடர்ந்தும் மாற்றமடையாது மீளாய்வு செய்யப்படாமல் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்த நடைமுறையினால், பெரும் பாகுபாட்டுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். அதே போல் வாழ்க்கைச் செலவு கொடுப்பனவிலும் சமநிலை பேணப்படாது பாகுபாடு உள்ளது. ஓய்வூதியத் திணைக்களத்தினால், இந்தப் பாகுபாடு நீக்கப்படுமென காலத்துக் காலம் தெரிவித்து வந்தபோதும், உருப்படியான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படாத அதே வேளை வருடாந்த வரவு - செலவுத் திட்டங்கள் மூலம் சிறிய சலுகைகள் மட்டும் வழங்கப்பட்டு வந்துள்ளன.

எனவே 2006 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதிக்கு முன்னர் ஓய்வு பெற்ற ஊழியர்களின் ஓய்வூதியத்தை அந்தத் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட 6/2006 இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் படியான சம்பள அளவுத்திட்டத்திற்கு அமைய மீளாய்வு செய்யவேண்டுமெனவும், நிதி நெருக்கடி காரணமெனின் நிலுவையின்றி இந்த மீளாய்வை 2015 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்த வேண்டுமெனவும் ஜனாதிபதியை இந்தச் சபை கோருகின்றது.

அவைத் தலைவரால் வறட்சி தொடர்பிலான பிரேரணை இரண்டாவதாக முன்வைக்கப்பட்டது.

ஆளுங்கட்சி உறுப்பினர் அபரஞ்சோதியினால் முன்வைக்கப்பட்ட பிரேரணையில் பொருளாதார அமைச்சினால் 2014 ஆம் ஆண்டில் வடக்கு மாகாணத்துக்குட்பட்ட பிரதேசங்களில் செயற்படுத்தவென ஒரு தொகை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக வெளியிடப்பட்டுள்ள கைநூலில் ஒரு கிராம சேவையாளர் பிரிவில் குறைந்தது ஒரு மில்லியன் ரூபாவுக்கான வேலைத் திட்டங்களை இனங்கண்டு அபிவிருத்தியை மேற்கொள்ள வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

வேலைத் திட்டங்களை இனங்காண்பதற்காக பிரதேச, பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையில் அப்பகுதி பொது அமைப்புக்களையும், பிரதேச அரசியல் தலைமைத்துவங்களையும் அழைத்துக் கூட்டம் கூட்டப்பட வேண்டுமென்றும், அங்கத்தவர்களின் மேற்பார்வையில் உள்ளூராட்சி மன்றங்களின் மூலம் செயற்படுத்தவேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

ஆனால் இது சம்பந்தமாக உள்ளூராட்சி மன்றங்களுக்கு இதுவரை அறிவித்தல் எதுவும் அனுப்பப்படவில்லை. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக அரச கட்சிகளின் ஆதரவாளருக்கு ஊடாக வேலைத் திட்டங்களை இனங்கண்டு அவற்றை உள்ளூராட்சி மன்றங்கள் மூலம் நிறைவேற்றித் தருமாறு நிர்ப்பந்தங்கள் விடப்பட்டுள்ளன. தமது பொறுப்புக்களை அறியாது, உள்ளூராட்சி மன்றங்கள் சிலவும் தவறாக நடந்து கொள்ள முயன்றுள்ளன.

ஆகவே உள்ளூராட்சி மன்றங்கள் இந்த விடயத்தில் தமது அதிகாரத்துக்கு உட்பட்டுப் பொறுப்புணர்ந்து செயற்படவும், அரச அதிபர் அல்லது பிரதேச செயலாளர்களுக்கு இது சம்பந்தமான அறிவுறுத்தல் விடுப்பதுடன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கும் இதனை தெரிவிப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

ஆளுங்கட்சி உறுப்பினர் து.ரவிகரன், இந்திய வீட்டுத் திட்டத்தின் புள்ளியிடல் காரணமாக போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே புள்ளியிடல் முறையை மாற்றியமைப்பதுடன், போரினால் பாதிக்கப்பட்ட பெண்களைக் கொண்ட குடும்பங்களுக்கு வீட்டுத் திட்டம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற தீர்மானம் முன்மொழியப்பட்டது. (த-5)

### யசிந்தன்

தாரர்களான சட்டமா அதிபர் மற்றும் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோருக்கு அறிவித்தல் அனுப்புமாறு நேற்று உத்தரவிட்டுள்ளது.

நெடுந்தீவுப் பிரதேச சபைத் தவிசாளர் தானியல் றெக்ஷயன் கடந்த நவம்பர் 26 ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார். அவரைச் சுட்டுக் கொலை செய்த குற்றச்சாட்டில் ஈ.பி.டி.பியின் முன்னாள் உறுப்பினரும் வடக்கு மாகாண சபை முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான கந்தசாமி கமலேந்திரன் (கமல்) கடந்த டிசம்பர் 3 ஆம் திகதி கைது செய்யப்பட்டார். அதற்கு முதல்நாள் வேலணையில் வசித்து வந்த லண்டன் யசிந்தன் மற்றும் றெக் ஷயனின் மனைவியான அனித்தா ஆகியோர் கைதாகி தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

யசிந்தன் சார்பில் ஊர்காவற்றுறை நீதிமன்றில் சட்டத்தரணிகள் எவரும் முன்னிலையாகி இருக்கவில்லை. இந்நிலையில் அவரைப் பிணையில் விடுவிக்குமாறு கோரி யாழ். மேல் நீதிமன்றில் கடந்த 18 ஆம் திகதி பிணை மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனை நேற்று எடுத்துக் கொண்ட மேல்நீதிமன்று அந்த வழக்கின் எதிர்மனுதாரருக்கு அறிவித்தல் அனுப்புமாறு கட்டளையிட்டுள்ளது. இதுதவிர கமல் மற்றும் அனித்தா ஆகியோர் சார்பாக யாழ்.மேல்நீதிமன்றில் ஏற்கனவே பிணை விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது. அது தொடர்பான கட்டளை இந்த மாத இறுதில் வழங்கப்படவுள்ளது. (த-4)

### முகப்பூச்சுக்

கடைக்குச் சீல் வைக்கப்படுமென்றும், சிறைவாசம் அனுபவிக்க வேண்டுமென்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இவ்வாறு தரம் குறைந்த முகப்பூச்சு வகைகளை விற்பனை செய்த முகவர் இருவர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

முகப்பூச்சு வகைகளைக் கொள்வனவு செய்யும்பொது மக்கள் அவற்றின் தரத்தில் அதிக கவனம் செலுத்துமாறும், தரம் குறைந்த முகப்பூச்சு வகைகளை விற்பனை செய்வது தொடர்பில் அறிந்தால் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைக்கு முறைப்பாடு செய்யுமாறும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் யாழ்.மாவட்ட அதிகாரி கேட்டுள்ளார். (த-106)

### வவுனியாவில்

னர். இந்நிலையில் நேற்று மதியம் வவுனியா தெற்குக் கல்வி நிலையத்தின் முன்பாகப் போதைப் பொருளுடன் ஒருவர் கைது செய்யப் பட்டதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். (த-402)

### சுன்னாகம்

பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். நிபுணர் ஒருவர் எனக்கு மேற்படி விடயம் பற்றி தெரிவிக்கையில், தற்போது சுன்னாகம் பகுதியை மாத்திரம் பாதித்துள்ள இந்த விடயம் விரைவில் வலிகாமத்தின் ஏனைய பகுதிகளையும் பாதிக்கக்கூடும்.

எனவே இதில் மேற் கொண்டு மக்கள் பாதிப்படையாத வகையில் நிரந்தரத் தீர்வு காணப்படவேண்டும் - என்றார்.

இதன்போது உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராஜா, குறித்த பகுதியை நானும் நேரில் சென்று பார்வையிட்டேன். இது தொடர்பில் நிரந்தரத் தீர்வு காண்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது. மேலும் ஆரம்ப காலத்தில் ஏற்பட்ட தவறின் காரணமாகவே தற்போதும் கழிவு ஒயில் நீருடன் கலக்கின்றது. எனவே கடந்த காலங்களில் யாழ்.குடாநாட்டுக்கு மின்சார விநியோகம் அவசரம் தேவை என்பதால், சில வேளைகளில் உரிய ஒழுங்கு முறைகள் செய்யப்படாமல் சுற்றாடல் பாதிப்புக்கள் கவனத்தில் கொள்ளப்படாமல் வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கக் கூடும்.

விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவிக்கையில், இது தொடர்பில் மத்திய அரசு பொறுப்புக் கூற வேண்டியுள்ளது. அவர்களே இதற்குப் பொறுப்பாளிகள். இலங்கை மின்சார சபை, மத்திய சுற்றுச் சூழல் அதிகார சபை என்பன மத்திய அரசுக்குரியது. நாமும் மேற்படி பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம்.

இதேவேளை இந்தப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்ப்பதற்கு இலங்கை மின்சார சபை நிரந்தரமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிடின் அவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்படும் - என்றார். (த-5)

### ஐ.நா. விசாரணை

அத்தோடு, "ஏனைய மாகாணங்களில் பெற்றுக்கொண்ட வெற்றிகளைப் போல செப்ரெம்பர் 20 ஆம் திகதி நடைபெறவுள்ள ஊவாத் தேர்தலிலும் அரசின் வெற்றி உறுதி" என்றும் குறிப் பிட்டார்.

இதன்போது, ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பான் கீ மூன் இலங்கை அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளமை குறித்து அமைச்சரிடம் ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பியபோது,

"இலங்கை அரசு சர்வதேச விசாரணைக் குறித்த முடிவில் எவ்வித மாற்றங்களையும் செய்துகொள்ளப் போவதில்லை என்பதில் தெளிவாக இருக்கின்றது" என அவர் பதிலளித்தார்.

அதேவேளை, ஐ.நா. விசாரணைக்குழு இலங்கைக்குள் வர நுழைவிசைவு வழங்கப்படமாட்டாது என்றும் அவர்களை நாட்டுக்குள் அனுமதிக்கப்போவதில்லை என்றும் கடந்த செவ்வாயன்று வெளிநாட்டுச் செய்திச் சேவை ஊடகவியலாளர்களிடம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திட்டவட்டமாகத் தெரிவித்தார். (ற)

### மாகாண

பேசிக் கொண்டிருக்கின்றார். ஏன் ஏனைய உறுப்பினர்கள் பேசுவதில்லை. எதிர்கட்சித் தலைவர், ஆளுங்கட்சியினரை கையாலாகதவர் என்று கிண்டல் செய்கின்றார். இவ்வாறு அவர் செய்வது ஏன் என்ற கேள்வி என்னுள் எழுகின்றது. அதனை இந்தக் கௌரவமான சபையில் கௌரவமான முறையில் முன்வைக்கின்றேன்.

இணக்கப்பாட்டு அரசியல் குறித்து நீங்கள் அதிகமாகப் பேசுகின்றீர்கள். இணக்கப்பாட்டுடன் செயற்பட வேண்டும். ஏனைய சமூகங்களோடு இணங்கி வாழ வேண்டும் என்ற வாதம் உங்களுக்குள் இருக்கின்றது. ஒரே இனத்தைச் சேர்ந்த - உங்களுடைய மற்றுமொரு சமூகத்தைச் சேர்ந்த, அரசியல் தரப்புடன் இணக்கப்பாட்டை நடத்திக்காட்ட முடியாத நீங்கள், எப்படி மாற்று இனத்துடன் இணக்கப்பாட்டை நடத்துவீர்கள் என்ற கேள்வியை எழுப்புகின்றேன்"- என்று அவர் அங்கு மேலும் தெரிவித்தார். (ற-5)

### சிங்களவரின்

அனைத்தும் மன்னிக்கக் கூடியது, நியாப்படுத்தக் கூடியது என்று கருதுகின்றனர். எதுவுமே நடக்கவில்லை என்று நினைக்கின்றனர்.

ராஜபக்ஷ அரசின் நிலைப்பாடு அதன் சிங்கள வாக்காளர்கள் மத்தியில் ஆதரவை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டது. உங்களது நாட்டின் இறைமை சர்வதேச சதியால் பாதிக்கப்படக் கூடிய ஆபத்துள்ளது என்று தெரிவிப்பதன் மூலமாக ஏனைய நாடுகள் குறித்து அச்சத்தை ஏற்படுத்தி உள்ளூர் செல்வாக்கை அதிகரிக்கும் முயற்சியே இது."- என்றும் ஜோன் சிவ்டன் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற)

### இனப்படுகொலை

தில் நேற்று நடைபெற்றது. அதன்போது ஆளுங்கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தால், "தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலைகளில் இருந்து பாதுகாக்க சர்வதேச பொறிமுறையை ஏற்படுத்துமாறு வேண்டுகோள்", "மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் தனது விசாரணைக் கால எல்லையை நீடிக்க வேண்டும் எனவும், இனப் படுகொலை உள்ளிட்ட சகல குற்றங்களையும் 1974 ஆம் ஆண்டிலிருந்து விசாரிக்க வேண்டும் எனவும் கோரிக்கை", "ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு இலங்கையிலோ அல்லது இந்தியாவிலோ விசாரணைகளை நடத்த அனுமதிக்க வேண்டும் என வேண்டுகோள்" என்ற மூன்று பிரேரணைகளை முன்மொழிந்திருந்தார்.

குறித்த பிரேரணைகள் வழிமொழியப்பட்ட பின்னர், அதன் மீதான விவாதம் இடம்பெற்றது. அப்போது வவுனியா மாவட்ட மாகாணசபை எதிர்க்கட்சி உறுப்பினர் ஜெயதிலக, இதில் அமிர்தலிங்கம், துரையப்பா, லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோர் கொல்லப்பட்டமை தொடர்பிலும் விசாரணை செய்ய வேண்டும் என்றும், பள்ளிகளில் முஸ்லிம்கள் கொல்லப்பட்டமை தொடர்பிலும் விசாரிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார். இதனைத் தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராஜா, இந்தப் பிரேரணை முற்று முழுதாக அரசியலமைப்பை மீறுகின்றது.

இதன் காரணமாக இந்தப் பிரேரணையை ஆதரிக்க முடியாது. எனவே எதிர்க்கட்சியினராகிய நாம் வெளிநடப்புச் செய்கின்றோம் என்று தெரிவித்து வெளியேறினார். இதன்போது எதிர்கட்சி வரிசையிலுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ரயீஸ் வெளியேறாமல் தொடர்ந்தும் இருந்தார்.

அதன் பின்னர் ஆளுங்கட்சி உறுப்பினர்களில் அஸ்மின், க.சர்வேஸ்வரன், கேசவன் சயந்தன் மற்றும் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் தற்போது இந்தப் பிரேரணை தேவைதானா என்றும், இராஜதந்திர ரீதியாக செயற்பட வேண்டிய நேரத்தில் இவ்வாறு முன்னெடுப்பது பொருத்தமானதுதானா என்று ஆராய வேண்டும் என்றும் குறிப்பிட்டனர்.

1974 ஆம் ஆண்டின் பின்னர் என்பது இந்திய இராணுவக் காலப் பகுதியும் இதில் உள்ளடங்கும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும் எனவும், கட்சித் தலைமையின் சம்மதத்தைப் பெற்ற பின்னர் தீர்மானம் குறித்து விவாதிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது. அத்துடன் ஐ.நா மனித உரிமை ஆணையாளர் அலுவலக, விசாரணை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அவர்கள் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் விசாரணையை முன்னெடுக்கின்றனர். எனவே அதில் எம்மால் மாற்றம் செய்ய முடியுமா என்பதையும் ஆராய வேண்டும் என்று குறிப்பிட்டனர்.

அதேவேளை, விந்தன் 'கனகரட்ணம், து.ரவிகரன், திருமதி அனந்தி சசிதரன் ஆகியோர் கொண்டு வரப்பட்ட பிரேரணை அவ்வாறே நிறைவேற்றப்பட வேண்டும் என்று வலியுறுத்தினர்.

இறுதியில் பிரேரணையைச் சமர்ப்பித்த ஆளுங்கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், தனது இரண்டாவது மற்றும் மூன்றாவது பிரேரணைகளை நீக்குவதாகவும், முதலாவது பிரேரணையில் மாற்றம் செய்து சமர்ப்பிப்பதாகவும் குறிப்பிட்டதை அடுத்து, இந்தப் பிரேரணை மீதான விசேட அமர்வு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 10 ஆம் திகதி இடம் பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-5)

# வவுனியா மாவட்ட மருத்துவமனைக்கு உபகரணம்


வவுனியா, ஓக.22
வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு வட மாகாண சுகாதார அமைச்சரால் அண்மையில் மருத்துவ உபகரணம் கையளிக்கப்பட்டது.

ஆஸ்திரேலியாவுக்கு அண்மையில் பயணம் மேற்கொண்ட சுகாதார அமைச்சர் வைத்தியகலாநிதி ப.சத்தியலிங்கம் அங்குள்ள இலங்கையைச் சேர்ந்த வைத்தியர்களை சந்தித்திருந்தார். இதன்போது அவர்களால் கையளிக்கப்பட்ட அவசர சிகிச்சைப் பிரிவில் பயன்படுத்தப்படும் பல்ஸ் ஒக்சி இயந்திரம் வவுனியா மாவட்ட மருத்துவமனையின் வைத்திய நிபுணர் பரமானந்தம் யோகானந்திடம் கையளிக்கப்பட்டது.

இந்தநிகழ்வில் மருத்துவமனையின் பணிப்பாளர் வைத்தியகலாநிதி கு.அகிலேந்திரன் மற்றும் வைத்திய நிபுணர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அதனைத்தொடர்ந்து மருத்துவமனையில் புதிதாக திறக்கப்படவுள்ள சிறுநீரக நோயாளிகளுக்கான இரத்த மாற்று சிகிச்சை நிலையத்தின் நிர்மாணப் பணிகளையும் அமைச்சர் பார்வையிட்டார். (வ-421)






## அனுமதி பெறாமல் மணல் ஏற்றிய மூவருக்கு அபராதம்

தென்மராட்சி,ஓக.22
வரணி இடைக்குறிச்சிப் பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி வாகனத்தில் மணல் ஏற்றிய மூவருக்கு தலா 50 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது எதிரிகள் மூவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து மூவருக்கும் தலா 50 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.



கோப்புப் படம்

இதேவேளை-கொடிகாமம் எழுவன் பகுதியில் கசிப்பு விற்பனை செய்த பெண்ணுக்கு ஒரு லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (வ-9)

# நடமாடும் மீன் விற்பனை கட்டுப்படுத்த நடவடிக்கை

## கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில்

கரணவாய்,ஓக.22
கரவெட்டிப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் நடமாடும் மீன் வியாபாரத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் பிரதேச சபை அலுவலர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் காணப்படும் சந்தைகள் அமைந்துள்ள இடங்களின் ஒரு கிலோ மீற்றர் சுற்றாடலுக்குள் நடமாடும் மீன் வியாபார நடவடிக்கைகளில் வியாபாரிகள் ஈடுபட பிரதேச சபை தடை விதித்துள்ளது.

குறித்த நடமாடும் வியாபாரத்தால் சந்தை மீன் வியாபாரிகள் பாதிக்கப்படுவதாக அங்கு வியாபார நடவடிக்கையில் ஈடுபடும் மீன் வியாபாரிகள் தெரிவித்ததை அடுத்தே இவ்வாறு நடமாடும் மீன் வியாபார நடவடிக்கை தடை செய்யப்பட்டதாகப் பிரதேச சபை அலுவலர் ஒருவர் தெரிவித்தார்.

இந்தச் சூழ்நிலையில் நட மாடும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவோரைத் தேடிப்பிடித்துக் கட்டுப்படுத்துவதுடன், மீறி விற்பனை செய்யும் மீனவர்களிடம் தண்டப் பணம் அறவிடுவதற்கான நடவடிக்கைகளும் பிரதேச சபையினரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக கரணவாய், இமையாணன், அண்ணா சிலை யடி உட்பட்ட பகுதிகளில் இவ்வாறு வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களை நேற்று பிரதேச சபை அலுவலர் ஒருவர் தடுத்து நிறுத்தினார். அப்போது குறித்த வியாபாரிகள் அவருடன் முரண்பட்டதையும் அவதானிக்க முடிந்தது. (வ-108)



காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயத்தில் அண்மையில் இடம்பெற்ற தேர்த் திருவிழாவில் ஐயனார் தேருக்கு எழுந்தருளி பல்லாயிரக்கணக்கான பத்தர்கள் புடைசூழ தேரில் வலம் வருகின்றார். (வ-250)

## புங்குடுதீவு மருத்துவமனைக்கு ஊடு கதிர்ப்படக்கருவி அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஓக.22
புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திரு.திருமதி கனகரட்ணம் கனகம்மா குடும்பம் சார்பாக சுவிற்ஸர்லாந்தில் வசிக்கும் அவர்களின் பிள்ளைகள் இணைந்து புங்குடுதீவு வைத்தியசாலைக்கு சுமார் 19 இலட்சம் ரூபா பெறுமதியான மருத்துவ ஊடு கதிர்ப்படக் கருவியொன்றை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

குறித்த உபகரணம் வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை மாலை 3.30மணியளவில் நடைபெற்றது. இதன்போது புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திரு.திருமதி கனகரத்தினம் கனகம்மா குடும்பத்தின் சார்பில் அவர்களின் இளைய மகன் ரகுநாதன் மற்றும் அவரது பாரியார் உஷா ரகுநாதன் ஆகியோரால் மருத்துவ ஊடு கதிர்ப்படக் கருவி நன்கொடையாக வழங்கப்பட்டது.



பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவவியல் நிபுணர் மருத்துவர் சரவணபவன் சிகிச்சைக்காகக் காத்திருந்த கர்ப்பணித் தாய்மார்களின் வைத்திய நடவடிக்கை கருதி குறிப்பிட்ட மருத்துவ ஊடு கதிர்ப் படக் கருவி மூலம் பரிசோதித்தார்.

இந்த நிகழ்வில் உயிரியல் வைத்தியப் பொறியியலாளர் திருமதி சாந்தி, சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் குணதாசன், மகப்பேற்று வைத்திய அதிகாரி மருத்துவர் குமாரவேல், பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவவியல் நிபுணர் மருத்துவர் சரவணபவன், புங்குடுதீவு வைத்தியசாலையின் மருத்துவப் பொறுப்பதிகாரி,

மருத்துவ தலைமைத் தாதி மற்றும் தாதிமார், கர்ப்பிணிப் பெண்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (வ)

# நல்லூர் ஆலய வெளிவீதியில் உலாவும் நாய்களைக் கவனிக்காத தொண்டர்கள்

யாழ்ப்பாணம், ஓக.22
நல்லூர்க் கந்தன் ஆலய வீதியில் 'சேர்ட்' அணிந்திருப்போரை சுவாமி வெளிவீதியுலா வரும் வேளையில் சுவாமி முன் நிற்கவிடாது ஓட ஓட விரட்டும் தொண்டர்கள், வீதியில் நின்று அட்டகாசம் செய்யும் நாய்களை விரட்ட மனமில்லாது செல்கின்றனர்.

ஆலய வீதியில் தினமும் பல நூற்றுக்கணக்கான அடியவர்கள் அங்கப் பிரதட்டை செய்வதுடன் மாலை வேளையில் ஆலய வெளி வீதியில் அமர்ந்திருந்து சுவாமி தரிசனத்துக்காகக் காத்திருக்கின்றனர்.

இத்தகைய இடத்தில் நாய்கள் தமது இஷ்டப்படி வெளி வீதியில் உள்ளமணலில் மலசலம் கழிப்பதுடன் உலாவித்திரிகின்றன.

இதனைக் கட்டுப்படுத்த நாய்களின் சொந்தக்காரர்களும் முன் வருவதில்லை; ஆலயச் சூழலிலிருந்து அவைகளை விரட்ட ஆலயத் தொண்டர்களும் கவனம் எடுப்பதில்லை; யாழ்ப்பாணம் மாநகர சபையின் சுகாதாரத் தொண்டர்கள் மற்றும் கடமையில் உள்ள பொலிஸார் கூட இந்த விடயத்தில் அக்கறை காட்டாத நிலையே காணப்படுகின்றது.

இது குறித்து ஆலயத்துக்கு வரும் அடியவர்கள் பலத்த விசனம் தெரிவிக்கின்றனர்.(வ-86)



# 157 தமிழ் அகதிகள் விவகாரத்தில் மனித உரிமை அமைப்புகள் தலையீடு

கொழும்பு, ஒக. 22

ஆஸ்திரேலியாவின் நவ்ரூவில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் 157 பேர் குறித்த வழக்கு விசாரணைகளில் ஐ.நா. அகதிகள் தூதரகமும், ஆஸ்திரேலிய மனித உரிமைகள் ஆணைக்குழுவும் தலையீடு செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை, இலங்கைத் தமிழ் அகதிகள் 157 பேரை ஆஸ்திரேலிய கடற்பகுதிக்கு வெளியே - ஆழ்கடலில் வைத்து ஆஸி. கைதுசெய்து தடுத்து வைத்திருக்கின்றமை சரியா, அதற்கான அதிகாரம் ஆஸ்திரேலியாவுக்கு உண்டா என்பது குறித்து அந்த நாட்டின் மேல் நீதிமன்றம் எதிர்வரும் ஒக்ரோபரில் விசாரணை நடத்துவதற்கான திகதிகளை நிர்ணயம் செய்திருப்பதாக அந்த நாட்டுப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்துள்ளன.

மேற்படி அகதிகள் சார்பில் சட்டத்தரணிகள் செய்த முறைப்பாட்டுமனுவை பரிசீலனைக்கு எடுத்த நீதிபதி கென்னத் ஹெயின், இதற்கான விசாரணையை கன்பராவில் இரண்டு நாள்கள் நடத்து வதற்கான திகதிகள் குறித்து ஒதுக்கியிருக்கின்றார்.

தற்போது ஆஸி. அரசுக்கு உள்ள கடல் எல்லைப் பாதுகாப்புத் தொடர் பான சட்டங்களின் கீழ் ஆழ்கடலில் வைத்து மேற்படி 157 புகலிடக் கோரிக் கையாளர்களின் கப்பலைத் தடுத்து வைக்கவும், அவர்களை ஆஸ்திரேலி யக் கப்பல் ஒன்றுக்கு மாற்றவும், ஆஸ்திரேலிய எல்லைக்கு அப்பாற்பட்ட கடலில் அவர்களைத் தடுத்து வைத்துக் கொண்டு அவர்களை நாடு கடத்துவதற்கான இந்திய உதவியைக் கோரு வதற்கும் ஆஸ்திரேலிய அரசுக்கு சட்ட ரீதியான அதிகாரம் உண்டா என்பது குறித்தே நீதிமன்றம் ஆராயவிருக்கின்றது.

இலங்கையிலிருந்து இந்தியாவுக்குத் தப்பியோடிய தமிழர்களே இவ் வாறு புகலிடக் கோரிக்கையாளர்களாக மாறும் நோக்குடன் ஆஸ்திரேலி யாவை நோக்கிப் பயணித்த சமயம் ஆழ்கடலில் வைத்து ஆஸ்திரேலிய அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். கப்பலிலிருந்து கோர்டின் தடுப்புக் காவல் மையத்துக்கு மாற்றப்பட்ட இந்த அகதிகள், இந்திய அதிகாரிகளைச் சந் திக்க மறுத்தமையை அடுத்து, நவ்ரூ தடுப்புக்காவல் முகாமுக்கு மாற்றப்பட்டி ருந்தனர்.



## மாகாணசபை அமர்வுக்கு சைக்கிளில் வந்தார் அனந்தி

யாழ்ப்பாணம், ஒக. 22

பாதுகாப்பு மற்றும் வாகன வசதி வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவித்து வடக்கு மாகாணசபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன், மாகாணசபை அமர்வுக்கு நேற்றையதினம் துவிச்சக்கர வண்டியில் வருகை தந்தார் என்று அவருக்கு மிகவும் நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

வடக்கு மாகாணசபையின் நேற்றைய அமர்வில் கலந்து கொள்வதற்காக, திருமதி அனந்தி சசிதரன் திடீரென துவிச்சக்கர வண்டியில் வருகை தந்தார். இது தொடர்பில் அவரின் நெருக்கமான வட்டாரங்களைத் தொடர்பு கொண்ட போது,

"அவருக்கான பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ளது. பலமுறை அதனை மீளப் பெற்றுத் தருமாறு அவர் கோரிய போதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அத்துடன் வாகன வசதியும் இதுவரை வழங்கப்படவில்லை.

மேலும் அமைச்சர்கள் பல கோடி ரூபாவைச் செலவு செய்து வாகனங்களைக் கொள்வனவு செய்துள்ளனர். ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒவ்வொரு வாகனத்தை உறுப்பினர்களுக்கு கொள்வனவு செய்து கொடுத்திருக்கலாம்" என்று அந்த நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன. (ற-5)

## மோசடி செய்தவர் மறியலில்

வெளிநாட்டில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாக நம்பிக்கை மோசடி செய்த கிளிநொச்சி நபர் ஒருவரை எதிர்வரும் 3ஆம் திகதி வரை விளக் கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதிபதி எம்.ஐ. வகாப்தீன் நேற்று உத்தரவிட் டுள்ளார்.

யாழ்ப்பாணம் உடுப்பிட்டியைச் சேர்ந்த நபர் ஒருவர் தன்னிடம் 6 லட்சம் ரூபா பணம் பெற்று நம்பிக்கை மோசடி செய்ததாக பொலிஸில் முறைப்பாடு செய்ததையடுத்து பொலிஸார் மேற்படி நபரைக் கைது செய்து நேற்று நீதிமன்றில் முன்னிலைப் படுத்திய போது நீதிபதி விளக் கமறியலுக்கு உத்தரவிட்டுள்ளார். நம்பிக்கை மோசடி செய்தவர் என குற் றஞ்சாட்டப் பட்டுள்ளவர் கிளிநொச்சி செல் வா நகர் கிராமத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-18)

## அடிக்கல் நடும் விழா

துணுக்காய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க அரைக்கும் ஆலைக்கான அடிக்கல் நடும் விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு துணுக்காய் கூட்டுறவுச் சங்கத்திற்கென ஒதுக்கப்பட்ட காணியில் நடைபெறவுள்ளது.

அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள 2 கோடி 20 லட்சம் ரூபா செலவில் சேவாலங்கா நிறுவனத்தினால் இந்த ஆலை நிறுவப்படவுள்ளது. சங்கத்தின் தலைவர் க.லோகநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் விருந்தினர்களாக அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனத்தின் தலைமை அதிகாரி எஸ். மாரின், துணுக்காய் பிரதேச செயலாளர் எஸ். குணபாலன், முல்லை மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் சி. பாலச்சந்தர் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (த-422)

### காணி விற்பனைக்கு

- சுன்னாகம் சந்தியிலிருந்து வடக்கு பக்கமாக K.K.S வீதியின் கிழக்கு பக்கத்திலிருக்கும் எரிபொருள் விற்பனை நிலையத்திற்குப் பின்புறமாக இரண்டாவது காணி 7 பரப்பு விற்பனைக்குண்டு.
- K.K.S வீதியில் எரிக்கணேஸ் கண்ணாடியகத்திற்கு அருகில் யூனியன் வங்கிக்கு முன்பாக 10 குழி காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு : 071 480 6309 (51045) (7.6.3)

### தவறிவிட்டது

யாழ்ப்பாணத்துக்கும் மானிப்பாய்க்கும் இடையில் (மானிப்பாய் வீதி ஊடாக) பயணப் பொதி ஒன்று தவறிவிட்டது. இதனை கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். கண்டெடுத்து தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும். (51153) (10)

தொடர்பு: 077 653 1160, 077 411 9222

### விற்பனையாகின்றன

தொகுப்பு: த.தவசேகர்

- A/L சகல பிரிவினருக்குமான பொதுச்சாதாரண பரீட்சை வழிகாட்டி
- ஜூன் 2014 வரையா பொது அறிவு விடயங்களை உள்ளடக்கியது
- SLAS வழிகாட்டி
- பொது உளச்சாரபு வழிகாட்டி
- பொது அறிவு 2014

பிரபல புத்தக நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாம்

### தேவை

யாழ் நகரிலுள்ள நிறுவனம் ஒன்றுக்கு Clerk -A/L சித்தி பெண்கள், பியோன்-8ஆம் தரம் சித்தி பெண்கள்.

தொடர்பு கொள்ளவும்: 021 499 3500 (51155) (10)

### கார் விற்பனைக்கு

வைத்தியரின் பாவனையிலுள்ள TN16 Nissan, 2005, Japan 72000 km, சாம்பல் நீலம்.
பார்வைக்கு: நல்லூர்க்கந்தன் வீதி, 25ஆம் திகதி வரை. (51142) (10)

தொடர்பு: Dr. திவ்வியன்
075 999 2027, 077 699 2027

### கணக்காய்வு அத்தியட்சகர்

தெரிவுப் பரீட்சைக்குரிய விசேட வகுப்புக்கள்

ஆரம்பம்
சனி (23.08)
மு.ப 10.00 - பி.ப. 2 மணி வரை

அடுத்தவாரம் முதல் ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 9 தொடக்கம் பி.ப 3 மணிவரை

T.P: 075 416 4564

யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புக்கள் பிரிவு
(யாழ்- ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)

### வகுப்புக்கள்

அபிவிருத்தி உத்தியோக சேவையிலுள்ள அலுவலர்க்கான வினைத்திறன் காண் தடைப் பரீட்சைக்கான (EB) வழிகாட்டல் வகுப்புக்கள்

ஆரம்பம் : 23.08.2014 2.00pm

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். (சி/16122) (7.6.3)

### BIT Semester 5, 3, 1 மற்றும் Project வகுப்புகள்

- 2007 இல் இருந்து Supervisor(60Projects)
- யாழில் 25 இற்கு மேற்பட்ட Software
- Windows and Web based Projects
- BIT மற்றும் ஏனைய IT Group classes
- 2013ல் VIVA சென்ற 7 பேர் Pass ஏனையோர் திருத்திய project

vb.net, php Java, C++ languages...

இல:28/23, மணல்தரை வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

By: T.Tharmmendra (BIT, MCSE, MBCS) 0779785796

All the BIT Classes starts on coming Saturday 23.08.2014- Confirm your classes

இதுவரை BIT Complete செய்தோர் (under my Supervision, Subject and Project classes)
P.Asoktha, J.Satheechan, P.Kobikrishna, N.Vipushany, R.Naresh, M.Kohulan, T.Logini, N.Sarathadevi, A.Thirumakal, Liyoni xavier, S.Vinotha, S.Gobikrishna, B.Suhirtha, V.jacitha, T.Sinthuja, K.Kalaivani, N.Aingaresan, R.Thiruchchenthooran, S.Mathusoothan, S.Balananthini, N.Kajan, T.Subaharan, T.Kowshika, S.Vasuthevan, P.Senthuja, S.Priyanka, .....(more than 25 students)

Sem 3- Starts on Fri 5pm , Sem 5-on sat 10.30 am & Weekdays batch(all subjects & Project)
Sem 1- Starts on 06.09.2014 sat 4pm ,Other IT classes are on weekdays from 4.30pm(01.09.14)
*** BIT Project Classes:Batch 1- Fri 7.30pm, Batch 2- Sat 5.30pm & Batch 3- Sat 4pm ***

### கொழும்பு - பளை இரவு ரயிலில் சொகுசு இணைப்புப் பெட்டியில் பயண சேவை



- 24/32 சொகுசு இருக்கைகளுடன், கண்ணைக் கவரும் உள்ளக வேலைப்பாடுகளுடன் இணைப்புப் பெட்டி
- குளிரூட்டப்பட்டது
- தாராள இடவசதி கொண்ட இருக்கைகள்
- இருக்கையுடன் வசதியான மேசை இணைப்பு
- பயணத்தின் போது இலவச இரவு உணவு
- கேட்கும் போதெல்லாம் இலவச தேநீர், கோப்பி, சுடுதண்ணீர்
- Bar வசதி
- அதிநவீன வசதிகளுடன் பிரத்தியேக மலசலகூடம்
- WIFI வசதி
- Pipe Music
- சதுரங்கம் போன்ற மேசை விளையாட்டுகள்
- நட்புணர்வுடன் பழகும் உதவியாளர்கள்
- யாழ். - விசேட பஸ் இணைப்பு சேவையுடன்

எதிர்வரும் 25.08.2014 திங்கள் முதல் ஆரம்பம்

**மனோஜ் எக்ஸ்பிரஸ் சேர்விஸஸ்**
JMC வர்த்தக மையம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு : 0777517019 / 0772293206
0772293208

யாழ். - கொழும்பு விமான சேவையைத் திறம்பட நீண்டகாலம் நடத்தி, பயணப் போக்குவரத்தில் குடாநாட்டு மக்களின் பங்காளியாகி, சாதனை படைத்த நமது நிறுவனம் ரயில்வே பயணத்திலும் புதிய சேவையின் தடத்தை ஆரம்பிக்கின்றது.

### மரண அறிவித்தல்



**திருமதி கமலினி பாலசிங்கம்**

அல்வாய் தெற்கைப் பிறப்பிடமாகவும், பழைய விதானையார் வளவு, பண்டகை உடுப்பிட்டியை வதிவிட மாகவும் கொண்ட திருமதி கமலினி பாலசிங்கம் நேற்று (21.08.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினம் - தங்கம்மா (செட்டியார் வளவு, அல்வாய் தெற்கு) தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற பாலசிங்கத்தின் அன்பு மனைவியும், தர்மபூபதி, மகேஸ்வரி காலஞ் சென்ற அருள்பிரகாசம், இராஜேஸ்வரி, காலஞ்சென்ற ஞானப்பிரகாசம், சோதிப்பிரகாசம் (நிறுவைகள், அளவைகள் பரிசோதகர், திருகோணமலை), ஞானேஸ்வரி ஆகியோரின் மூத்த சகோதரியும், கிருஷ்ணானந்தம் (முகாமைத்துவப் பணிப்பாளர், இலங்கை நூற்றல் நெய்தல் ஆலை, வல்லை, உடுப்பிட்டி), கிருஷ்ணகுமாரி (அரச முகாமைத்துவ உதவியாளர், இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு), கிருஷ்ணகுமார் (உப தபால் அதிபர், உடுப்பிட்டி), கமலகுமார் (உரிமையாளர், வெகா ஸ்பொட், குஞ்சர் கடை, கரணவாய்), கலைவாணி (ஆசிரியை, ராவத்தாவத்தை மெதடிஸ்த கல்லூரி, மொரட்டுவ), மதிவதனி (குழு அறிக்கையாளர், பாராளுமன்றம்), உமா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், Dr. அருந்தவராணி (ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர், மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), வ.சிவச்சந்திரதேவன் (முன்னாள் மக்கள் வங்கி அலுவலர் / தலைவர், வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்), மனோரஞ்சினி (ஆசிரியை, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி), மாலினி, புஸ்பகுமார் (உப பொலிஸ் பரிசோதகர், மாத்தறை), சூரியகுமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், கி.சமாஹிதன் (மாணவன், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி), கி.தர்ஜனீஹிதன் (மாணவன், கொக்குவில் இந்துக் கல்லூரி), சி.சஜிஷ்ணவன் (மாணவன், றோயல் கல்லூரி, கொழும்பு), சி.சுஹநிதன் (மாணவன், இந்துக்கல்லூரி, கொழும்பு), சி.ஸைந்தவி (மாணவி, இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு), சி.அபீஷ்டகன் (மாணவன், இந்துக்கல்லூரி, கொழும்பு), கி.ஹம்சப்பிரியா, கி.ராகவி (மாணவிகள், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), பு.இபவக்ஷன் (மாணவன், இந்துக்கல்லூரி, கொழும்பு), பு.வக்ஷாங்கிதன், சூ.சுபான்ஜன் (மாணவன், Morrish Public School, கனடா), சூ.பாகேஷன் (கனடா), சூ.ரிஷாபன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.08.2014) அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப.10.00 மணியளவில் வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இலக்ஷ்மி பவனம்,
பண்டகை, உடுப்பிட்டி.
தொ.பே. : 077 085 7510

(51143) (10)

தகவல் :
பிள்ளைகள், மருமக்கள்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.08.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.